உ

சிவமயம்

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டைப் பிராட்டியம்பதி

அருள்மிகு

ஞான வைரவ சுவாமி அந்தாதி

மூலமும் விளக்கவுரையும்

வெளியீடு

வட்டுக்கோட்டை

தமிழ் இலக்கிய மன்றம்

&

வட்டுக்கோட்டைப் பிராட்டி வளவு

ஞான வைரவ சுவாமி தேவத்தானம்

வெகுதானிய தை முதலாம் நாள்

(15-01-1999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண். கௌசிகம் 3ஆம் திருமுறை

பழக வல்லசிறுத் தொண்டர்பால் இன்னிசை
குழக ரென்றுகுழை யாஅழை யாவரும்
கழல்கொள் பாடலுடை யார்கரு காவூரெம்
அழகர் வண்ணம் அழ லும்அழல் வண்ணமே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டைப், புலவர்மணி

பண்டிதர்

திரு. க. மயில்வாகனனார்

இயற்றிய

அருள்மிகு

ஞான வைரவ சுவாமி அந்தாதி

மூலமும்

வட்டுக்கோட்டை,

இளைப்பாறிய அதிபர், தமிழறிஞர்

கலாபூஷணம்

திரு. அ. முருகவேள் அவர்கள்

இயற்றிய

விளக்கவுரையும்

வெளியீடு

வட்டுக்கோட்டை

தமிழ் இலக்கிய மன்றம்

&

வட்டுக்கோட்டைப் பிராட்டி வளவு

ஞான வைரவ சுவாமி தேவத்தானம்

வெகுதானிய தை முதலாம் நாள்

(15-01-1999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்:- வட்டுக்கோட்டைப் பிராட்டியம்பதி
அருள்மிகு ஞான வைரவ சுவாமி
அந்தாதி.

நூலாசிரியர்:- புலவர்மணி, பண்டிதர்
க. மயில்வாகனனார், அவர்கள்
வட்டுக்கோட்டை.

உரையாசிரியர்;- தமிழறிஞர், காலபூஷணம்
அ. முருகவேள், அவர்கள்,
வட்டுக்கோட்டை.

காலம்:- வெகுதானிய தை முதலாம் நாள்
15 — 01 — 1999

பதிப்புரிமை:- வட்டுக்கோட்டை
C திரு. அ. முருகவேள்

பிரதிகள்:- 300

விலை:- 75/-

வெளியீடு:— தமிழ் இலக்கிய மன்றம்,
பிராட்டி வளவு ஞான வைரவர்
சுவாமி தேவத்தானம்
வட்டுக்கோட்டை.

அச்சுப்பதிவு:- கற்பக விநாயகர் அச்சகம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவ சுவாமி வழிபாடு

நாம் சைவ சமயத்தவர்கள்; சைவம் சிவத்துடன் சம்பந்தம் உடையது. சிவம் என்பதற்கு, அன்பு, நன்மை மங்கலம் முதலிய பல பல பொருள்கள் உண்டு. சிவனை அருவம், உருவம், அருவுருவம் முதலிய நிலைகளில் வைத்து வழிபடுகின்றோம். ஆயிரம் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி வாழ்த்துகின்றோம். அவன் அருள் வழியில் வாழ்கின்றோம். ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்பது ஆப்த வாக்கியம்.

சிவனுடைய வல்லமை, சத்தி என்று வழங்கப்படுகின்றது. உமாதேவியார், சிவபெருமானுடைய சத்தியாவார். மேலும், விநாயகர், முருகன், வீரபத்திரர், வைரவர் முதலியவர்களும் சிவபெருமானுடைய சத்திகளே! அவர்களைச் சிவகுமாரர் என்று வழங்குதல் சைவமரபு. சிவபெருமான், ஆன்மகோடிகளின் ஈடேற்றம் குறித்துப் பல பல வடிவங்களை எடுத்தருளுகின்றார். எல்லா வழிபாடுகளும் சிவனையே சென்றடைகின்றன.

''யாதொரு தெய்வங் கொண்டீர் அந்தெய்வமாகிய ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்''

என்று சிவஞான சித்தியாரும்,

''ஓவாதே எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்''

என்று திருக்கயிலாய ஞான உலாவும்,

''யாதொரு பொருளை யாவர் இறைஞ்சிடினும் அதுபோய்
மூக்கண் மூர்த்தியை அடையும் அம்மா''

என்று கந்த புராணமும் குறிப்பிடுகின்றன.

நமது நாடு, ஏறத்தாழ 500 ஆண்டு காலம் ஐரோப்பிய நாட்டினரான, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், முதலியவர்களது, ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சைவசமயத்தின் கருவூலகமாக, விளங்கும் சைவாலயங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்டன; இடித்து அழிக்கப்பட்டன. எனினும் சைவ வழிபாடு மறைமுகமாக நடைபெற்று வந்தது.

சிவவழி பாட்டிற்குத் திரிசூலம் கைகொடுத்தது. அது முத்தலை வேல் என்று மொழியவும் படும். திரிசூலம் சிவனாரின் திருக்கரத்தில் இருப்பதாகும்.

''வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்'' எனவும் ''சூலப்படையொன்று ஏந்தி'' எனவும் ''விரித்தபல் கதிர் கொள் சூலம்'' எனவும் மேலும் பலவாறும் தேவாரத் திருமுறைகளில் திரிசூலம் புகழப்படுகின்றது. அது சிவகுமாரராகிய வைரவசுவாமியின் திருக்கரத்திலும் உள்ளது. திரிசூல வழிபாட்டிலிருந்து வைரவர் வழிபாடு கால்கொண்டுளது எனலாம்.

சைவசித்தாந்தத் திருநெறி சமயங்களைப் புறச்சமயம், புறப்புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என நான்காக வகுத்துக் காட்டும். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாத சைவம் என்பன. அகப்புறச்சமயத்தின் பாற்படும். இவருள் பாசுபதர், மாவிரதர், காபாலர் வாமமதத்தார், வைரவ மதத்தார் முதலிய ஐவரும் வேத சிவாகமங்களைப் பொதுவகையாற்கொள்வர்.

வைரவ மதம் பெரும்பாலும் வாம மதத்தேடு ஒத்துச் சிறுபான்மை ஆசாரங்களால் வேறுபட்டு நிற்கும். வைரவரே பரம் பொருள் என்றும், வைரவ பதத்திற் சேர்வதே முத்தியென்றும் மொழியும்.

கந்தபுராணத்தில் வைரவ சுவாமியின் பிரபாவம்கூறப் படுகின்றது. அதனைச் சுருக்கமாக இங்குக் காண்போம். திருமாலும் பிரமதேவரும் ஒரு சமயம் மேருகிரிச் சிகரத்தே அமர்ந்திருந்தனர். அமரர்களும் முனிவர்களும் ஆங்குச் சென்றிருந்தனர். அவர்கள் பரம்பொருளாகிநின்ற தலைவர் யாரென்று வினவினர் பிரமனும் திருமாலும் தாந்தாமே பரம் பொருள் எனக், கூறித் தருக்கமிட்டு மலைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கு வேதமும் பிரணவ மந்திரமும் உருவந் தாங்கி வந்து, நீவிர் வாதமிடல் வேண்டா ''யார்க்கும் தாதையாம் சிவனே வாய்மைத் தற்பரன்'' என்று மொழிந்தன. ஆனால் பிரமனும் திருமாலும் அமைதி அடையாது போர்புரிந்தனர். அந்த வேளையில் அங்குப் பெருஞ்சோதி தோன்றியது. திருமால் உளந்தெளிந்து அச்சோதி, சிவம் என்று உணர்ந்து வழிபட்டுச் சென்றார்.

பிரமன் மாயையால் மருண்டு, உச்சியில், உள்ள சென்னியால், அச்சோதியை இகழ்ந்தான். அப்போது சிவபிரான், திருவுள்ளத்தில் இருந்து வைரவக்கடவுளைத் தோற்றுவித்தார்.

அவர் திருமேனி செந்தீச் சுடரை ஒத்திருந்தது. திருத் தாள்களில் சிலம்புகள் ஒலித்தன, நஞ்சு கக்கும் அரவத்தை அரை ஞாணாக அணிந்திருந்தார். அனந்த கோடி தலைமாலைகள் தொங்கின. விசாலமான மார்பை உடைய அவர், திருத்தோள்களில், சூலகபால பாசம் துடி என்பன துலங்கின, திரிநேத்திரமும் பிறைச் சந்திரன் போன்ற வக்கிர தந்தங்களும் கொண்டிருந்தார். செந்தீ அனைய திருச்சடை திகழ்ந்தது, அஞ்சத்தகு வடிவு கொண்டிருந்தார். அக்காட்சியைக் கச்சியப்ப சுவாமிகள் பின் வருமாறு பாடுகின்றார்.

நீறு சுடரின் மெய்யும் ஞெகிழிகள் அரற்றும் தாளும்
ஆலம துயிர்க்குஞ் செங்கேழ் அரவவெற் றரையுஞ் சென்னி
மாலைகள் அநந்த கோடி வயின்வயின் பெயரும் மார்பும்
சூலமும் பரசும் நாணும் துடியுமேந் தியபொற் றோளும்

முக்கணும் திங்களேபோல் முளைத்தவா ளெயிறும் வன்னிச்
செக்கரஞ் சடையின் சீரும் செயிர்கெழு நகையுமாக
உக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் தன்னை
மைக்கிளர்கண்டத் தெந்தை நோக்கியே வகுத்துச்சொல்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனம் தோன்றியருளிய வைரவமூர்த்தி, சிவ சோதியை இகழ்ந்த பிரம தேவரின் உச்சிச் சிரத்தை நகத்தாற் கிள்ளினார்; கையில் ஏந்தியருளினார், அக்க பாலத்தில் திருமால், இந்திரன் முதலிய அனைத்து இமைய வர்களின் உதிரத்தையும் பலியாக ஏற்றருளினார். பின்னர் பிரமன் வைரவரைத் தொழுது வாழ்வு பெற்றான்.

வைரவப்பெருமான், வைரவபுவனத்திலே கணங்கள் சூழ, அமர்ந்தருளி, அருளாட்சி புரிகின்றார். புவனங்களும் உயிர்களும் அழிவுறுங் காலத்தில் வேதமாகிய ஞாளியில் அமர்ந்து எங்கணும் வலம் வந்தருளுவார். பெரிய புரா ணத்தே சிவபெருமான் வைரவக் கோலத்துடன் சிறுத் தொண்டநாயனார் இல்லத்துக்குச் சென்றமை பேசப்படு கின்றது. வாமனனின் செருக்கினை அடக்கியருளியவரும் வைரவ மூர்த்தியே! சிவைராக்கிரமம் என்னும் திப்பியமான நூல், வைரவமூர்த்தத்தைச் சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்கனுள் ஒன்றாகக் கூறும்.

வைரவர், அடியார்களை ஆபத்தில் இருந்து காத்தருளு கின்றார். அதனால் அவர் ஆபத்தரட்சகர் என்று கூறப் படுகின்றார். மேலும் இவர், இரத்த பிக்ஷாதானர், பிரும்ம சிரச்சேதனர் முதலிய பெயர்களாலும் அழைக்கப் படுகின்றார்.

இவர் மக்களுக்கு இகவாழ் விற்குரிய பொன் பொருள் போகம் முதலியவற்றை நல்குகின்றார். இவர், கிராமங் களையும் வயல்களையும் நகரங்களையும், கோவில்களை யும் இல்லங்களையும், எல்லாம் காத்தருளுகிறார். அதனால் க்ஷேத்ரபாலன் என்று யாவரும் அவரைத்தொழுகின்றனர் இவரின் திருவருட் சத்தி சாமுண்டேஸ்வரி தேவியாராவர்.

வற்றா அருள்சுரக்கும் வைரவ மூர்த்தியவர்
நற்றாள் தொழுமின் நயந்து.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்பின் கொள்கலமாய் அமரராகிவிட்ட

அ. துரைராசசிங்கம் அவர்கள்

ஏரார் வயிரவர்
இணையடி மறவாச்
சீரார் துரைராச
சிங்கனார்க்(கு) இந்நூல்
நீங்கா நினைவாய்
நிலவுக மன்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

வட்டுக்கோட்டைப் பிராட்டியயப்பதி, ஞானவைரவ சுவாமி ஆலயம் வரலாற்றுப் பழைமை மிக்கது. அமரராகி விட்ட, அ. துரைராசசிங்கம் அவர்கள், இலங்கைச் சிறைச் சாலைகள் திணைக்களத்தில் உயர்பதவி வகித்தவர். ஞான வைரவ சுவாமியின் பழவடியார்களுள் ஒருவர். ஞான வைரவ சுவாமி தேவத்தானத்துடன் மிகவும் இறுக்கமான தொடர்பு கொண்டவர்.

அவர் அறுபது ஆண்டுகளின் முன், எங்களூர்ப்பண்டிதர் க. மயில்வாகனன் அவர்களை அணுகிப் பிராட்டி வளவு ஞான வைரவ சுவாமி அந்தாதியைப் பாடுவித்திருந்தார், அவ்வந்தாதி கையெழுத்துப் பிரதி வடிவிலேயே இருந்தது. அந்நூல், அரை நூற்றாண்டுக்கு மேலாகப் பூசை வழிபாடுகளின் போது பாராயணம் செய்யப்படும் வழக்கத்தையும் கொண்டிருந்தது.

அமரர் துரைராசசிங்கம் அவர்களின் குமாரர் திரு து. நிர்மலசிங்கம் நூலை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று பெரிதும் விழைந்தார்.

தமது எண்ணத்தைச் சிறிய தந்தையார், இளைப்பாறிய அதிபர், தமிழறிஞர், கலாபூஷணம். திரு அ. முருகவேள் அவர்களிடம் விண்ணப்பித்திருந்தார்.

நல்லோர் பலரும், அவ்வந்தாதி நூலுக்கு ஓர் உரை இருத்தல் அவசியம் எனக் கூறினர். மிகச்சுருக்க மான முறையில் திரு முருகவேள் அவர்கள் ஒருவிளக்க உரையை எழுதி உதவினார்கள்.

நூல் உரையுடன் வெளிவருவதில் வட்டுக்கோட்டை இலக்கிய மன்றப் பொருளாளரும், தமிழார் வலரும் வ. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ.ச, முதுநிலை விதிப்பரிசோதகரும் ஆகிய திரு நா. புவனசுந்தரம் அவர்கள் உந்து விசையாக இருந்தனர்.

ஞானவைரவர் அந்தாதியை உரையுடன் வெளியிட்டு வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். அன்பர்கள் அனைவரும் இதனைப் பெற்றுப்படித்துப் பயன் பெற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம் ஞானவைரவ சுவாமி நல்லருள் பாலிப்பாராக. வணக்கம்.

வட்டுக்கோட்டைத் தமிழ் இலக்கிய மன்றத்தார்
வட்டுக்கோட்டைப் பிராட்டி வளவு
ஞானவைரவ சுவாமி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

ஞான வைரவ சுவாமி அந்தாதி என்னும் இந்நூல் வட்டுக்கோட்டையூர்ப் பண்டிதர் திரு க. மயில்வாகன னாரால், அறுபது ஆண்டுகளுக்கு முன்பு யாக்கப்பட்டது. அவர் இந் நூலன்றி வேறும் பல செய்யுள் நூல்களும் உரை நடை நூல்களும் இயற்றியுள்ளார்.

அந்தாதி என்பது அந்தம் - இறுதி, ஆதி - முதலாகத் தொடுக்கப்படுவதாகும். அஃது இருபாற்படும். பலவடி களால் ஆய செய்யுள் இடத்து வருவது ஒன்று, மற்றது பல செய்யுள்களாலாய நூல்களிடத்து வருவது.

செய்யுளின் முதலடியின் ஈற்றிலுள்ள, எழுத்து, அசை சீர் இவற்றில் ஒன்று வருமடியின் முதற்கண் வரும்வழி, அந்தாதித் தொடை எனப்படும்.

நூல்களின் முதற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து அசை, சீர், அடி இவற்றில் ஒன்று அடுத்துவரும் செய்யுளின் முதற்கண் வருவழி, அந்தாதித் தொடர்நிலை எனப்படும். மேலும் அந்தாதித் தொகை என்று கூறப்படுவதும் உண்டு.

இனி, இறுதிப்பாடலின் இறுதியும், முதற்பாடலின் முதலும், ஒன்றாக இணையும் படி மண்டலித்து மாலை போல் தொடுத்து முடிக்கப் படுவதும் உண்டு. மண்டலித் தல் - வட்டமிடல், இந்நூலின் முதற் செய்யுளின் மணி யென்னும் முதற் சொல்லும், இறுதிப்பாடலின் உள்ள இறுதிச் சொல்லும் ''மணியே'' என்று முடிந்தவாறு காண்க.

ஆசிரியர் தொல்காப்பியர் அந்தாதி இலக்கியத்தைச் செய்யுளுக்குரிய வனப்பு எட்டனுள் ஒன்றாய விருந்து என் பதனுள் அடக்கியுளதாகக் கற்றறிந்தோர் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் கி. பி. 5ஆம் நூற்றாண்டினர் என்று கருதப்படுகின்றார். அவர்காலத்திலேயே அந்தாதி நூல்தனி வடிவம் பெற்றுவிட்டது எனலாம். தமிழ் மொழியில் தோன்றிய அந்தாதி இலக்கியங்கள் சைவ, வைணவ இஸ்லாமிய கிறீத்தவ சமயச் சார்புடையனவாக விளங்குகின்றன.

இத்துறையில் தாய்த் தமிழகத்துப் புலவோரை ஒப்ப ஈழத்துப் புலவோரும் மகத்தானபணியை இயற்றியுளனர். இன்றுவரைத் தோன்றிய அந்தாதி நூல்களின் எண்ணிக்கை மிகவும் பரந்து பட்டது.

ஞானவைரவர் அந்தாதியை உரையுடன் வெளியிட வேண்டும் எனப்பலரும் வேண்டிக் கொண்டனர். என் நண்பர் திரு நா. புவனசுந்தரம் அவர்கள் என்னைப் பெரிதும் வற்புறுத்தினார்கள். உரையுடன் வெளியிடுவது எனமுடிவு செய்தோம். சுருக்கமான எளிமையான முறையில் பதவுரையும் விளக்கக் குறிப்பும் எழுதினேன்.

நூலாசிரியர், மேலும் சிலகுறிப்புக்களைக் கூறி உதவினார்கள். அவற்றையும் சேர்த்துக் கொண்டேன் மேலும் பலருக்கும் பயன்படும் வகையில் வைரவர் வழிபாடு குறித்துச் சிறிது விளக்கமும் சேர்த்துள்ளேன்.

அந்தாதி நூல்களை வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி முதற் பலவாக வகுப்பர். இந்நூல் கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்துள்ளது.

சுருங்கக் கூறுமிடத்துப் பாடல்கள் பயிலும் தமிழால் அமைந்திருக்கக் காணலாம், சொற் செறிவு, தெளிவு. சமநிலை இன்பம், ஒழுகிசை முதலிய குணங்களும் உவமை உருவகம்முதலிய பொருளணிகளும் ஆங்காங்கு அமைந்துள்ளன. அவற்றையெல்லாம். எடுத்துக்காட்டுக்களுடன் கூறுமிடத்து முன்னுரை பரந்துபட்டுச் செல்லும் என எண்ணுகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் அறங்காவலர், அந்தாதி நூல் உரையுடன் வர உறுதுணை புரிந்ததுடன் ஆசி உரையும் தந்துதவினார். மேலும் எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவரும் அடக்கத்தை அணிகலமாகக் கொண்டவரும்' முதுபெரும் தமிழறிஞரும், காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழக நிறுவுநருமாகிய பண்டிதர் சிவத் திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் ஆசியுரை நல்கினார்கள் இங்கே குறிப்பிட்ட அனைவர்க்கும் என் அன்புநிறைந்த வணக்கத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலைப் பெற்றுப் படித்துப் பயன் பெற இருக்கும் மெய்யன்பர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வைரவப் பெருமான் இன்னருள் பாலிப்பாராக. வாழிய தமிழ் வளர்க சைவம்.

அன்புடன் **அ. முருகவேள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டைப் பிராட்டிவளவு அருள்மிகு ஞான வைரவசுவாமி தேவத்தான முதல்வர்

ஆசியுரை

பண்டுதொட்டு எங்கள் மரபினர் பிராட்டிவளவு ஞான வைரவப் பெருமானுக்குப் பூசைவழிபாடியற்றித் தாம் விரும்பிய நற்பேறுகளைப் பெற்று இனிதுவாழ்ந்து வந்தனர். அவர்வழியில் வந்த நாம் தோன்றாத் துணையாக இருந்து அருள் புரிந்து வரும் எம்பெருமானின் நித்திய நைமித்திகங்களில் ஏதும் தவறுகள் ஏற்படா வண்ணம் இயன்றளவு தொண்டாற்றி வருகின்றோம்.

ஞானவைரவர் அந்தாதி நாம் பிறப்பதற்கு முன்னேயே பிறந்து விட்டது. அதனை எங்கள் அருமை அத்தான் அமரராகிவிட்ட அ. துரைராசசிங்கம் அவர்கள் பேணிப் பாதுகாத்துவந்தார்கள். பண்டிதர் புலவர்மணி திரு க. மயில்வாகனனார் அவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் இன்று உரையுடன் வெளிவருகின்றது.

அமரர் அ. துரைராசசிங்கம் அவர்கள் பேணிக்காத்த அவ்வந்தாதி நூல்இன்று அவர் உடன்பிறப்பு; கலாபூஷணம் தமிழறிஞர் திரு. அ. முருகவேள் அவர்கள் எழுதிய உரையுடன் அச்சேறியுள்ளது. மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அச்சுத்தாள் கூலி, முதலியனவெல்லாம் அதிக உச்சக் கட்டநிலையில் இருக்கும் இந்நாளில் நூலை எவ்வாறேனும் அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று முன்வந்த அமரர் அ. துரைராசசிங்கம் அவர்கள் புதல்வர் ! என் மருகர் திரு. நிர்மலசிங்கம் அவர்கள் பாராட்டுக்குரியவர் ஆவர்.

நூலாசிரியருக்கும் உரையாசிரியருக்கும் யாழ் கற்பக விநாயகர் அச்சகத்தாருக்கும் நன்றி கூறும் இவ்வேளையில் அன்பர்கள் அனைவரும் நூலைப்பெற்றுப் படித்து பயன் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஞான வைரவ சுவாமிகளின் திருவடிகளை வேண்டுகின்றேன்.

பி. வைரவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மூதறிஞர் பண்டிதர்

சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள்

வழங்கிய

ஆசியுரை

வட்டுக்கோட்டைப் பிட்டியம்பதி வைரவர் சுவாமி அந்தாதி நூலையும் உரையையும் படித்துப் பார்த்தேன். புலவர் மணி க மயில்வாகனனார் அவர்கள் இயற்றிய நூலுக்குத் தமிழறிஞரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய கலாபூஷணம் திரு. அ. முருகவேள் அவர்கள் உரை எழுதியிருக்கிறார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இவ்வந்தாதி தமிழில் வழங்கும் சிறந்த அந்தாதிகளுடன் வைத்து எண்ணும் தகுதி வாய்ந்தது. உரை தெளிவாகவும் விளக்கமாகவும் அமைந்துள்ளது. உரையாசிரியர் தேவையான இடங்களில் தமிழ் இலக்கியங்களிலிருந்து வேண்டிய ஒப்புமைப்பகுதிகளைத் தந்திருப்பது தமிழ் இலக்கிய நூல்களில் அவருக்குள்ள ஆழ்ந்த புலமையைப் புலப்படுத்துகின்றது.

பதசாரம் கூறிச்செல்வது பயனுடையதாகக் காணப்படுகின்றது. பழைமரபுகள் அருகிக்கொண்டுவரும் இக்காலத்தில் ஞானவைரவர் சுவாமி அந்தாதி உரையானது அம்மரபுகளைப் பேணும் வகையில் அமைந்திருப்பது சீரிய முயற்சியாகும். பாராட்டப்படவேண்டியதுமாகும்.

மரபுவழிச் செய்யுள் இலக்கியங்கள் முற்றாக அருகிவரும் இக்காலத்தில் கலாபூஷணம் அ. முருகவேள் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் எதிர்நீச்சலடித்து முன்னின்று கைகொடுத்துப் போற்றுவது தமிழ் அன்னைக்குச் செய்யும் மகத்தான தொண்டாகும்.

நூலாசிரியரும் உரையாசிரியரும் மேன்மேலும் இவ்வகையிலான பணிகளில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழன்பர்கள் இத்தகைய நூல்கள் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் நல்கவேண்டுவது அவர்களின் தலையான கடனாகும்.

இந்நூல் வெளியீட்டுடன் தொடர்புடைய அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்பான ஆசியைக் கூறி அமைகின்றேன்.

காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக்கழகம்
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஞானவைரவ சுவாமி துணை

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டைப் பிராட்டியம்பதி

ஞான வைரவ சுவாமி அந்தாதி

காப்பு

(ஐங்கரனே அந்தாதி மாலை சூட்ட அருள்)

திருமலி கொன்றைச் சடையான்
உமையொடும் தந்தவெந்தாய்
உருமலி மும்மத நால்வாய்கொள்
ஐங்கரத் துத்தமனே
தருமலி வட்டூர்ப் பிராட்டி
வயிரவன் றாளிணைமேல்
மருமலி சொன்மலர் அந்தாதி
சூட்ட மகிழ்ந்தருளே.

(பதவுரை)

திருமலி கொன்றைச் சடையான் = அழகு விளங்கும் கொன்றை மாலையைத் திருச்சடையில் அணிந்த சிவபிரான்; உமையொடும் தந்த எந்தாய் = உமாதேவியாருடன் ஈன்றருளிய எமது தலைவரே!; உருமலி மும்மத நால்வாய் கொள் ஐங்கரத்து உத்தமனே = அச்சம் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மதங்களையும், துதிக்கையையும் கொண்ட பரம் பொருளே!; தருமலி வட்டூர்ப் பிராட்டி வயிரவன் தாள் இணைமேல் = பயன்தரும் மரங்கள் நிறைந்த வட்டுக் கோட்டைப் பிராட்டியம்பதியில் கோயில் கொண்ட வைர வப்பெருமானின் திருவடிகள் மீது; மருமலி சொன்மலர் அந்தாதி சூட்ட = மணங்கமழும் நறுமலர் அனைய தீந் தமிழ்ச் சொற்கள் கொண்டு புனையப்பட்ட அந்தாதி மாலையை அணிவிக்க, மகிழ்ந்து அருள் = மகிழ்ந்து திரு வருள் புரியும் (என்றவாறு)

எந்தாய், உத்தமனே, வைரவன்தாள் இணைமேல் அந்தாதி சூட்ட மகிழ்ந்து அருள் என்று இயைக்க. நூலின் தொடக்கத்தில் மங்கலச் சொல் பயின்று வருதல் மரபா தலின் திருவை முதற்கண் வைத்தார் சிவனும் விநாய கரும் வேறல்லர் ஒருவரே! ஞானவடிவினரே! விநாயகரைச் சிவனின் திருக்குமாரராகக் கொள்ளுவது சைவமரபு. மும்ம தங்கள் கன்னமதம் கபோலமதம் பீசமதம் என்பனவாம். துதிக்கை, தூங்குநல் குறித்து நால்வாய் எனப்படும். ''தூங்குகையான் ஓங்கு நடைய'' என்று கூறப்படுதல் காண்க. மரு,சாதி அடை. தாளிணை என்பதனை இணைத் தாள் என்று மாற்றுக. உரு ''உட்கு'' என்னும் பொருளது, அது அச்சத்தைக் குறிக்கும் அந்தாதி என்பது அந்தம் ஆதி யாய் வரத்தொடுப்பது. அது ஒரு பாட்டின் ஈற்றடியில் உள்ள சொற்றொடரோ சொல்லோ எழுத்தோ அடுத்த பாடலில் முதலடியில் வரச்செய்யப்படுவதாம் அந்தாதி 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. வைரவன் என்பதை வயிரவன் என்றும்வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நூல் -

(பாதமலர் சென்னி கொண்டவர்க்குத் துன்பமில்லை)

1 மணிகொண்ட கண்டனை மாமலர்
தூவி வணங்கிநிதம்
திணிகொண்ட சிந்தையர் வாழ்தரு
வட்டூர் திகழ்கடவுள்
பணிகொண்ட பூண்புனை வைரவ
நாதனின் பாதமலர்
அணிகொண்ட சென்னியர்க்
காவதுண்டோ வினித்துன்பமதே

மணிகொண்ட கண்டனை = திருநீலகண்டராகிய சிவ பிரானாரை; நிதம் மாமலர் தூவி வணங்கி = நித்தலும் சிறந்த மலர்களைச் சொரிந்து தலைதாழ்த்தி வணங்கி; திணிகொண்ட சிந்தையர் = திடங்கொண்ட மனத்தினர்; வாழ்தரு வட்டூர் = வதியும் வட்டுக்கோட்டையூரில்; திகழ் கடவுள் = விளங்கும் தேவதேவன்; பணிகொண்ட பூண் புனை வைரவநாதனின் = தொழில் நுட்பஞ் சான்ற அணி கலங்களை அணிந்த ஞானவைரவராகிய தலைவரின்; பாதமலர் = திருவடித் தாமரையாகிய பூக்களை; அணி கொண்ட சென்னியர் = தமது சிரசின்கண் அணிகலமாகச் சூட்டிக் கொண்ட மெய்யடியார்களுக்கு; இனி துன்பம் ஆவது உண்டோ? = இனி உலகத் துன்பங்களும், பிறவித் துன்பங்களும் வந்து எய்துவது இல்லையாம் (எ - று)

இங்கும் மணி என்பது மங்கலச் சொல், வணங்கிநிதம் என்பதனை நிதமும் வணங்கி என மாற்றுக. திணிஎன்பது திணிவு இறுக்கம்; ஈண்டு திடமான சஞ்சலம் அற்ற என்ற படி திடசித்தம் என்னும் உலக வழக்கும் நோக்குக. பணி கொண்டபூண் என்பதனைப் பூண்பணி கொண்ட என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிப் பூணாகச் சர்ப்பாபரணத்தைக் கொண்ட என்று பொருள் கொள்ளலாம். இறுதி அடியை இனித்துன்பம் ஆவது உண்டோ என இயைக்க பாதமலர் பாதமாகிய மலர். மலர்ப் பாதமுமாம். 1

(நெஞ்சே வைரவ மூர்த்தியை ஏத்தியிரு)

2 துன்பே யகற்றியெந் தீவினை
போக்கித் துணிவினொடும்
இன்பே தரும்பரன் வைரவமூர்த்தி
இசைமிகுத்தோன்
அன்பே சொரிந்துயர் வட்டூரமர்ந்தன
னாங்கவனை
என்பே நெகிழ்ந்திட முப்பொழு
தேத்தி இருத்திநெஞ்சே.

(ப — ரை)

நெஞ்சே = சஞ்சலப்படும் எனது மனமே; பரன் = மேலோன்; இசைமிகுத்தோன் = பெரும் புகழாளர்; வைரவ மூர்த்தி = வைரவக்கடவுள்; துன்பே அகற்றி = எமக்கு வந்தெய்தும் துன்பங்களை நீக்கி அருளி; துணிவினோடும் இன்பே தரும் = நிச்சயமாக இம்மையில் உலக இன்பங்களை யும் மறுமையியில்: வீட்டு இன்பத்தையும் தந்தருளுவார்; அன்பே சொரிந்து = மக்களிடத்தன்றி ஏனைய உயிர்களி டத்தும் அன்பு பாலித்து அதனால்; உயர் வட்டூர் = உயர்ந்த நன்மக்கள் வாழும் வட்டுக்கோட்டையூரில் அமர்ந்தனன் = விரும்பி உறைந்தார்; அவனை ஆங்கு = அத்தனிப் பெரும் தெய்வத்தை அத்திருப்பதிக்கண்; முப்பொழுது = தினமும் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும்; என்பு நைந்திட ஏத்தி இருத்தி = என்பும் உருகும்படி பணிந்து அறத்தின் வழி வாழ்வாயாக. (எ - று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சே, பரன் வைரவமூர்த்தி இசை மிருந்தோன் வட்டூர் அமர்ந்தனன். முப்பொழுதும் ஏத்தி இருத்தி என்று கூட்டுக. துன்பு: தெய்வங்களால், பூதங்களால், மனிதர்களால் வருவன. இன்பு: இம்மை மறுமை இன்பங்கள். அமர்தல் விரும்பி உறைதல். திருவருட்சான்றோர் ''என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி அன்பெனும் ஆறு கரையது புரள'' தொழ வேண்டும் என்று மொழிவர். 2

(வடுகன் சேவடியே பெரும் புணை)

3 நெஞ்சே நினக்கொன்று சொல்லுவன்
நித்தலு நீநினைதி
அஞ்சே லினியென்று மன்பரை
ஆள அவதரித்தோன்
பஞ்சே ரடியினர் மன்னு நல்
வட்டூர்ப் பதிவடுகன்
செஞ்சே வடியே பெரும்புணை
காணிங்குச் சேர்ந்தவர்க்கே

(ப—ரை)

நெஞ்சே! = எனதுமனமே!; நினக்கு ஒன்றுசெப்புவன் = நினக்கு ஓர் உறுதி வாசகம் கூறுவன்; நீ நித்தலும் நினைதி = நீ என்றும் அதனை நினைவிற் கொள்வாயாக; இனி அன்பரை ஆள அவதரித்தோன் = எக்காலத்தும் அடித்தொண்டரை ஆண்டருள அவதாரஞ் செய்த தேவன்; பஞ்சேரடியினர் மன்னு நல்வட்டூர்ப் பதிவடுகன் = செம்பஞ்சுக்குழம்பு பயின்ற அழகிய மெல்லடியின ராகிய பாவை நல்லார் நிலைபெற்ற சீரிய வட்டூர்ப் பிராட்டியம்பதி வைரவப்பெருமான்; செஞ்சேவடி = அவரது சிவந்ததிருப்பாதங்களை; சேர்ந்தவர்க்கு = இடையறாது சிந்தித்தவர்க்கு, பெரும் புணை = பிறவிக்கடலைக் கடக்கப் பெரிய தெப்பமாகும்; காண் = அறிந்து அதன்படி ஒழுகுவாயாக. (எ-று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர், பாதங்களுக்குச் செம்பஞ்சுக்குழம்பு பூசுதல் பண்டைய வழக்காகும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும் பிறவிக்கடல் கடக்கத் திருவடிகள் தெப்பமென்பர். சேர்தல் என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகியார் இடையறாது நினைத்தல் என்று பொருள் கூறுவர். 3

(திருவருள் கூர்ந்தான் யாதும் குறையிலை)

4 சேர்ந்தார்க் கினியவன் வட்டூ
ருவந்தவன் செம்மைநலம்
ஓர்ந்தார்க் கொருபொருள் உத்தமர்
நெஞ்சத் துறைவடுகன்
சார்ந்தே மவனடித் தாமரைப்
போதுகள் தஞ்சமென்றே
கூர்ந்தான் திருவரு ளாதலின்
யாதுங் குறையிலையே

ப - ரை)

சேர்ந்தார்க்கு இனியவன் = தன்னை இடையறாது சிந்திப்பார்க்குத் தித்திக்கும் தெள்ளமுது போன்றவன்; வட்டூர் உவந் தவன் = வட்டுக்கோட்டைப் பதியைத்தமக்கு வதிவிடமாகக் கொண்டவன்; செம்மைநலம் ஓர்ந்தார்க்கு ஒரு பொருள் = உயரியகுணநலம் படைத்த மெய்யுணர் வினருக்கு ஒப்பற்ற செம் பொருளாக விளங்குபவன்; உத்தமர் நெஞ்சத்துறைவடுகன் = உள்ளக் கோயிலில் தன்னைஇருத்திய, நல்லோர் இதயத்து என்றும் நீங்கா திருப்பவன்; அவன் அடித்தாமரைப் போதுகள் தஞ்சம் என்றே சார்ந்தோம் = அந்த வைரவப் பெருமானுடைய தாமரை மலரனைய திருவடிகளைப், பற்றுக் கோடா மெனக் கொண்டோம், திருவருள் கூர்ந்தான் = அவர் திருவருள் பாலித்தார்; ஆதலின் யாதும் குறைவில்லை = ஆதலினால் இவ்வுலகில் எமக்கு ஒரு குறையும் இல்லையாம் (எ - று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் செம்மை நலம் இல்லாரைச் சிதடர் - அறிவிலிகள் என்பர், ஒரு என்பது ஈண்டு ஒப்பற்ற என்னும் பொருளது. வடுகன் = வடுகியின் புதல்வன். வைரவர் திருப்பெயர்களுள் ஒன்று. அடி = திருவடி. இலை = இல்லை என்பதன் இடைகுறை. 4

(வட்டூர் வடுகன் எம்நெஞ்சினன்)

5 இலைமென் முகப்பூண் இறைவியும்
ஈசனும் ஈன்றருள
மலைமென் சிலம்பிற் பயில்தரு
வல்லியைத் தானணைந்தே
கலையின் பொருளினைக் காட்டிய
வேலவன் பின்னவனாய்
நிலையிற் சிறந்துயர் வட்டூர்
வடுகனெம் நெஞ்சினனே

இலைமென் முகப்பூண் இறைவியும் = இலைவடிவான தொழிற்பாடு சான்ற அணிகலத்தைப் பூண்ட உமாதேவியும்; ஈசனும் = சிவபிரானாரும்; ஈன்று அருள = உலகு உய்யும் வண்ணம் ஈன்று தர வளர்ந்து; மலை சிலப்பில் பயில்தரு மென் வல்லியை = மலைச்சிகரங்களில் உலவிய கொடியை ஒத்த மென்மை வாய்ந்த வள்ளிநாயகியாரை; அணைந்து = கூடி; கலையின் பொருளினை = காந்தருவ நெறியின் உட்பொருளை; காட்டிய வேலவன் = எடுத்துக் காட்டிநின்ற செவ்வேட் பெருமானின்; பின்னவனாய் = தம்பியாகி; நிலையில் சிறந்துயர் வட்டூர் வடுகன்=நடுநிலை சான்றோர் வாழ்தலின் உயர்த்திக் கூறப்படும் வட்டுக் கோட்டையில் கோயில் கொண்ட வைரவப்பெருமான்; எம்நெஞ்சினன்=எமதுஇதயக்கோவிலில் என்றும் பிரிவின்றி அமர்ந்தருளி உள்ளார். ஆதலின் வாழ்வு சிறப்புறும் எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச்சிலம்பில் பயில்தரு மென்வல்லி என இயைக்க. ஈன்றருள வல்லியை அணைந்து, கலைப்பொருள் காட்டிய வேலவன் பின்னவன். வடுகன் எம்நெஞ்சினன் என்க. வாழ்வு சிறக்கும் என்பதை எச்சமாக வருவிக்க. பொருள் இலக்கணம் காணப் பெறாராய்ப் பண்டைநாளில் பாண்டியனும் புலவரும் வருந்திய வேளையில், சிவபிரானார் இறையனார் என்னும் பெயருடன் வந்து களவியல் எனும் நூலைத்தந் தருளினர் முருகன் களவியல் கூறும் இலக்கணந்துக்கியைய வள்ளியைக் கூடிக் களவொழுக்கத்தைக் காட்டினன் என்க. முருகன் உருத்திரசன்மன் என்னும் பெயருடன் இருந்து களவியலுக்கு உண்மைப் பொருள் உரையை அங்கீகரித்னன்

5

(காரி தஞ்சம் இருத்தலின் வாழ்வுண்டு)

6 நெஞ்சம் உருக்க உருகும்
தமிழ்கொண்டு நின்மலனை
விஞ்சப் புனையுங் கவுணியர்
கோத்திர வித்தகன்றாட்
கஞ்சம் புனைந்தவர் வட்டூர்
அமர்ந்தருள் காரியிவன்
தஞ்சம் இருத்தலின் வாழ்வுண்டு
காணித் தரணியிலே

(ப - ரை)

நெஞ்சம் உருக்க உருகும் தமிழ் கொண்டு = பயின்றோரின் கல்நெஞ்சையும், கனியச் செய்யுந் தீந்தமிழ்ப் பாடல்களைக்கொண்டு; நின்மலனை = மலம் அற்றவராகிய சிவபிரானாரை; விஞ்சப்புனையும் = திருவருள் மேலோங்கி நிற்கப்பாடியருளும்; கவுணியர் கோத்திர வித்தகன் = கவுணியர் மரபில் உதித்த பேரறிவாளரான திருஞான சம்பந்தப் பிள்ளையாரின்: தாள் கஞ்சப் புனைந்தவர் வட்டூர் = திருவடித் தாமரைகளைத் தமது சென்னியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்திய மேன்மக்கள் வாழும் வட்டூரில்; அமர்ந்தருள் காரி இவன் = விருப்புடன் உறைந்தருளும் இந்தக் காரியாகிய ஞானவைரவப் பெருமானின்; தஞ்சம் இருத்தலின்= துணை இருத்தலினால்; இத்தரணியில் வாழ்வு உண்டு = இவ்வுலகில் நல்வாழ்வு உண்டு; காண்=மனமே நீ இதனை நன்கு உணர்ந்து கொள். (எ-று)

காரி: கருநிறமுடையவன். வைரவக் கடவுளின் திருநாமங்களுள் ஒன்று செம்மேனியரான வைரவக் கடவுளின் போர்வை, கருநிறமுடைய தென்க. கச்சியப்பசிவாசாரியார் "வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடும் அஞ்சனப் புகை ...." என்பர். அமர்தல் - விரும்புதல் "ஆத்தி சூடி அமர்ந்த தேவன் ...." ஆத்தி சூடி. ஞானசம்பந்தப் பெருமானின் பாடல்களின் அற்புதங்கள் வெளிப்படை. **6**

(கலைமான் வினாதல்)

7 தரணியர் யாவருந் தண்மலர்
கொண்டுமுட் டாதிறைஞ்சி
அரனிவ னென்று வழுத்திடு
முத்தன் அமர்ந்தவட்டூர்
விரவிய குன்றிற் பயின்றிடு
மங்கையிர் இவ்வழியே
பரவிய கண்ணுடை மனொன்று
வந்திடப் பார்த்ததுண்டே

(ப - ரை)

தரணியர் யாவரும் = உலகில் உள்ளோர் அனைவரும்; தண்மலர் கொண்டு = குளிர்ந்த பூக்களை ஏந்தி; முட்டாது இறைஞ்சி = குறைபாடு ஒன்றும் இல்லாது பணிந்து; இவன் அரன் என்று வழுத்திடும் = இவனே எமது கடவுள் என்று ஏத்தும்; முத்தன் = வைரவப்பெருமான்; அமர்ந்த வட்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

= விரும்பி உறையும் வட்டூரின்கண்; விரவிய குன்றில் = பரந்துள்ள மலைச்சாரலில்; பயின்றிடு மங்கையீர் = பழகித்திரியும் மங்கை நல்லீர்!; இவ்வழியே = இந்த வழியி னூடாக; பரவிய கண்ணுடைய மான் ஒன்று=விசாலமான கண்ணை உடைய புள்ளிமான் ஒன்று; வந்திடக் கண்டது உண்டே = வந்ததனைப் பார்த்திர்கள் அல்லவா? கூறுமின் (எ - று)

இப்பாடல் கலைமான் வினாதல் என்னும் அகப் பொருள் துறைக்கண் அமைந்தது. மலையைப் படைத்து மொழிதல் புலவர் வழக்கு. மணிவாசகப்பெருமான் ''தண்மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்'' என்றும் ''பரந்து பல் ஆய்மலர் இட்டு முட்டாது அடியே இறைஞ்சி'' என்றும் கூறியருளினர். மங்கையீர் என்பது மங்கையீர் எனக் குறிகி நின்றது. தலைவியை உயர்த்திக் கூறினான். உண்டே என்பதில் 'ஏ' காரம் வினாப் பொருளில் வந்தது.

7

(இன்பம் அடைந்தார் கணக்கிலர்)

8 உண்டே பெருஞ்சுவை நாடகந்
தன்னில் எனவுணர்ந்து
கொண்டே அமலனை ஆட்டி
அடியர் குனிக்கநடம்
பண்டே பயின்றவள் பாலகன்
வட்டூர்ப் பதிவடுகன்
கண்டே அருள்செய இன்பம்
அடைந்தார் கணக்கிலரே

(ப - ரை)

நாடகம் தன்னில் = கூத்துக் கலையில்; பெரும் சுவை உண்டு = மிக்க சுவை உண்டு; என உணர்ந்து கொண்டு= என்று அறிந்து வைத்து; அமலனை = இறைவனை; அடியர் குனிக்க= அடியார் குனிந்து வணங்க; நடம் ஆட்டி=கொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டி, பாண்டரங்கம், காபாலம் முதலிய கூத்துக்களை ஆடச் செய்து; பண்டு பயின்றவள் = முன்பு சீர், தூக்கு, பாணி முதலிய தாளவகைகளைப் பயின்று வைத்தவளாகிய உமாதேவியாரின்; பாலகன் = திருமதலை; வட்டூர் பதிவடுகன் = வட்டூர்ப்பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட வைரவப்பெருமான்; கண்டு அருள் செய்ய = நோக்கித் திருவருள் கூர; இன்பம் அடைந்தார் = இன்பநலம் பெற்றார்; கணக்கிலர் = அளவற்றவராகும் (எ- று)

அமலனை அடியார் குனிக்க நடம்பண்டு ஆட்டிப் பயின்றவள் என்று கூட்டுக. ஏகாரங்கள் அசை. கைகொட்டி ஆடும் ஒருவகைக் கூத்து கொடுகொட்டி என்பர். இதனை இறைவன் ஊழிக்காலத்தில் ஆடினன். இறைவன் தன்னால் அழிக்கப்பட்டவர்களின் உடலை எரித்துப் பெற்ற சாம்பரைப் பூசி நின்று பாண்டரங்கக் கூத்தை ஆடினான். இறைவன் புலித்தோலாடை அணிந்து இறந்தவர்களின் தலை ஓட்டைக்கையிலேந்திக் காபாலம் எனும்கூத்தை ஆடினான். அக்கூத்துக்களின் போது உமையம்மையார் பாணி, தூக்கு, சீர் என்ற தாளவகை கெடாமல் ஓம்பினர் என்பது வரலாறு. 8

(வாழ்வு வளமிகச் செய்தான்)

9 கணக்கில் உயிர்த்தொகை கட்டுண்ட
பாசம் கழிகவெனப்
பிணக்கில் பெரும்புகழ் மேவிய
வட்டூர்ப் பதிதனிலே
குணக்குன் றனகாரி கொம்புடன்
வந்து குடிபுகுந்தான்
வணக்கம் புரியநல் வாழ்வருள்
செய்தான் வளமிகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப – ரை)

கணக்கில் உயிர்த்தொகை = அளவற்ற ஆன்மகோடிகள்; கட்டுண்ட பாசம் = பிணிக்கப்பட்ட பாசங்கள்; கழிக என = நீங்கி இன்புற வேண்டும் என்று; பிணக்கு இல் பெரும் புகழ் மேவிய வட்டூர்பதி தனிலே = குற்றம் அற்ற பெரும் புகழ் பொருந்திய வட்டூர்ப் பதியிடத்து; குணம் குன்று அனகாரி = உயர்குணமாகிய மலையாம் வைரவப்பெருமான்; கொம்புடன் வந்து குடிபுகுந்தான் = பூங்கொம்பாகிய தமது சத்தி சாமுண்டி தேவியாரோடும் போந்து கோயில் கொண்டருளினார். வணக்கம் புரிய = திருக்கோயிலுள் புக்குநாளும் தாழ்ந்து தொழுதெழ; வளம் மிக நல்வாழ்வு அருள் செய்தான் = பல்வகை வளங்களுடன் கூடிய நல்வாழ்வை அடியார்க்குத் தந்தருளினார். எ – று

குணம் குன்று, நற்குணம் ஆயமலை. வள்ளுவர் பெருமான் "குணம் என்னும் குன்று" என்றார். குணங்குறி அற்ற பரம்பொருள் தடத்த நிலைக்கண் அவற்றை உடையவராகக் கூறப்படுவர். எண்குணத்தான் என்பது நோக்குக பாசம்; மலவாதனை; அன்ன என்னும் உவமை உருபு இடை குறைந்து அன என நின்றது. கொம்பு; பூங்கொம்பு இங்கு உருவகமாக சாமுண்டி தேவியாரைக் குறித்தது.

9

(வட்டூர் கடுகிச் சரண் புகும்)

10 வாழ்வருள் செய்தவன் விண்ணக
வானோர் குழாந்தனக்கே
தாழ்வரு பங்கயன் தன்னைத்
தெருட்டிய தற்பரன்காண்
சூழ்வரு தொல்வினை யாயின
நீக்கிச் சுகமளிப்பான்
காழ்வரு சோலைகொள் வட்டூர்
கடுகிச் சரண்புகுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

விண்ணக வானோர் குழாம் தனக்கு = வானுலக வாசிகளாகிய தேவர் கூட்டத்தினருக்கு; வாழ்வு அருள் செய்தவன் = போகம் மிக்க நல்வாழ்வினை வழங்கிய வைரவமூர்த்தி; தாழ்வு அரு பங்கயன் தன்னை தெருட்டிய தற்பரன் = பணிவற்று இறுமாப்பு உற்ற பிரமதேவரின் ஒரு சிரத்தைக் கொய்வித்து நல்லறிவு புகட்டிய பரமசிவனே யாவார். காண் = கண்டுணர்மின். சூழ்வருதொல்வினை ஆயினநீக்கி = அவர் நம்மை யெல்லாம் சூழ்ந்து வரும் பழைய வினைகளைத் துடைத்து; சுகம் அளிப்பான் = ஆன்மலாபம் தந்தருளுவார்; காழ்வரு சோலை கொள் வட்டூர் = பலம் வாய்ந்த மரங்களுடன் கூடிய சோலையை உடைய வட்டூரை; கடுகி = விரைந்து அணுகி; சரண்புகும் = சரணாகதி அடைமின். (எ—று)

பங்கயன் = தாமரை மலராசனராகிய பிரமன். வைரவமூர்த்தி பிரமதேவரின் சிரங்களில் ஒன்றைக் கொய்தார் என்பது கதை. தெருட்டுதல் = நல்லறிவு புகட்டுதல். தற்பரன் = பரமசிவன் ஆவார் என்னும் சொல்லை வருவிக்க. 10

(தாள் புகலென ஏத்துமின்)

11 புருமே புகலென வட்டூர்ச்
சினகரம் போற்றிநிதம்
உருமே புகலென வாசநன்
நீரொடு மாமலரை
நகுமே புகலென நாடாரைக்
காரியும் நீரவன்றாள்
தகுமே புகலென ஏத்துமின்
தாழ்ந்து கருத்துடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

நீர் நிதம் வட்டூர் சினகரம் புகலெனப் புகும் = உலகீர் நாடோறும் வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் உள்ள திருக்கோயிலைத் தஞ்சம் என்று புகழ்ந்து அடைமின்கள்; வாசநன் நீரொடு மாமலரை புகல் என உகும் = நறுநீரும் வாசமலரும் கொண்டு எந்தையே ஈசா காத்தருளென்று சொரிந்து வழிபடுங்கள், காரி புகல் என நாடாரை நகும் = வைரவ மூர்த்தி தன்னை நீயே சரண் என்று விரும்பி வழிபடாதாரைக் கண்டு சிரிப்பார்; அவன் தாள் = வைரவப் பெருமான் திருவடிகளை; கருத்துடன் = முழுவிருப்புடன்; புகலெனத் தாழ்ந்து ஏத்துமின் = பற்றுக்கோடு என்று சாட்டாங்கமாக வீழ்ந்து தொழுங்கள். தகும் = அதுவே நீர் செயற்பாலதாம் பணிஎன உணர்மின்கள் (எ-று)

சினகரம் = திருக்கோயில், நாவுக்கரசுப் பெருந்தகையார், "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" என்டர். 11

(வைரவன் மலமாசு நீக்கிடும்)

12 கருத்து நிறைந்த கவிதைப்
பணிகொடு காதலித்தே
இருத்து புலவோர் இதயத்
தளியுள் எழுந்தருளி
உருத்து வருமுடல் நோய்களை
மாற்றி உவந்துபின்னும்
வருத்து மலமாசும் நீக்கிடும்
வட்டூர் வயிரவனே.

(ப-ரை)

வட்டூர் வயிரவன் = வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட வைரவப்பெருமான்; கருத்து நிறைந்த கவிதைப் பணிகொடு = பொருள் நிறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் திருத்தொண்டைப் புரிந்து கொண்டு; காதலித்து இருத்து புலவோர் = பேரன்பு கொண்டு தன்னை அகத்தே இருத்தி வாழும் புலவோரின்; இதயத்தளியுள் எழுந்தருளி = உள்ளக்கோயிலில் நாளும் எழுந்தருள் சுரந்து, உருத்து வரும் உடல்நோய்களை = கோபித்து வருத்தவரும் உடற் பிணிகளை; மாற்றி = நீக்கி அருளி: மலமாசும் நீக்சிடும் = அன்றியும், மலக்குற்றங்களையும் வலிகெடச் செய்வார். (எ - று)

கவிதைப்பணி = பாடல் தொண்டு. இதயத்தளி இதயமாகிய தளி எனவிரியும், தளி = திருக்கோயில்; மலமாசு = மும்மலக் குற்றம், சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்னும் கன்மவினைகளாம். 12

(தோழி கூற்று)

13 வயிரவ நாதனெம் வள்ளல்
மகிழ வருகுமரன்
கயிரவங் கண்ணெனத் தோன்றிடும்
வட்டூர்க் கவின்சிலம்பில்
உயிரனை யாளொடும் உற்றிருந்
தாடல் உவந்தனமால்
செயிரவை தீர்த்திட மாலை
தந்தானொரு செம்மலுமே

(ப - ரை)

எம் வள்ளல் மகிழ வருகுமரன் = அருள் வள்ளலாகிய சிவபிரானார் உளமுவப்ப வந்த புதல்வர்; வயிரவநாதன் =வைரவமூர்த்தி என்னும் திருப்பெயரினன்; கயிரவம் கண் என தோன்றிடும் வட்டூர் கவின் சிலம்பில் = குவளை மலர்கள் கண்போல மலர்ந்து தோன்றும் வட்டுக்கோட்டையூரில், எழில் தவழும் மலைச்சாரலிலே; உயிர் அனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாள் ஓடும் உற்றிருந்து ஆடல் உவந்தனம் = யாம் எம் முயிர் ஒத்த தலைவியுடன் சேர்ந்து வண்டல் அயர்ந்தே மாக; செய்மல் = அவ்வழியே போந்த ஒப்பற்ற தலைவன் செயிர் அவை தீர்த்திட = துன்பங்களானவை தீரும் படியாக; மாலை தந்தான் = அழகிய மாலை ஒன்றைத் தந்து நீங்கினன் அவன் எண்ணம் இருந்தவாறு நன்று (எ - று)

தோழி கூற்றாக வந்த அகத்துறைப் பாடல். தோழியும் தலைவியும் ஓருயிர் ஈருடல் போல்வர். குமரன் வைரவருக்கு உரிய திருப்பெயர்களில் ஒன்றெனினுமாம். மலையைப் படைத்து மொழிதல் புலவர் அறம் என முன்னர் மொழிந்தாம். 13

(ஈசனை ஏத்த இணையுமின்)

14 செம்மலை வட்டூர் அமர்ந்திடு
தேவனை முன்னொருநாள்
அம்மரை ஆசனன் பாங்கர்
அடைந்தவன் கொண்டிருந்த
மம்மரை மாற்றிய மாபரன்
ஆகிய முக்கணரை
எம்முறை ஏற்றருள் ஈசனை
ஏத்த இணையுமினே.

(ப - ரை)

செம்மலை = தனிப்பெருந்தலைவரை; வட்டூர் அமர்ந்திடு தேவனை = வட்டுக்கோட்டையூரில் அமர்ந்தருளிய தேவ தேவனை; முன் ஒரு நாள் = முன்பு ஒரு காலத்தில்; அம்மரை ஆசனன் பாங்கர் அடைந்து = அந்த தாமரை மலர் ஆசனராகிய பிரமதேவரின் அயலே சென்று; அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த மம்மரை மாற்றிய = அவன் கொண்டிருந்த மயக்கத்தை நீக்கி அருளிய; முக்கணர் ஆகிய மாபரனை = திரிநேத்திரங்களை உடைய பெரும் பெயர்க் கடவுளை; எம்முரை ஏற்றருள் ஈசனை = அறிவிலியேம் உரைத்த புன்மொழிகளையும் உவப்புடன் ஏற்றுத் திருவருள் புரிந்த வைரவமூர்த்தியை; ஏத்த இணையுமின் = உங்கள் இடர்கெடப் பணிந்து தொழ வாருங்கள். (எ-று)

தாமரை என்பது முதல் குறைந்து மரை என நின்றது. முக்கணர் ஆகிய மாபரன் என்றுகூட்டுக. "ஏத்தலாம் இடர் கெடலுமாம்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். இடர் கெட என்பது வருவித்துரைக்கப்பட்டது. செம்மல் தலைவன்; இனி, செந்நிறத்தோன் என்றலும் ஒன்று.

14

(அருள் எய்திடத் தாழ்ந்தெழும்)

15 மின்னேர் இடையுமை தந்தருள்
முத்தனை மிக்ககருங்
கன்னேர் அகத்தைக் கனியக்
குழைத்திடுங் காரிதனை
பொன்னேர் எழிலினர் போந்துறை
வட்டூரிற் புங்கவனைத்
தன்னேர் அருட்டிரு எய்திடத்
தாழ்ந்தெழும் அன்புடனே.

(ப-ரை)

மின்நேர் இடை உமை = மின்னினை ஒத்த நுண்ணிய இடையினரான உமாதேவியார்; தந்தருள் முத்தனை = ஈன்று தந்துதவிய வைரவப் பெருமானாரை; மிக்க கரும் கல்நேர் அகந்தையை = மிக்க கருங்கற்பாறையை ஒத்த அகங்காரத்தை; கனிய குழைத்திடும் காரி தனை = கனிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழையும்படி செய்தருளும் வைரவப் பெருமானாரை; பொன் நேர் எழிலினர் போந்து உறைவட்டூரில் புங்கவனை = பொன்னை ஒத்த அழகினை உடைய மாதரார் விரும்பி வசிக்கின்ற வட்டூர்ப்பதியில் கோயில் கொண்ட தேவனை; தன்நேர் அருள் திரு எய்திட = பிறிதெதையும் ஒப்புக் கூற இயலாத அருட் செல்வத்தைப் பெற்றுக் கொள்ள; அன்புடன் தாழ்ந்து எழும் = பேரன்புடன் வருகை தந்து கும்பிட்டு வணங்குங்கள் (எ - று)

நேர், உவமை உருபு, கருங்கல் = பாறாங்கல். எழிலினர் = மாதராரை உணர்த்திற்று. ''அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்'' என்பது வள்ளுவர் வாக்கு. !5

(வண்மையினீர் வட்டூர் இருந்தீ!)

16 அன்புடன் ஏந்தினை சூல
கபாலம் அணியுடுக்கை
வன்புடன் மேய புலியதழ்
சேர்த்திய வண்மையினீர்
முன்புடன் நின்ற அயனார்க்குத்
தண்டமும் முற்றுவித்தீர்
இன்புடன் வட்டூர் இருந்தீர்கைம்
மாறதென் இங்குளதே.

(ப - ரை)

அன்புடன் சூல கபாலம் அணி உடுக்கை ஏந்தினை = உயிர்கள் மாட்டுக் கொண்ட அன்பினால் சூலம், மண்டையோடு, அழகிய உடுக்கை என்பவற்றைத் திருக்கரங்களில் தாங்கி அருளினீர்; வன்புடன் மேய புலியதழ் சேர்த்திய வண்மையினீர் = தறுகண்மையுடன்போந்த புலியை உரித்து அதன் தோலைப் போர்த்திய கொடையாளரே; முன்புடன்

நின்ற அயனார்க்குத் தண்டமும் முற்றுவித்திர் = ஆணவ வலியுடன் நின்ற பிரமதேவருக்குத் தண்டனையும் வழங்கினீர்; இன்புடன் வட்டூர் இருந்திர் = உவகையுடன் வட்டூர்ப் பிராட்டியம்பதியில் கோயில் கொண்டருளினீர்; இங்கு என் கைமாறு உளது = யாமெல்லாம் என்ன பிரதி உபகாரத்தைச் செய்யவல்லோம். ஒன்றும் இல்லை. (எ - று)

திருவாணியாகிய வைரவனை உபசாரமாகப் புலியதழ் சேர்த்தியவன் என்று கூறினார். தந்தை செயல் மைந்தன் மேலதாம் கச்சியப்ப சிவாசாரியாரும் ''தண்டமுன் புரிதருவடுகன்'' என்பர். 16

(தோழி இல் செறிப் பறிவுறுத்தல்)

17 உளமே புகுந்தாண் டிடுங்காரி
வட்டூர் உயர்கிரியில்
வளமே மலிபுனங் கொய்தார்
குரல்நமர் வந்தினியாம்
களமே புகுதலொ ழிந்தனமால்
நந்தங் காதலற்குத்
தளமே பயில்தந்தை காளினிச்
சாற்றல் சற்றொல்லுவதே

(ப-ரை)

உளம் புகுந்து ஆண்டிடும் காரி = அடியார் உளத்தில் கோயில் கொண்டு அருளாட்சி செய்யும் வைரவப்பெருமானுடைய; வட்டூர் உயர் கிரியில் = வட்டுக்கோட்டையூரின் கண் உளதாகிய உயர்ந்த மலைச்சாரலிலே; வளம் மலியும் புனம் = வளம் நிறைந்த தினைப் புனத்தில்; நமர் குரல் கொய்தார் = எமது தந்தையர் தினைக்கதிரை

அறுவடை செய்தனர், யாம் இனி களம் புகுதல் ஒழிந்தனம் = நாய்; இனித்தினைப்புனம் வருதலை நிறுத்திக் கொண்டோம்; தனம் பயில் தத்தைகாள் = தினைத்தாள்களின் இடத்து இருந்து இரைதேடும் கிளிகளே!; நம் காதலற்கு இனி சாற்றுதல் = நமது தலைவருக்கு இச் செய்தியைக் கூறுதல்; சற்று சொல்லுவதே = உங்களுக்கு சிறிது இயைவதாகும் (அறிவித்து விடுங்கள்) (எ-று)

ஈன்றோர், தலைமகளைப் புனங்காவல் ஒழிந்து வீட்டில் இருக்கும்படி பணித்தனர். அதனைத் தலைமகனிடம் நேரே கூறுதல் நாகரிகம் அன்றாம். எனவே தோழி கிளிகளுக்கும் கூறுமாபோலக் குறிப்பு மொழி மூலம் உணர்த்துகின்றாள். ஒல்லுதல் = இயலுதல், ஆல்முதலாயன அசைகளை. 17

(பணிமின் மாண்புறலாம்)

18 ஒல்லும் பரிசு பணிமின்
பணிந்தா லுயர்சுவைப்பா
நல்கும் இசைக்கனி தன்னொடு
நானில மீதினிலே
மல்கும் கவிப்புல வோர்தமுள்
மிக்கநன் மாண்புறலாம்
பல்கும் புகழ்மிகு வட்டூர்
வடுகன்றன் பாதமதே.

(ப - ரை)

பல்கும் மிகு புகழ் வட்டூர் வடுகன் பாதம் அது = பெருகா நிற்கின்ற மிக்கபுகழை உடைய வட்டுக்கோட்டை வைரவ சுவாமியது. திருவடியை, ஒல்லும் பரிசு பணிமின் = உங்களுக்கு இயலும் திறத்தால் தொழுங்கள், பணிந்தால் =

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு முப்போதும் தொழுவீராயின்; இசைக்கனி தன்னொடும் = கனியென இனிக்கும் இசைத்தமிழ் ஞானத்தையும்; சுவைப்பா நல்கும் = ஒன்பான்சுவையுடன் கூடிய இயற்றமிழ்ப்பாடல்களை இயற்றும் வல்லபத்தையும்தரும்; நால்நிலம் மீதினில் = அம்மட்டோ இப்பூமியில் மல்கும் கவிப்புலவோர் தம்முன் = நிறைந்து விளங்கும் ஆசு மதுரம் வித்தாரம் சித்திரம் என்னும் நாலவகைக் கவிதைகளையும் புனையும் பெரும் புலவோர்கூட்டத்தில்; மிக்க நல் மாண்பு உறலாம் = மிகவும் உயர்ந்த மாட்சிமையையும் எய்தலாம் (எ - று)

இசைக்கனி இசையாகிய கனி என்க. சுவை; நகை, அழுகை, இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை சாந்தம் ஆகிய நவரசங்கள். நானிலம் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் ஆகியநான்கு நிலங்கள் பாலைக்கு நிலமின்மையின் அதனை நீக்குவர். 18

(உடுக்கைப் பெருமை நயந்திலர்)

19 பாதம் பணிவார் அயனும்
அரியுநற் பண்புடனே
சீதம் பயில்பொழில் வட்டூர்
வடுகன்றன் செங்கரத்து
வேதம் புகலும் பொருள்குறித்தே
பத்தி வித்துநல்கி
நாதம் பயிலும் உடுக்கைப்
பெருமை நயந்திலரே

(ப-ரை)

சீதம் பயில் பொழில் வட்டூர் வடுகன்தன் = குளிர்மை தவழும் சோலை சூழ் வட்டுக்கோட்டையூர் வைரவப் பெருமானுடைய; பாதம் = திருவடிகளை; அயனும் அரியும் நல்பண்புடன் பணிவார் = பிரமனும் திருமாலும் மன

ஒருமைப் பாட்டுடன் தொழுவார்கள்; செங்கரத்து = வைரவப்பெருமானின் சிவந்த கரத்தில் உளதாகிய; வேதம் புகலும் பொருள் குறித்து = வேதம் மொழியும் உண்மைப் பொருளை விளக்கி; பத்திவித்து நல்கி = பத்திமையை முளைகொள்ளச் செய்து; நாதம் பயிலும் = உலகத்தோற்றத்துக்கு ஏதுவான நாதஒலி எழும்; உடுக்கைப் பெருமை = உடுக்கையின் உயர்வை; நயந்திலர் = விரும்பி அறிந்து கொண்டார்கள் இல்லை. (எ - று)

உடுக்கை வேதப் பொருள் உணர்த்தி, பத்தி நல்கி நாதம் பயிலும் என்க. உடுக்கையின் நாதம் உலகத் தோற்றத்துக்குக் காரணமாகும் ''தோற்றம் துடியதனில்'' என்பது உண்மை விளக்கம். 19

(காரி வதனத்து மென்னகை)

20 நயந்தார் தமக்குப் பெருந்தன
மாமினி நாற்பொருளை
வியந்தார் தமக்குத் தனித்தமிழ்
ஞான வெறுக்கையுமாம்
பயந்தார் அளிக்குமெய் அன்பே
பகர்ந்திடிற் காதலர்க்கே
வயந்தார் அணிபுயக் காரி
வதனத்து மென்னகையே

வயம் தார் அணிபுயம் காரி வதனத்து மென் நகை = வெற்றிமாலை தொங்கும் திருத்தோள்களை உடைய வைரவப் பெருமானின் திருமுகத்து உதிரும் புன்னகையானது; நயந்தார் தமக்கு = அன்புகொண்டு விரும்பும் மெய் அடியார்களுக்கு; பெரும் தனம் ஆம் = கிட்டுதற்கு அரிய அருட் செல்வமாம்; நால் பொருளை வியந்தார்

தமக்கு = அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் ஓதி உணர்தல் அரிது என்று வியப்புற்றோருக்கு; தனி தமிழ் ஞான வெறுக்கையும் ஆம் = வடமொழிக் கலப்பற்ற தனித்தமிழில் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் அறிவுக்கருவூலமுமாம்; பகர்ந்திடில் = மேலும் விளக்கப்புகில்; காதலர்க்கு பயந்தார் அளிக்கும் மெய் அன்பு = காதலஞ்சிறார் மீது ஈன்றோர் சொரியும் மெய்யன்புமாம். (எ-று)

வட்டுக் கோட்டைப் பிராட்டியம் பதியிலே வைரவப் பெருமான் புன்முறுவல் பூத்த திருமுகத்துடன் அமர்ந்தருளுகின்றார். தனித்தமிழ் ஞான வெறுக்கை தனித்தமிழில் எழுந்த ஞான சாத்திரமாகிய வெறுக்கை. வெறுக்கை = செல்வம். 20

(தயாநிதி வட்டூர் அமர்ந்தனன்)

21 நகையது காட்டி அடிமைக்
கபயம் நயந்துமணி
வகையது காட்டிக் கடகம்
புனைந்து வயங்குவினைப்
பகையது காட்டிப் பவநோய்
தடிந்து பதிபலவின்
தகையது காட்டிநல் வட்டூர்
அமர்ந்தான் தயாநிதியே

(ப – ரை)

தயாநிதி = திருவருட் செல்வராகிய வைரவப் பெருமான்; அடிமைக்கு = தமது திருவடித் தொண்டருக்கு; நகையது காட்டி அபயம் நயந்து = குறுநகைக் கோலம் காட்டி அஞ்சேல் என்று அபயம் தந்து; மணி வகையது

காட்டி கடகம் புனைந்து = நவமணிகள் விளக்கமுற காட்டி இயற்றப்பட்ட காப்பினை அணிந்து; வயங்கும் பகைவினை அது காட்டி = மேலெழுந்து விளங்கும் தீவினையைப் புசிப்பித்து; பவநோய் தடிந்து = அடியார் நல்வினை இயற்றுதலால் பிறவிப்பிணியைப் போக்கி; பதிபலவின் தகையது காட்டி = தாம் அமர்ந்து விளங்கும் உயரிய திருக்கோயில்கள் பலவற்றையும் அறிய வைத்து; நல்வட்டூர் அமர்ந்தான் = வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியிலும் கோயில் கொண்டருளினார். (எ - று)

தயாநிதி, நயந்து, புனைந்து காட்டி தடிந்து வட்டூர் அமர்ந்தான் எஎக. அடிமை இறைவன் ஆண்டான்; நாம் அடிமை என்றுணர்க. உயிர்கள்; தொண்டர்கள். 21

(வடுகனை வாழ்த்துங்கள்)

22 நிதியே பெறலாம் நினைந்தன
யாவையும் எய்திடலாம்
துதியே பெறலாம் துகளான
எல்லாம் துடைத்திடலாம்
கதியே பெறலாம் அணைந்தார்
பெறுஞ்சுகம் கண்டுநல்ல
மதியே பெறலாம் வடுகனை
வட்டூரில் வாழ்த்துமினே

(ப - ரை)

வட்டூரில் வடுகனை வாழ்த்துமின் = அன்பரீர் வட்டூரில் கோயில் கொண்ட வைரவப் பெருமானைத் தினமும் முப்போதும் வாழ்த்தி வழிபடுங்கள்; நிதியே பெறலாம் = அங்ஙனம் தவறாது வழிபட்டு வந்தால் நீவிர் விரும்பி யாங்கு அருட்செல்வம் பொருட்செல்வங்களை எய்திட

லாம்; நினைந்தன யாவையும் எய்திட லாம் = மனத்தில்; எண்ணியவற்றை எண்ணியாங்கு பெறலாம்; துதியே பெறலாம் = பிறரெல்லாம் பாராட்டித்துதிக்கும் பேற்றையும் அடையலாம்; துகளான எல்லாம் துடைத்திடலாம் = காமம் வெகுளி மயக்கம் முதலிய குற்றங்கள் இல்லையாகும்படி அழித்தொழிக்கலாம்; அணைந்தார் பெறும் சுகம் கண்டு = இறைவன் திருவடியைச் சிந்திப்பார் எய்தும் இன்பத்தினை இம்மையில் கண்டு; கதியே பெறலாம் = மறுமையில் முத்திப்பேற்றையும் அடையலாம்; நல்ல மதியே பெறலாம் = சிவனடியே சிந்திக்கும் சிவஞானமும் பெறலாம்.

நிதி எனப் பொதுப்படக் கூறினமையின் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் சொல்லப்பட்டது. மதி = புத்தி. அது ஞானமாம். ஈண்டு சிவஞானம்.

''பரந்து பல்லாய் மலரிட்டு முட்டாது அடியே இறைஞ்சி இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் எனும் அன்பர் உள்ளம்'' இறைவன் கரந்து நில்லாது வெளிப்பட்டருள்வன் என மணிவாசகப் பெருமான் கூறியருளினார். (எ-று) 22

(மலர் மாலை சூட்டுங்கள்)

23 வாழ்த்துமின் ஞாளியை ஊர்ந்தருள்
வள்ளலை வைகலெலாம்
தாழ்த்துமின் சென்னி அவன்பதி
புக்குத் தகவுடனே
வீழ்த்துமின் வெவ்வினை வேரினைக்
கல்லி விளங்குபதம்
சூழ்த்துமின் மாமலர் மாலைகள்
ஆசை துறந்தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

ஞாளியை ஊர்ந்தருள் வள்ளலை = வேதமாகிய நாயில் இவர்ந்து செல்லும் அருள் வள்ளலாகிய வைரவப் பெருமானை; வைகல் எல்லாம் = நாடோறும்; தகவுடனே அவன் பதி புக்கு = ஆசார அனுட்டானங்களுடன் அப்பெருமானின் திருக்கோயிலுக்குச் சென்று; வாழ்த்துமின் = வாயார வாழ்த்துங்கள்; சென்னி தாழ்த்துமின் = தலையாரக் கும்பிடுங்கள்; விளங்குபதம் = சிவஞானமாக விளங்கும் திருவடிக்கு; இனி ஆசைதுறந்து = இனி மேலாவது பற்றுக்களை விடுத்து; மாமலர் மாலைகள் = சிறந்த நறுமலர்கள் கொண்டு தொடுத்த பெரியமாலைகளை; சூழ்த்துமின் = அணிவியுங்கள்; வெவ்வினை வேரினை கல்லி வீழ்த்து மின் = பிறப்பிற்குக் காரணமான கொடியவினையாகிய மரத்தின் வேரினை வெளிக்கொணர்ந்து அழியச் செய்யுங்கள். (எ-று)

வள்ளலை, தகவுடன் பதி புக்கு வாழ்த்துமின், சென்னி தாழ்த்துமின், மலர்மாலை சூழ்த்துமின், வேரினைக் கல்லி வீழ்த்துமின் என்று கூட்டுக. பேரருளாளர் திருக்கோயில் புக்கு வாழ்த்துதல், வணங்குதல், மலர்மாலை புனைவித்தல் முதலியன முத்திக்கு வித்தாம் என்பர். 23

(செவிலி அந்தணரை வினாதல்)

24 இனியே புகலுதிர் ஐந்தவித்
தாற்றும் இருந்தவத்தீர்
கனியே நிகர்துவர் வாயெழிற்
காரிகை யென்மகடான்
உனியே உயிரெனக் கொண்டொரு
காளை உடன்வரவே
தனியே வயிரவன் வட்டூர்க்
கடத்திடைச் சார்ந்ததுண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப - ரை)

ஐந்து அவித்து ஆற்றும் இரும் தவத்திர் = ஐம்பொறிகளையும் அடக்கி, அருந்தவம் செய்யும் அந்தணப் பெரியீர், கனியே நிகர் துவர் வாய் எழில் காரிகை என்மகள் = கொவ்வைக் கனியை ஒத்த செப்பவள வாயினையும்; பேரெழிலினையும் உடைய மங்கையாகிய என் மகள்; உயிரென உன்னிக் கொண்டு = தன் உயிரே அவன் என்று உணர்ந்து கொண்டு; ஒரு காளையுடன் = ஒப்பற்ற ஓர் இளைஞனுடன்; தனியே = வேறு துணை இன்றித் தனித்தவளாய்; வயிரவன் வட்டூர்க் கடத்திடை = வைரவப் பெருமானின் வட்டுக்கோட்டையில் உளதாகிய காட்டு வழியிலே; சார்ந்தது உண்டா = வந்ததனைத் தாங்கள் கண்டது உண்டா? உரைமின் (எ-று)

இப்பாடல் உடன் போக்கு என்னும் அகத்துறைமேலதாம்; தலைமகள் காதலனுடன் சென்றாளாக வருந்திய செவிலி, இடைவழியில் அந்தணப் பெரியார்களிடம் கேட்டனள் என்க. கடம் = வழி சுரமுமாம், உன்னியே என்றபாலது உனியே என நின்றது. 24

(உலகோர் பொருள் தெரிந்திலர்)

25 சார்ந்த இளம்பிறை சேர்த்திய
வட்டூரில் தாணுவும்தான்
ஓர்ந்த சுருதி சூமலியில்
யாங்கணும் ஊர்ந்தருள்வோன்
கூர்ந்த மலரவன் தன்சிரம்
ஒன்றைக் குறைத்தனனால்
தீர்ந்த பெரும்பொருள் செப்ப
உலகோர் தெரிந்திலரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப — ரை)

ஓர்ந்த சுருதி ஞமலியில் = இறைவனால் அருளப் பட்டது என உணரும் வேதமாகிய நாயின் மீது; யாங் கணும் ஊர்ந்தருள்வோன் = சருவலோகமும் சென்று வரும் வைரவமூர்த்தி; சார்ந்த இளம் பிறை சேர்த்திய = தமமைத் தஞ்சம் என்று அடைந்த இளம் பிறைச் சந்தி ரனைத் திருச்சடையில் வைத்த; வடடூர்த்தாணு = வட் டூரில் கோயில் கொண்ட சிவப்பரம் பொருளே ஆவர்; கூர்ந்த மலரவன் தன்சிரம் ஒன்றைக் குறைத்தனன் = அவர் கருவம் கூர்ந்ததாமரை மலர் ஆசனராகிய பிரமதேவரின் ஐந்துதலைகளுள் ஒன்றைக் கிள்ளி அருளினார்; தேர்ந்த பொருள் செப்ப = அதன்மூலம் அகந்தை அழிவையே தரும் ஆப்த வாக்கியத்தை விளக்கவே; உலகோர் தெளிந் திலர் = ஆனால் உலகோர் அதனை உணர்ந்து கொண்டா ரில்லை. (எ - று)

தாணு தான் என்பதில் தான் என்னும் சொல்மூலம் இருவரும் ஒருவரே என அறுதி இட்டுக் கூறினார். உம் அசைச்சொல். சுருதி = காதால் கேட்கப்பட்டது, வேதம். 25

(வட்டூரன் ஆண்டான்)

26 தெரிந்திலன் ஆறங்கம் நால்வேதம்
தேவர்கள் தேவனடி
புரிந்திலன் மாமலர் கொண்டுயர்
பூசனை புண்ணியங்கள்
பரிந்திலன் அன்பர் படுந்துயர்
கண்டு பதைபதைத்தே
விரிந்திலன் உள்ளமும் ஆண்டான்
வட்டூரன் வியப்பலவே.

(ப - ரை)

ஆறங்கம் நால்வேதம் தெரிந்திலன் = யான் ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும் அறிந்தேன் இல்லை; தேவர்கள் தேவன் அடி = தேவதேவனாகிய ஞானவைரவ சுவாமியின் திருப்பாதங்களில்; மாமலர் கொண்டு உயர் பூசனை புரிந்திலன் = அழகிய நறுமலர் களைக் கொண்டு பூசை புரிந்தேனும் இல்லை; புண்ணியங் கள் புரிந்திலன் = சிவபுண்ணியங்கள் ஆனவற்றையும் செய்தேன் இல்லை; அன்பர் படும் துயர் கண்டு பரிந்திலன் = அன்பராயினார் படும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தினேனும் இல்லை; உள்ளமும் விரிந்திலன் = மனம் விரிதல் இன்றிக் குறுகிய நோக்குடனே வறிதே திரிந்தேன்; வட்டூரன் ஆண்டான் = வட்டூர் வைரவமூர்த்தி என்னை அடிமை கொண்டு அருளினார்; வியப்பு அலவே = இது பேரதிசயமயமாகும் அல்லவா?

பூசனை புண்ணியங்கள் புரிந்திலன் என்பதைப் பூசனை புரிந்திலன்; புண்ணியங்கள் புரிந்திலன் எனத்தனித்தனி கூட்டுக. ஆறங்கம் = சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம் சோதிடம் கற்பம் என்பன. நால்வேதம் வெளிப் படை. உள்ளம் விரிந்திலேன் = பரந்த உள்ளம் உடை யேன் அல்லேன், இப்பாடலில் வாழ்வில் கடைப்பிடிக் கற் பாலதாம் ஒழுக்கங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன. 26

(தேசிகன் சேவைக்கு ஆளாக்கினன்)

27 வியப்பல விந்த விரிகடல்
சூழ்புவி மேவிநின்று
நயப்பல செய்து நவையுற்ற
நாயிற் கடையினனை
உயப்பல நல்கி உணர்வினை
யூட்டி உளம்புதுக்கிச்
செயப்பல சேவைக்கா ளாக்கினன்
வட்டுரெந் தேசிகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப – ரை)

எம் வட்டூர் தேசிகன் = அடியேங்களது, வட்டுக் கோட்டையில் கோயில் கொண்ட குருமூர்த்தியாகிய வைரவப் பெருமான்; இந்த விரிகடல் சூழ் புவி மேவி நின்று = இந்தப் பரந்த கடல் சூழ்ந்த உலகில் யாம்வந்து பிறந்து; நயப்பு அல செய்து = விரும்பத்தகாதனவற்றைப் புரிந்து; நவை உற்ற நாயில் கடையினனை = குற்றங்கள் நிறைந்து நாயினும் கீழானவனாகிய என்னை; உய பல நல்கி = உய்வடையத் தனு, கரண புவன போகாதிகளைத் தந்து; உணர்வினை ஊட்டி = மெய்யறிவைப் புகட்டி; உளம் புதுக்கி = தீயேன் மனத்தைப் புதுவது ஆக்கி; பல சேவை செய = பல்வேறு நற்றொண்டுகளைப் புரிய; ஆனாக்கினன் = ஒரு நன்மகனாக்கி அருளினார்; (செய்யும் கைம்மாறு இல்லை) (எ – று)

அல்ல அல எனவும்; உய்ய உயவெனவும் செய்ய செய வெனவும் உள்ளம் உளமெனவும் செய்யுளாதலின் இடை குறைந்து நின்றன. இங்கு, சுந்தரமூர்த்தி நாயனாரின் திருக்கழிப்பாலைத் திருப்பதிகம் உணர்தற்பாலதாம் பதிகம் வருமாறு.

திருச்சிற்றம்பலம்

எங்கேனும் இருந்துன்னடியேன் உனை நினைத்தால்
அங்கே வந்து என்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என் வினையை அறுத்திட்டு எனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

திருச்சிற்றம்பலம் 27

(சூல பாணியை ஏத்துமின் பவம் இல்லை)

28 வட்டூர் இருந்தருள் தெய்வத்தை
வான்மறை யுட்பொருளை
மட்டூர் குழலுமை பாலனை
மாதவத் தோர்புகலை
எட்டூர் புகழப் பிராட்டி
யிருந்து துயரதெல்லாம்
அட்டூர் திரிசூல பாணியை
ஏத்தும் பவமிலையே.

(ப - ரை)

வட்டூர் இருந்து அருள் தெய்வத்தை = வட்டுக்கோட்டையில் அமர்ந்து வேண்டுவ வேண்டினர்க்கு உதவியருளும் தெய்வமாகிய வைரவ சுவாமியை; வான் மறை உட்பொருளை = வேதங்களின் உட்பொருளாக விளங்குபவரை; மட்டூர் குழல் உமை பாலனை = தேன்பிலிற்றும் மலர்மாலை சூடிய கூந்தலினராய உமையம்மையார் தந்த திருக்குமாரரை; மாதவத்தோர் புகலை = மிக்க தவத்தினருக்குப் புகலிடமாக விளங்குபவரை; எட்டூர் புகழ் பிராட்டி இருந்து = எண்திசையும் பரவப், பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட; துயரதெல்லாம் அட்டூர் திரிசூல பாணியை = தமது அடியார்களுக்கு வரும் துயரங்களை அழித்தருளும் மூவிலைச் சூலத்தைக் கையில் ஏந்தியவரை; ஏத்தும் = தொழுது வணங்குங்கள்; பவம் இல்லை = நுந்தமக்கு இனிப் பிறவி நோய் இல்லையாம். (எ - று)

புகழ் = பற்றுக் கோடு. பாணி = கைத்தலம் பினாக பாணி சக்கரபாணி முதலியவற்றை நோக்குக. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வறிது நகை தோற்றல்)

29 பவமே புரியெனை யாண்ட
வடுகன் பதிவரையில்
அவமே திரிந்தெய்த் தனமெனுங்
காளை அகமகிழ
நவமே புரிகுழல் நங்கைநல்
லாளும் நயந்துவந்து
சிவமே தருந்திரு என்னக்
குறுநகை செய்தனளே.

(ப - ரை)

பவமே புரிஎனை ஆண்ட வடுகன் பதிவரையில் = பாவங்களையே செய்யும் என்னையும் அருள் கூர்ந்து அடிமை கொண்ட வைரவப் பெருமானாரின் வட்டூர்ப் பதி மலையிடத்தே; அவமே திரிந்து எய்த்தனம் எனும் காளை = வீணே, தலைவியின் பின்னே திரிந்து அவள் நல்லெளி இன்றுவரை பெறாது வருந்தி இளைத்தோம் எனும் இளைஞனாகிய தலைவன்; அகம் மகிழ = உள மானது பூரிப்படைந்து மகிழ்கொள்ள; நவமே புரிகுழல் நங்கை – புதுமை மிக்கதாகப் புரியப்பட்ட அளக பாரத் தினை உடைய மகளிருள் சிறந்தாளாய தலைவி; உவந்து நயந்து = மகிழ்ந்து விரும்பி சிவமே தரும் திரு என்ன = சிவபிரான் ஈந்தருளும் செல்வம் என்னும் பாராட்ட; குறு நகை செய்தனள் = புன்னகை புரிந்தாள். (எ - று.

பவம் இங்கு தீச்செயல்களைக் குறித்தது; இச் செய் யுள் வறிது நகை தோற்றல் என்னும் துறை மேலது. தலைவி உடன்பாட்டினை உணர்த்திய வாறாம். வறிது = சிறிது என்னும் பொருளில் வந்தது. 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐயனைச் சேவிக்க அகம் உவந்து வாரீர்)

30 செய்யனைச் சேத்திர பாலனைச்
சேர்ந்தார்க்குச் செம்பொருளை
மெய்யனை வட்டூரில் மேவிய
அண்ணலை வித்தகனை
வெய்யனை நண்ணார்க்கு மேவினர்க்
கின்பம் விளைப்பவனை
ஐயனைச் சேவிக்க வாரீர்
புலவீர் அகமுவந்தே.

ப-ரை

புலவீர் = அறிஞர் உள்ளீர்; செய்யனை = செம்மேனி எம்மானை; சேத்திர பாலனை = தலம் காவலனை; சேர்ந்தார்க்கு செம்பொருளை = தமது திருவடிகளை இடையறாது நினைவார்க்கு வளமான செல்வமானானை; மெய்யனை = எல்லா உலகங்களும் எல்லாப் பொருள்களும் அழியும் காலத்தும் அழியாது தானொருவனே உள்பொருள் ஆனானை; வட்டூரில் மேவிய அண்ணலை = வட்டூரில் கோயில் கொண்ட எம் தலைவராகிய வைரவமூர்த்தியை, வித்தகனை = அறிவாற்றல் மிக்கவனை; நண்ணார்க்கு வெய்யனை = தன்னை அடையா தாருக்கு நலம் செய்யா தவனை; மேவினர்க்கு இன்பம் விளைப்பவனை = தன்னை அடைந்தார்க்கு நலம் செய்பவரை; ஐயனை=எமக்குத் தலைவராக இருப்பவனை; சேவிக்க = கும்பிட்டேத்த; அகம் உவந்து வாரீர் = மன மகிழ்வுடனே அன்பருள்ளீர் வாருங்கள் (எ - று)

வித்தகம் = கலை மேம்பாடு. சதுரப்பாடுமாம். ஐயன் தலைவன்; அழகனுமாம்.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங்கரன்" - திருவருட்பயன்
30

(நாவிலத்து நின் அடியார்க்கு எவ்வம் துன்னாது)

31 உவந்துன் திருப்பெயர் சொல்லி
நமவென உள் நினைத்தால்
பவந்துன் னவாரா அருந்துயர்
வெம்பிணி பற்றலுறா
தவந்துன் னுநற்பதி வட்டூர
வெங்கயத் தோ லுரித்தோய்
எவந்துன் னகிலா நினதடி
யார்க் கென்றும் நானிலத்தே

(ப - ரை)

தவம் துன்னு நற்பதி வட்டூர = தவமுடையோர் வாழ்கின்ற நற்பதியாம் வட்டூரில் கோயில் கொண்டருளிய வரே!; வெம்கயம் தோல் உரித்தோய் = கொடிய யானை யின் தோலை உரித்துப் போர்த்தருளியவரே; நானிலத்து நினது அடியார்க்கு = இப்பூமியின் கண்ணே தேவரீரது தொழும்பாளர்களுக்கு; உவந்து உன்திருப்பெயர் சொல்லி = மகிழ்ந்து தேவரீரது நாமமந்திரத்தை வாயினால் சொல்லி; நம என்று உள் நினைந்தால் = எந்தையே வணக்கம் என்று இதயத்தே தியானிப்பாராயின்; பவம் துன்ன வாரா பிறவிப்பிணிகள் நெருங்கி வரமாட்டா; அரும் துயர் வெம்பிணி பற்றல் உறா = வருத்தும் கொடு நோய்கள் வந்து பீடிக்க மாட்டா; எவ்வம் துன்னகிலா = வறுமை உள்ளிட்ட துன்பங்களும் வந்து எய்த மாட்டா. (எ-று)

நாம மந்திரத்தின் சிறப்பு உரைத்தவாறாம் நானிலம் என்பதன் பொருள் முன்னர் உரைத்தாம். எவ்வம் எவ மென நின்றது. 31

(வழுத்தினரர் வானின் நாயகர் போற்ற வாழ்வர்)

32 நானிலந் துன்னுநன் வட்டூர்
நயந்த வயிரவனைக்
கானிலந் தோய்வருந் தேவருங்
காண்பருங் கற்பகத்தைத்
தேனிலந் தீஞ்சுவைப் பாடல்
பலசொலித் தெண்டனிட்டால்
வானிலந் நாயகன் போற்றிட
வாழ்வர் வழுத்துமினே.

(ப - ரை)

நால் நிலம் துன்னு வட்டூர் நயந்த வயிரவனை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால் வகைநிலங்களும் செறிந்த வட்டூரைத் தமக்கு மிகவும் பிரியமான இடமாகக் கொண்ட வைரவ மூர்த்தியை; கால் நிலம் தோய்வு அரும் தேவரும் = தம் பாதங்கள் நிலத்தில் தீண்டப்படாத தேவாதியரும்; காண்பரும் கற்பகத்தை = தமது கண்களால் காண்டற்கரிய கற்பக தருவை யொத்த அருட்கொடை வள்ளலை; அம்தேனில் தீஞ்சுவைப் பாடல் பல சொல்லி = இனிய தேனினும் மாதுரியமான இனிய சுவை மலிந்த புகழ்ப்பாடல் கள் பலவற்றை வாயாற்பாடி; தெண்டனிட்டால் = வீழ்ந்து பணிந்து வணங்கினால்; வானில் அம் நாயகன் போற்றிடவாழ்வர் = அழகிய வானத்தின் அந்தத் தேவர் தலைவனாய இந்திரனும் புகழ்ந்தேத்த, வாழ்வார்கள். (எ - று)

தேவர்களுக்குக் கண்ணிமைத்தல் கால் நிலந் தோய்தல் வண்ணமலர் மாலை வாடுதல் முதலியன இல்லை என்பர். கற்பகம் விரும்பியவற்றை எல்லாம் தரும் தேவதரு இந்திரன் யாகமேம்பாட்டால் தேவர்களுக்கு அரயனா னான். 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வடுகன் முன்னே துயர்க்குலம் நீக்கினன்)

33 இன்னே வருதி இரும்பதி
காட்டுவன் என்றிசைத்தே
மன்னே யெனவெண்ணெய் நல்லூர்
மறைந்த தயாபரனார்
பின்னே அருள்செய வந்தவன்
வட்டூர்ப் பதிவடுகன்
முன்னே துயர்க்குலம் நீக்கினன்
மற்று மொழிவதென்னே.

(ப - ரை)

இன்னே வருதி = நாவலூரனே! என்பின் இப்பொழுதே வருவாயாக; இரும்பதி காட்டுவன் = எனது பெரிய இருப்பிடமாய திருவெண்ணெய் நல்லூரைக் காட்டுகின்றேன்; என்று இசைத்து = என்று கூறியருளி; மன்னே என = தாமொருவரே அனைத்து உயிர்களுக்கும் இறைவன் என்று விளக்கி; வெண்ணெய் நல்லூர் மறைந்த தயாபரனார் = திருமணப்பந்தரில்; திருமணக் கோலத்தில் நின்ற திருநாவலூரரை அழைத்துச் சென்று முதிய அந்தணக் கோலத்துடன் மறைந்தருளிய கருணா மூர்த்தியாகிய சிவபிரான்; பின்னே அருள் செய = மீண்டும் திருவருள் புரிய; வந்தவன் வட்டூர்ப்பதி வடுகன் = உதித்தருளி வட்டூரின் கண் கோயில் கொண்ட வைரவப் பெருமானார்; முன்னே துயர்க்குலம் நீக்கினன் = முன்பே அடியேங்களுடைய துன்பங்களை யெல்லாம் நீக்கி அருளினார்; மொழிவது என்னே = இனி அருளிப்பாடுகள் குறித்துச் சொல்லுவதற்கு யாது உண்டு? இல்லை. எ - று;

மற்று = இடைச்சொல், மன் = மன்னவன், சிவபிரான் சுந்தரரை திருமணப்பந்தலில் வைத்துத் தடுத்தாட்கொண்ட வரலாறு பிரசித்தம். 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மனத்தில் மன்னி இருந்து கருணை செய்தான்)

34 என்னேர் வினையேன் இயல்புண
ராதவவ் வைகலினும்
தன்னேர் அடிகள் வழுத்திப்
புகழும் தொழும்பு நல்கிக்
கன்னேர் மனத்தினும் மன்னி
யிருந்து கருணைசெய்தான்
பொன்னேர் சடைமுடி வட்டூர்
வயிரவப் புங்கவனே.

(ப - ரை)

பொன் நேர் சடை முடி வட்டூர் வைரவப் புங்கவன்= பொன்னை ஒத்த செந்நிறப் புரிசடையை உடைய வட்டூர் வைரவக் கடவுள்; என்நேர் வினையேன் = எனக்கு யானே சமானமாகிய தீவினையாளனாகிய யான்; இயல்பு உணராத அ வைகலிலும் = தக்கது இன்னது தகாதது இன்னது என்று நல்லியல்புகளை உணராத அந்த இளமைக்காலத்திலும்;தன் ஏர் அடிகள் வழுத்திப்புகழும் = தம் உடைய அழகு மிகுந்த திருப்பாதங்களைப் புகழ்ந்து வணங்கும்; தொழும்பு நல்கி = அடிமைத்திறத்தைத் தந்து; கல்நேர் மனத்தினும் = கல்லை ஒத்த தீவினையேன் மனத்துள்ளும்; மன்னி இருந்து கருணை செய்தான் = குடி புகுந்து நிலைத்து இருந்து திருவருள் சுரந்தருளினான்.

"பொன்னார் சடை மேனியன்" என்பது தேவாரம். "என்று நீ அன்று நான் நின்னடிமை அல்லவோ" என்ற ஆன்றோர் அருள் மொழி நோக்கத்தக்கது. மணிவாசகப் பெருமான் "நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாம்" என்றருளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(துதியுங்கள் திருவுறலாம்)

35 புங்கவன் காரி வடுகன்
புகலுநற் சேத்ரபாலன்
தங்கவன் வட்டூரன் சூல
கபாலன் தமருகத்தோன்
பங்கவன் பார்ப்பதி நல்கும்
பரமன் கரும்பரியோன்
துங்கவன் முத்தனென் றேத்தித்
துதிமின் திருவுறுமே.

(ப - ரை)

வட்டூர் தங்கு அவன் = வட்டுக்கோட்டை யூரில் தங்கி அருளும் அந்த வைரவப் பெருமானார்; புங்கவன் = கடவுள்; காரி, வடுகன் = காரி மற்றும் வடுகன் என்றும்; புகலும் நல்சேத்திர பாலன் = சொல்லப்படும் தலங்காவலர் என்றும்; சூல கபாலன் தமருகத்தோன் = சூல கபாலத்துடன் உடுக்கை முதலியவற்றையும் தரித்தவர் என்றும் கூறப்படுவர்; பார்ப்பதி பங்கவன் நல்கும் பரமன் = பார்வதிதேவியார் பங்கினராய சிவபிரான் தந்தருளும் மேலான பராபர மூர்த்தி; கரும் பரியோன் = கருங்குதிரையையும் ஊர்தியாகக் கொண்டவர்; துங்கவன் முத்தன் என்று ஏத்தித் துதிமின்=பரிசுத்தர், முத்தர் என்றெல்லாம் அவரது திருநாம மந்திரங்களைச் சொல்லித் தொழுது வணங்குங்கள்; திரு உறுமே = நுமக்குப் பொருட்செல்வமும் ஏனைச் செல்வ வளங்களும் கிட்டும். (எ – று)

இப்பாடலில் வைரவப் பெருமானாரின் திருப்பெயர்கள் பயின்று வந்துள்ளன. திருநாம மந்திரங்களைச் செபித்தவர் கருதிய பேறெலாம் பெறுவர் என்று கூறியவாறாம். 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சித்தன் வட்டூரில் கோயில் கொண்டதிறம்)

36 திருவுறும் வட்டூர் புரிந்த
தவத்தின் திறமதுவோ
கருவுறும் யாக்கை வெறுத்தோர்தம்
ஆசியின் காரணமோ
மருவுறும் முன்னோர் குழைந்துசெய்
பூசனை மாண்புகொலோ
உருவுறும் செஞ்சடைச் சித்தனும்
வந்தீங் குவந்ததுவே.

(ப - ரை)

உரு உறு செம் சடை சித்தனும் = அழகமைந்த சிவந்த சடையை உடைய வைரவப் பெருமானாரும்; ஈங்கு உவந்தது = வட்டூர்ப் பிராட்டியம் பதியில் மகிழ்ந்து கோயில் கொண்டருளியது; திருஉறும் வட்டூர் புரிதவத்தின் திறம் அதுவோ = கண்டாரால் விரும்பப்படும் செல்வ வளம் மிக்க வட்டூரின்கண் வாழ்வார் செய்த தவத்தின் தன்மையோ;? கருஉறும் யாக்கை வெறுத்தோர் = கருவாதையுட்படும் உடலினை வெறுத்துத் துறவறம் பூண்ட மேன்மக்கள்; ஆசியின் காரணமோ = நல்லாசியின் காரணமாக என்றுகூறலாமோ;? மருவு உறும் முன்னோர்குழைந்து செய்பூசனை மாண்பு கொல் = வட்டூரைச் சேர்ந்து வாழ்ந்த மூதாதையர் அகம் குழைந்து செய்த மலர்வழிபாட்டின் மாட்சிமையின் காரணம் கொலோ? (எதனையாம் மொழிவது. (எ-று)

தவமும் ஆசியும் பூசனையும் உதவின என்றவாறாம். உரு என்பதற்கு அச்சம் வடிவுமுதலிய வேறுபொருள்களும் உண்டு. வட்டூர்: ஆகுபெயர்; மக்களைக் குறித்தது.

36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தேர்வழி நோக்கி அலவனொடு கூறல்)

37 உவந்தனம் ஞெண்டே கொடுந்தனிக்
காலின் உயர்வு கண்டே
தவந்தனம் நீடுவட் டூரினிற்
சேர்ப்பன் தடமணித் தேர்
நிவந்தனம் கானல் திரியெக்கர்
செய்ததோர் நீள்வரையை
பவந்தனம் என்றுழல் வோரிற்
சிதையாப் பரிசருளே.

(ப - ரை)

நிவந்த நம் கானல் திரிஞெண்டே = உயர்ந்த எமது கடற்கரைச் சோலையிடத்தே திரிகின்ற நண்டே; கொடும் தனிகாலின் உயர்வு கண்டு உவந்தனம் = நினது வளைந்த ஒப்பற்ற காலினது சிறப்பைக்கண்டு மனமகிழ்வடைந் தோம்; தவம் தனம் நீடு வட்டூரினில் சேர்ப்பன் = தவ ஒழுக்கமும் செல்வச் செழிப்பும் நிலை பெற்ற வட்டூரில் துறைவனாகிய நம் தலைவனது; தடம் மணிதேர் = விசாலமான மணிகட்டப்பட்ட தேரானது; செய்தது ஓர் நீள்வரையை = உண்டாக்கிய நீண்ட கோட்டுத் தழும்பு களை; பவம் தனம் என்று உழல்வோரில் = பாபகாரியங் களே செல்வம் குவித்தற்கு வழியாகும் என்று வீணாகத் திரியும் அறிவிலிகள் போல்; சிதையா பரிசு அருள் = அழிக்காது இருத்தலை யாம் வேண்டுதும்; உதவுமின். (எ - று)

இச் செய்யுளும். அகத்துறை மேலது. தலைவனைக் குறியிடத்தே கண்டு இன்புற முடியா விடத்தும், அவனது தேர் வந்து சென்ற அடையாளமாவது தமக்கு இன்பம் விளைக்கும் என்று கண்ட தலைவி அலவனை - நண்டை - இரந்து வேண்டினாள் என்க. நிவந்த நம் கானல் என்பது எதுகை நோக்கி நிவந்தனம் கானல் என நின்றது. 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வைரவன் உளக்கோயிலில் அமர்ந்துள்ளான்)

38 அருளாற் பெரியவர் ஆகத்
தரவம் அணியழகர்
தெருளாற் கரியவர் தீவினை
தேய்க்குந் திருநகையார்
உருவாற் பெரியதோர் ஆலயத்
தன்றி உளத்திருந்தார்
திருவாற் பொலிந்துயர் வட்டூர்
வயிரவச் செம்பொருளே.

(ப - ரை)

திருவால் பொலிந்து உயர் வட்டூர் வயிரவ செம் பொருள் = செல்வவளம் மிகுந்த உயர்ந்த வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட மெய்ப் பொருளாகிய வைரவப்பெருமான்; அருளால் பெரியவர் = அடியராயினார்க்கு அருள்வழங்குவதில் மேம்பாடு உடையர்; ஆகத்து அரவு அணி அழகர் = தமது மார்பின் கண்ணே சர்ப்ப மாலையை அணிந்த பேரழகர்; தெருளாற்கு அரியவர் = அறிவுத் தெளிவற்றவர்களுக்குச் சேய்மையானவர்; தீவினை தேய்க்கும் திருநகையார் = தொண்டர்களின் கொடிய வினைகளை இல்லையாகச் செய்யும் புன்னகைப் பொலிவினர்; உருவால் பெரியதோர் ஆலயத்து அன்றி = மலைகள் போலத் தோன்றும் திருக்கோவில்களில் அன்றி; உள்ளத்து இருந்தார் = மெய்யன்பர்களது உள்ளக் கோயிலிலும் உறைந்துள்ளார். (எ - று)

இருந்தார் என இறந்த காலத்தாற் கூறினார். இறைவன் உள்ளக் கோயிலில் உறையும் உறுதி குறித்தென்க. ''மலைகள் போலத் தோன்றும் கோயில் மணி நீ உறையும் இடமோ'' என்று அன்பர் ஒருவர் இவ்வாறு வினவுகிறார். 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திரிசூல பாணியனைச், சென்று நண்ணுமின்)

39 செம்பொரு ளைச்சிறுத் தொண்டன்
மனைபுகு சேவகனை
அம்பொரு ளாக அதழுரி
போர்த்திடும் ஆருயிரை
எம்பொரு ளென்றும்பர் ஏத்து
திரிசூல பாணியனை
நம்பொரு ளாயவட் டூரனைச்
சென்றினி நண்ணுமினே

(ப - ரை)

செம்பொருளை = செம்மேனி எம்மானை; சிறுத் தொண்டன் மனைபுகு சேவகனை = பரஞ்சோதியார் என்னும் இயற்பெயர் பூண்ட சிறுத்தொண்ட நாயனாரின் இல்லத்துக்கு எழுந்தருளிய வைரவ மூர்த்தியை; அம் பொருளாக அதழ் உரி போர்த்திடும் ஆருயிரை = அழகிய பீதாம்பரமாக ஆனைத்தோலைப் போர்த்துக் கொண்ட ஆன்மகோடிகளுக்கெல்லாம் உயிர்க்கு உயிராக விளங்கு பவரை; உம்பர் = தேவர்கள் எல்லாம்; எம்பொருள் என்று = தாம் தேடும் பொருள் என்று; ஏத்து திரிசூல பாணியனை = தொழுது வணங்கும் முத்தலைச் சூலத்தைத் திருக்கரத்தே தாங்கியவரை; நம்பொருளாய வட்டூரனை = அடியாரெல்லாம் நமது செல்வம் என்று தேடிக் கொண்ட வட்டூர் வைரவப் பெருமானை; இனி சென்று நண்ணுமின் = உலகீர்; நீவிர் இனிமேலாவது சென்று தாழ்ந்தெழுந்து பணிமின். (இட்டசித்திகள் பெறலாம்) (எ - று)

சிவபெருமான் சிறுத்தொண்ட நாயனாரின் மேலான அன்பை உலகோர்க்கு எடுத்துக்காட்ட அவரது இல்லத் துக்கு வைரவக் கோலத்துடன் சென்று அருளினார். சேவ கன் - மாவீரன். 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தோழி கூற்று)

40 நண்ணுமின் தென்றல் அழலாம்
நயந்த நளிர்கடலும்
பண்ணுமின் தீங்குழல் தானும்
விடமெனும் பான்மையதாம்
கண்ணுமின் மாமதி உண்டே
கருதிற் கடும்பகையாம்
எண்ணுமின் மாலையெய் தாதவட்
டூரன்றன் ஏந்திழைக்கே.

(ப - ரை)

வட்டூரன் = வட்டூர் வைரவ மூர்த்தியினது; மாலை எய்தாத ஏந்திழைக்கு = உலாவந்த போது தோள் மாலையைத் தனக்குத் தந்தருள்வான் என்று காத்திருந்து அது கிடைக்கப் பெறாது மயக்கமுற்ற அழகிய அணிகலங்களை அணிந்த மங்கை நல்லாளுக்கு; நண்ணும் இன் தென்றல் அழலாம் = மெல்லென வந்து வீசும் தென்றற்காற்றுக் கொடு நெருப்பாகச் சுடும்; நயந்த நளிர் கடலும் = விரும்பப்படும் குளிர்ந்த கடலில் இருந்து எழும் ஓசையும்; பண்ணும் இன் தீங்குழலும் = வாசிக்கப்படும் இனிய குழலோசையும்; விடம் எனும் பான்மையதாம் = கொடிய விடமாக எழுந்து வருத்தும் இயல்பினவாம்; கண்ணும் இன்மாமதி உண்டே = கருதப்படும் குளிர் நிலவு பரப்பும் சந்திரன் உண்டல்லவா;? கருதில் கடும்பகையாம் = கருதும்கால் அதுவும் மிக்க கொடும் பகையாகும்; எண்ணுமின் = அவள் எங்ஙனம் இனி உய்வாள் என்று உணருங்கள் (எ - று)

ஏந்திழைக்கு அழலாம், விடமெனும் பான்மையதாம் கடும்பகையாம் (எங்ஙனம் வாழ்வாள் என்று) எண்ணுமின் என்று முடிக்குக. வட்டூர் வைரவன் உலாப் போந்த போது, நங்கை நல்லாள் ஒருத்தி அதனைக் காணச் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு அவன்மாலை தருவான் என்று எண்ணினாள். அது கைகூட வில்லை அவளுக்கு. தென்றல் கடலோசை குழலோசை நிலவு எல்லாம் மிக்க வேதனை அளித்தன. 40

(காரிக் கடவுள் மிடி தீர்க்க வந்தான்)

41 ஏந்து மிழையணி காமாட்சி
எந்தாய் இருந்தவத்தால்
சாந்து புனைதனத் தின்றழும்
பேற்றவன் தந்துதவப்
போந்து மலரோனை நான்முக
னாகப் புதுக்கிவட்டூர்
காந்து மிடிதீர்க்க வந்தமர்ந்தான்
காரிப் பண்ணவனே.

(ப — ரை)

காரிப் பண்ணவன் = காரி என்னும் திருப்பெயர் கொண்ட வைரவ தேவன்; எந்தாய் = எம் அன்புடைத் தாயாகிய; இழை அணி ஏந்தும் காமாட்சி = பொன்னான் இழைத்து அமைக்கப்பட்ட ஆபரணாதிகளைத் தாங்கிய காமாட்சியம்மையாரின்; இருந்தவத்தால் = பெரிய தவத்தாலே; சாந்து புனை தனத்தழும்பு ஏற்றவன் - அம்மையானவர் நதிப்பிரவாகத்தில் பிருதிவி லிங்கத்தைக் காத்தற்பொருட்டுக்கட்டி அணைத்தபோது தனங்களினால்ஏற்பட்ட தழும்புகளைத் தமது நெஞ்சத்தின்கண் தாங்கி அருளிய இறைவனானவர்; தந்து உதவ = உலகு உய்தற்பொருட்டு ஈன்றருள; போந்து = திருவவதாரம் செய்து; மலரோனை நான் முகனாகப் புதுக்கி = மலராசனராகிய பிரமதேவரை ஐந்து முகங்களுள் ஒன்றைக் கிள்ளி நான்முகத்தனாகப் புதுக்கி அருளி; வட்டூர் காந்து மிடி தீர்க்க = வட்டூர் வாழ்

வாரை வருத்தும் வறுமை நோயைத் தீர்க்க; வந்தமர்ந் தான் = திருவுள்ளம் கொடு வீற்றிருந் தருளுகின்றார். அவரை வணங்கி உய்மின்) (எ - று)

வறுமை என்பதற்குச் சான்றோர் போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்பர். வள்ளுவர் பெருமான் வறுமையை ''இன்மை யென ஒருபாவி'' என்பர். 41

(அருளுண்டு ஆதலின் துன்பமில்லை)

42 பண்ணவன் போற்றுநல் வட்டூர்
வயிரவன் பாம்பணிந்தோன்
விண்ணவன் இந்திரை கேள்வனும்
ஏத்திடும் சீர்த்தியினான்
கண்ணவன் முப்புரம் செற்றவன்
காளை கரும்பரியான்
நண்ணவன் அன்பருள் உண்டினி
யீங்கண் நவையிலையே.

(ப - ரை)

பண்ணவன் = தேவதேவன்; நல்வட்டூர் போற்று வயிரவன் = நன்மை அமைந்த வட்டூர் மக்களால் போற்றப்படும் வைரவ மூர்த்தி; பாம்பு அணிந்தோன் = சர்ப்பாபரணங்களை அணிந்தவன்; இந்திரை கேள் வன் விண்ணவன் = இந்திராணியின் நாயகனாகிய தேவேந்திரனும்; ஏத்திடும் சீர்த்தியினான் = தொழுது வழிபடும் சிறப்பு மிக்கவர்; முப்புரம் செற்றவன் கண்ண வன் காளை = திரிபுரங்களை அழித்த நெற்றிக் கண்ண ராகிய சிவபிரான் ஈன்றருளிய இளைஞன்; கரும்பரி யான் = கருநிறக் குதிரையை ஊர்தியாக உடையவன்; நண்ணு அவன் = அன்பர்கள் இதயக் கோயிலில் சேர்ந்து றையும் அவருடைய; அன்பு அருள் உண்டு = கிருபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கம் எமக்கு உண்டு; ஈங்கண் நவை இலை = அதனால் ஈங்கு யாதொரு குறையும் இல்லையாகும் (எ று)

விண்ணவன் = விண்ணகவேந்தன்; இந்திரன் கண்ணவன் நெற்றிக்கண்ணர்; இனி, கருதப்படும் தேவன் எனினுமாம்; இந்திரை கேள்வன் என்பதற்குத் திருமகள் கோன் திருமால் எனினுமாம். 42

(பணிவார் தரணிபர் ஆவர்)

43 இலையொன்று சூலப்படை யேந்து
மீசனை இன்பமிக்க
நிலையொன்று வட்டூர்ப் பிராட்டி
அமர்ந்த நிருமலனைக்
கலையொன்று உட்பொரு ளாகி
மிளிர்தரு கண்ணுதலைத்
தலையொன்று மாலையன் றன்னைப்
பணிவார் தரணிபரே.

(ப - ரை)

இலை ஒன்று சூலப் படை ஏந்தும் ஈசனை = இலைவடிவில் இயற்றப்பட்டதாகிய முத்தலையையுடைய சூலப்படையைத் தாங்கி அருளிய கடவுளை; இன்பு மிக்க நிலை ஒன்று வட்டூர் = மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்க்கைநிலை மிக்க வட்டுக்கோட்டையில் உளதாகிய; பிராட்டி அமர்ந்த நிருமலனை = பிராட்டியம் பதியில் உளதாகிய திருக்கோவிலில் அமர்ந்துள்ள மலமற்ற வராகிய வைரவ மூர்த்தியை; கலை ஒன்றும் உட்பொருளாகி மிளிர்தரு கண்ணுதலை = அறுபத்து நான்கு கலைகளின் உட்பொருளாகி விளங்கும் கண்ணுதற் பெருமானாகிய தேவதேவனை; தலை ஒன்று மாலையன் தன்னை = தலைமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்த பெருமானாரை; பணிவார் = முப்போதும் பணிவார்; தரணிபர் = மறுபிறப்பில் வேந்தராய் உலகாள்வர். (எ – று)

"கஞ்சக்கரந்தனில் மூவிலைவேல்" கல்வளை அந்தாதி கலைகள் அக்கர இலக்கணம் முதல் அவத்தைப் பிரயோகம் வரை அறுபத்து நான்கு என்பா. தரணிபர் என்பதற்கு உலகோர் என்று கொண்டு தரணியர் பணிவார் என்று முடித்தலும் ஒன்று. 43

(உலகோர் வரம் பெற வாராமை அதிசயம்)

44 பரமாய மூர்த்தியைப் பார்ப்பதி
பாலனைப் பத்திபண்ணித்
தரமாய வாழ்வினைப் பெற்றிட
எண்ணாத் தகையிலிர்காள்
சிரமாய தாழ்த்திச் சிறியரைப்
போற்றித் திரிதருவீர்
வரமாய வேண்டிட வட்டூர்
வாராமை அதிசயமே.

(ப – ரை)

பரமாய மூர்த்தியை = மேலான வைரவ மூர்த்தியை; பார்ப்பதிபாலனை = மலை அரையன் மகளாகிய உமா தேவியார் ஈன்றருளிய குழந்தையை; பத்தி பண்ணி = அன்புடன் பணிந்தேத்தி; தரமாய வாழ்வினை = சான்றாண்மை நிறைந்த நல்வாழ்வை; பெற்றிட எண்ணா = பெற்று உயர்வடைய விரும்பாத; தகை இலிர்காள் = தகுதி அற்ற மாந்தர்களே; சிரமாய தாழ்த்தி = உங்கள் தலைகளைத் தாழ்த்தி; சிறியரை = கீழ்மக்களை; போற்றி திரிதருவீர் = போற்றிப்புகழ்ந்து வீணே திரிந்து அலுக்கின்றீர்கள்; வரமாய வேண்டிட = நல்வரங்களைப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்தி கூட வட்டூர் வாராமை அதிசயம் = வட்டூர்ப் பிராட்டியம் பதியை எய்தி வழிபட வாராதிருத்தல் அதிசயத்தின் பாலதாகும். (எ - று)

தரமான வாழ்வு, அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையும் கூடிய வாழ்வு. சிறியரை என்பதற்கு சிறு தெய்வங்களைச் சேவிக்கின்றீர்கள் என்றலும் ஒன்று. 44

(வடுகனை என்றும் வாழ்த்துமின்)

45 அதிசயம் என்னே துயர்கோடி
கூடி அடைந்திடினும்
மதிசெயம் நன்னுதல் மங்கையும்
தானும் மருவிவந்து
துதிசெயம் நல்லடி யார்களை
ஓம்பிடும் தூமணியை
நதிசெயம் வேணி வடுகனை
வாழ்த்தவொர் நாளுமுண்டே.

(ப - ரை)

துயர் கோடி அடைந்திடினும் = துன்பங்கள் கோடானுகோடி வந்த போதும்; மதிசெய் அம் நன் நுதல் மங்கையும் = சந்திரனை ஒப்பத் தண்ணளி செய்யும் அழகிய நல்ல நெற்றியை உடைய சாமுண்டி தேவியும்; தானும் = தேவ தேவனாகிய வைரவ மூர்த்தியும்; மருவிவந்து = இணைந்து வந்து; துதிசெய் அம் நல் அடியார்களை = தெண்டனிட்டு வணங்கும் தமது வழிவழி அடியார்களை; ஓம்பிடும் தூமணியை = பாது காத்து அருளும் பரிசுத்தமான இரத்தினம் போல் வாரை; அம் நதி வேணி வடுகனை = அழகிய கங்கையைச் செஞ்சடையில் இருத்திய கடவுளை; வாழ்த்த ஓர் நாளும் உண்டே = வழிபடுவதற்கு இது தான் நல்ல

நாள் என்று ஒன்றும் உண்டா?; என்னே! அதிசயம் = இவ்வாறு கூறுவது அதிசயமாகும்; எல்லா நாளும் வழி படற்குஉரிய நாள்களே யாகும். (எ-று)

''நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே'' என்று ஞான சம்பந்தப் பெருமான் அறிவுறுத்துதல் உணரற்பாலது.

45

(வறிஞர்களே வட்டூருக்கு வாருங்கள்)

46 நாளுள யாமிது போழ்திளை
யோமென நாண்டுறந்து
வாளுள தோகையர் தம்மோ
டிருந்த வறிஞருளீர்
தாளுள முண்டகம் கேணியில்
தீபந் தனையெடுப்பக்
கேளுள கெண்டைகள் சூழ்வரு
வட்டூரைக் கிட்டுதிரே.

(ப - ரை)

இது போழ்து யாம் இளையோம் நாளுள என = நாம் இவ் வேளையில் இளைஞர்கள் இன்னும் காலம் உண்டு என்று; நாண் துறந்து = நாணினை நீக்கி; வாள் உள தோகையர் தம்மோடு - வாள் ஒத்த கண்ணையும் - மயில் ஒத்த சாயலினையும் உடைய இளமங்கையருடன்; இருந்த வறிஞருளீர் = சிற்றின்பத்தில் ஈடுபட்டிருக்கும் வறிஞர்களாக உள்ளவர்களே; கேணியில் தாள் உள்ள முண்டகம் = நீர் நிலைகளில் முள்ளரையினை உடைய தாமரையானது; தீபம் தனை எடுப்ப = விளக் கென நின்று ஒளிபரப்ப; கேள் உள கெண்டைகள் = தம் இனத்தினுடன் கூடிய கெண்டை மீன்கள்; சூழ் வரும் வட்டூரை = நீந்தித்திரியும் நீர்வளம் சான்ற வட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை ஊரை; கிட்டுதிர் = வந்தடைந்து வைரவப் பெருமானை வழிபட்டுய்மின். (எ-று)

இளமை நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது; யாக்கை நிலையில்லாதது என்று சான்றோர் கூறுவர்.

வாளுள என்பதற்கு ஒளிபடைத்த எனினுமாம். 46

(வட்டூரன் கீர்த்தி எங்கும் எட்டும்படி ஏத்துமின்)

47 கிட்டும் உமக்கினி இன்பமெலா
மிங்குக்கே டொன்றில்லை
பட்டும் பலபல பூணும்
புனைந்திடு பாவையர் சேர்
மட்டும் மலரும் பயில்பொழில்
வட்டூரன் கீர்த்தியெங்கும்
எட்டும் படி வாழ்த்தி ஏத்துமின்
தாண்மலர்ப் போதுகளே.

ப - ரை)

பட்டும் பலபல பூணும் புனைந்திடும் பாவையர் சேர் = பட்டாடையையும் பல்வகைப்பட்ட ஆபரணாதிகளையும் அணிந்து கொள்ளும் பாவை அனைய மாதர்கள் சேர்ந்து உறையும்; மட்டும் மலரும் பயில் பொழில் வட்டூரன் கீர்த்தி = தேன் சிந்தும் மலர்களைச் சொரியும் சோலைகளைக் கொண்ட வட்டூர் வைரவ சுவாமியது சிறப்பை; எங்கும் எட்டும்படி வாழ்த்தி = யாங்கணும் அவரது மூர்த்தி தலம் தீர்த்தப் பெருமைகள் பரவும் படி போற்றி; தாள் மலர் போதுகள் = அவர்தம் அரவிந்த பாதங்களை; ஏத்துமின் = வழிபாடு இயற்றுங்கள்; இன்பமெல்லாம் இனி உமக்குக் கிட்டும் = பூவுலக இன்பங்களும் மறு உலக இன்பங்களுமெல்லாம் சித்திக்கும். இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடு ஒன்றும் இல்லை; = ஈங்கு நும் தமக்கு யாதொரு கேடுகளும் இல்லையாகும். (எ-று)

இன்பம் இகபர இன்பங்களாம்; பாவை போல்வாரைப் பாவையர் என்றார். ஆகுபெயர்; பயிலுதல் நிறைதல். 47

(அடிநினைந்து இரங்கல்)

48 போது குலாவிய சென்னிவட்
டூரன் பொழிலனிச்சம்
மீது படினும்தன் மென்பதங்
கன்றிட வெய்துயிர்க்கும்
தீது புரிவோர் மனமன
கண்டகக் கல்லுடைக்கான்
ஏது நடக்க இயலுங்கொல்
நங்காயென் ஏந்திழைக்கே.

(ப - ரை)

நங்காய் = பெண்ணே; என் ஏந்திழைக்கு = என மகளாகிய அணிகலங்கள் சூடிய தலைவிக்கு; போது குலாவிய சென்னி=கொன்றை தும்பை முதலிய பூக்களைச் சூடிய சிரசினை உடைய; வட்டூரன் பொழில் = வட்டூர் வைரவப் பெருமானின் சோலையின்கண் உளதாகிய; அனிச்சம் மீது மென்பதம் படினும் = தன் மிருதுவான கால்கள் பட்டாலும்; கன்றிட வெய்துயிர்க்கும் = அவை சிவந்து கன்றுதலால் பெருமூச்சு விடுவாள்; தீது புரிவோர் மனம் அன்ன = நாளெல்லாம் தீயனவே செய்யும் கல்லை ஒத்து மனம் போன்ற; கண்டகக் கல்லுடைக்கான் = முட் புதர்களும் பரற்கற்களும் நிறைந்த காட்டு வழியில்: ஏது நடக்க இயலும் = அவள் எப்படி நடந்து செல்ல இயலும். (இயலாது வருந்துவள் அல்லலையோ) (எ-று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் அகப்பொருள் மேலது காதலனோடு உடன் போகிய தலைவியின் பாதச்சுவட்டைக் கண்ட செவிலித் தாய் தோழியை நோக்கி, ''அவள் மெல்லடிகள் கொடிய சுரத்தில் செல்ல வல்லனவோ'' என்று இரங்கியவாறாம்; நெஞ்சத்தினைக் கல்லோடு ஒப்பிட்டுக் கூறுவது கவிமரபு. 48

(சொன் மாலை சூடி அருளும்.

49 ஏந்திழை கேள்வவட் டூர்வடுக
நின்னி யல்பினையாம்
தீந்தமிழ் கொண்டு தெரித்திடும்
செல்வி சிறிதுமிலேம்
போந்திடு மார்வந் துரந்திட
ஏதோ புகலலுற்றேம்
பாந்தள ணிந்தவ புல்லிய
வேனும் பரித்தருளே.

(ப - ரை)

பாந்தள் அணிந்தவ = சர்ப்பாபரணரே! ஏந்திழை கேள்வ = அணிகலங்களைப் பூண்டருளிய சாமுண்டி தேவியாரின் நாயகரே! வட்டூர் வடுக = வட்டூர்ப் பிராட்டியம் பதி வைரவ சுவாமியே; நின் இயல்பினை = தேவரீருடைய சொல்லுக் கடங்காத புகழை; தெரித்திடும் செவ்வி யாம் சிறிதும் இலேம் = தீந்தமிழ்ச் சொற்கள் கொண்டு விரித்து விளக்கிப் பாமாலை தொடுக்கும் தன்மை எம்மிடம் அணுவள வேனும் இல்லை. (ஆயினும்) போந்திடும் ஆர்வம் துரந்திட = இயல்பாகவே புகுந்து உளதாகிய ஆசையானது முன்தள்ள; ஏதோ புகலல் உற்றோம் = ஏதோ புன் சொற்களால் சிறிது கூறமுற்பட்டோம்; புல்லிய வேனும் பரித்தருள் = எம் பாடல்கள் உயர்ந்தன அல்ல வேனும் அடியேனிடம் தாங்கள் கொண்ட பேரன்பால் அவற்றையும் தாங்கி அருளும் சுவாமி. (எ - று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் பித்தர் சொன்னவற்றையும் பேதையர் சொன்ன வற்றையும் பத்தர் சொன்னவற்றையும் தள்ளாது உவந்து ஏற்றருளுவன் என்பது சான்றோர் கோட்பாடு **49**

(நினை அன்றி வேறு தஞ்சம் இல்லை)

50 அருளே! அகத்தில் இலங்கும்
அணிவிளக் கேயடையார்க்
கிருளே! அகந்தைக் கிழங்கினை
ஈரும் இரும்பொருளே!
தெருளே! பவக்கடல் தாண்டக்
கிடைத்த தடம்புணையாம்
பொருளே! நினையன்றித் தஞ்சமிலை:
பிள்ளை மாமணியே.

(ப - ரை)

பிள்ளை மாமணியே = பிள்ளை என்னும் சிறப்புப் பெயர் பூண்ட குருமணியே; அகத்தில் இலங்கும் அருளே= அடியார் இதயக்கோயிலில் விளங்கும் அருட்சோதியே; அடையார்க்கு இருளே = நின்னைத் தஞ்சம் என்று அடையாத கசடர்களுக்குக் காரிருள் போன்றவரே; அகந்தைக் கிழங்கை ஈரும் இரும் பொருளே; = ஆணவம் என்னும் கிழங்கினைக் கல்லி எடுத்து அகற்றும் பெரும் பெரும் பொருளாக விளங்கும் பெருமானே; தெருளே = ஞானமே வடிவானவரே!; பவம் கடல் தாண்ட கிடைத்த = பிறவிக்கடல் கடக்க அடியேங்களுக்குக் கிட்டிய; தடம் புணையாம் பொருளே = விசாலமான தெப்பம் ஆகிய பொருளே! நினை அன்றி தஞ்சம் இலை = தேவரீரை அன்றி அடியேங்களுக்குப் புகலிடம் வேறு இல்லை. (எ-று)

தெருள் = அறிவு. வைரவப் பெருமான் திருப் பெயர் களுள் பிள்ளை என்பதும் ஒன்று. சான்றோர் அகந்தையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழங்குருடன் ஒப்பிட்டுக் கூறுவர். பிறவிப் பெருங்கடல் கடக்க இறைவன் திருவடி தெப்பமாய் உள்ளது என வள்ளுவர் பெருமான் கூறினர். 50

(அனைத்தும் ஆயவன் வட்டூர் வடுகன்)

51 மணியின் ஒளிநீ மருவின்
மணநீ மகிழ்வுதரும்
பணியின் வகைநீ பகரும்
பொருணீ பரஞ்சுடரே
துணியின் மறைநீ மறைப்பொரு
ணீயெனச் சொல்லுவரால்
அணியின் னுறையுள் செறிவட்
டூரநின் அருள்வடிவே

(ப — ரை)

அணி இன் உறையுள் செறி வட்டூர் = அழகிய இனிய இல்லங்கள் நிறைந்த வட்டூர் வைரவப் பெருமானே!; அருள்வடிவே = கருணையே திருவுருவ மானவரே!; பரஞ் சுடரே = மேலான சோதி வடிவினரே!; நீ மணியின் ஒளி = தேவரீர் மணியின் ஒளி யாகவும்; நீ மருவு இன் மணம் = நீர்மலரின் = இனிய மண மாகவும்; நீ பகரும் பொருள் நீரே சாத்திர நூல்கள் விரித்து விளக்கும் மெய்ப் பொருளாகவும் உள்வீர். (மேலும்) நீ துணியின் மறை = எம் பெருமனே, முடிவு செய்யுமிடத்துச் சுயம்பு வாகிய நால் வேதங்களும்; - நீ மறைப் பொருள் என = தாங்களே வேதத்தின் உட்பொருளாகவும் உள்ளீர் என்று; சொல்லுவர் = பெரியோர் தாம் தாம் அறிந்த அறிந்த அளவு கூறுவர். (எம் பெருமானின் புகழ் எல்லையற்றது. (எ-று)

அனைத்தும் இறைவன் திரு வடிவங்களே; இறைவன் உலகுயிர்களுடன் பிரிப்பின்றி ஒன்றாய்; உடனாய் வேறாய் நிற்கின்றான் என்றபடி. 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வட்டூர் வடுகனைத் தொழுது இடராற்றுதிர்)

52 வடிவே மிகுத்துயர் குஞ்சியில்
துப்பை வரித்துமதிப்
படிவே யனசுட்டி கொண்டுபின்
பூதியிற் பொட்டுமிட்டுத்
துடியே கரந்தனில் துன்ன
அடியர் இடரிருட்கு
விடிவே எனவட்டூர் மேய
வடுகற்கண் டாற்றுதிரே.

(ப - ரை.

வடிவே மிகுத்து உயர் குஞ்சியில் = அழகு மிகுத்து விளங்கும் தமது சிறந்த குடுமியிடத்தே; தும்பை வரித்து = தும்பை மாலையைக்கட்டி; மதிப்படிவு அன சுட்டி கொண்டு = தண்ணொளி வீசும் பூரண சந்திரனை ஒத்த நெற்றிச் சுட்டியினை அணிந்து கொண்டு; பின் = அமையாமல் பின்னும்; பூதியில் பொட்டும் இட்டு = நெற்றியில் திகழும் திரு நீற்றின் கீழ்த் திலகத்தையும் அணிந்து; கரம் தனில் துடி துன்ன = திருக்கரத்தில் உடுக்கை விளங்கா நிற்க; அடியர் இருட்கு = தமது அடித் தொண்டரின் ஆணவ இருளுக்கு; விடிவே என = அது புலர எழுந்த பேரொளி பிழம்பு என; வட்டூர் மேய வடுகன் கண்டு = உலகீர் வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் வீற்றிருக்கும் வைரவப் பெருமானின் திருவோலக்கக் காட்சியைக் கண்டு; ஆற்றுதிர் = உய்தி கூடுதிர் (எ-று)

அன; அன்ன என்பதன் இடைகுறை பொட்டினைத் திலகம் என்பர்; மணிவாசகப் பெருமான் ''பொட்டணியான் நுதல் போய் இறும்'' என்று கோவையாருள் கூறுவர். விபூதி பூதி என்றாயிற்று. அது மேலான செல்வம் என்னும் பொருளதாம். இறைவன் திருக்கோலத்தைக்காண மனித்தப் பிறவியும் வேண்டுவதே என்பர். அப்பரடிகள். 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வடுக வைரவன் ஆற்றார் அவலம் துடைப்பான்)

53 ஆற்றார் அவலந் துடைப்பார்
அயனார் கபாலமதை
ஏற்றார் இடக்கை இலங்க
எடுத்தனர் மூவிலைவேல்
தேற்றார் தெளிய வலத்தே
தமருக மேந்தினரால்
மாற்றார் பணியுமெம் வட்டூர்
வடுக வயிரவனே.

(ப - ரை)

மாற்றார பணியும் எம் வட்டூர் வடுக வயிரவன் = மாறுபட்ட உள்ளத்தினரும் மாண்புறு பதி என்று புகழும் எமது வட்டுக்கோட்டை யூரில் கோயில் கொண்ட வடுகனாகிய வைரவப்பெருமான்; அயனார் கபாலம் அதை இடக்கை ஏற்றார் = பிரமகபாலமதைத் தமது இடத்திருக் கரத்தில் ஏற்றருளினார்; மூவிலைவேல் இலங்கவலக் கரத்தே எடுத்தனர் = திரிசூலத்தை விளங்கும் படியாக வலக்கரத்தே எடுத்தருளினார்; தேற்றார் தெளிய = தம்மைப் பரம் பொருளென்று தேறாதாரும் தெளிவடையும் வண்ணம்; தமருகம் ஏந்தினர் = வலத்திருக்கரத்தே உலக சிருட்டிக்கு ஏதுவாய உடுக்கையைத் தரித்தருளினார். ஆற்றார் அவலம் துடைப்பார் = அவர் பிறவிச்சுழியில் அகப்பட்டுத் தவிப் போரின் துன்பத்தை நீக்கி அருளுவார் (சென்று தொழு மின்) (எ று)

மாற்றார் பணியும் என்னும் அடையை வட்டூருக்கு ஏற்றுக. தன்மாத்திரை யாகிய சத்தத்தில் இருந்தே ஆகாயம் என்னும் பூதம் தோற்றும். பின்பு ஏனைய ஆன்ம தத்துவங்களும் வித்தியா தத்துவங்களும் சிவதத்துவங் களும் தோன்றும் என்பர்; 53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உயிரவை வாழக் கஞ்சுகம் புனைந்தனை)

54 வயிரவ நின்றன் கழுத்தில்
வளரும் பளிங்குவடம்
செயிரவை தீர்க்கும் சினந்த
கரிதரு கஞ்சுகந்தான்
உயிரவை வாழப் புனைந்ததென்
றீங்கியாம் ஓர்ந்துகொண்டோம்
வயிரவை பம்பிட வட்டூர்
அமர்ந்தநம் வாழ்முதலே.

(ப - ரை)

வயிர் அவை பம்பிட வட்டூர் அமர்ந்த நம் வாழ் முதலே = பல்வேறு வாத்தியக் கருவிகளும் ஒலிப்ப வட்டூர்த் திருத்தலத்தில் கோயில் கொண்டு அமர்ந்து அருளிய எங்கள் வாழ்முதல் ஆனவரே; வயிரவ = வைரவன் என்னும் திருப் பெயரினரே; நின் கழுத்தில் = தேவரீரது திருக்கழுத்தின் கண்ணே; வளரும் பளிங்கு வடம் = கிடந்து ஒளி கூட்டும் பளிங்கு மாலையானது; செயிர் அவை தீர்க்கும் = அடியாரிடத்துள்ள குற்றங்களை எல்லாம் இல்லை யாகும்படி செய்யும்; சினந்த கரிதரு கஞ்சுகம் = கோபித்தெழுந்த யானையின் தோலை உரித்துக் கொண்ட சட்டை யானது உயிரவை வாழப் புனைந்தது என்று = உயிர்க்குலம் முற்றும் அகந்தை நீக்கி நல்வாழ்வு வாழ அணிந்து கொண்டது என; ஓர்ந்து கொண்டோம் = உணர்ந்து கொண்டோம்.

தான் அசை, செயிர் குற்றம். மலக்குற்றம் கஞ்சுகம் — சட்டை, குப்பாயம் என்றும் கூறுவர். ஓர்தல் - ஈங்கு உணர்ந்து தெளிதலாகும். 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(துன்பத்தில் அருட் புணை யானவன்)

55 வாழ்முத லாயவன் வான
வரும்புகழ் வள்ளலவன்
தாழ்வரு செஞ்சடை வேணியன்
தந்த சுடர்க்கடவுள்
ஏழென நின்ற புடவி
யனைத்தும் இயக்குமுன்பன்
ஆழ்தரு துன்பத் தடியருக்
கொன்றாம் அருட்புணையே

(ப — ரை)

தாழ்வரு செஞ்சடை வேணியன் = தாழ்ந்து தொங்குகின்ற சிவந்த சடைமுடியை உடைய சிவபெருமானார்; தந்த சுடர்க் கடவுள் = உலகு உய்யும்படி ஈன்றருளிய ஒளி மயமான தேவன்; வாழ் முதல் ஆயவன் = தன் அடியார் குழாத்துக் கெல்லாம் இன்ப வாழ்வுக்கு மூலப் பொருளாக விளங்குபவன்; வானவரும் புகழ் வள்ளல் = மனிதரன்றித் தேவாதியரும் புகழ்ந்து போற்றும் அருட் கொடையாளர்; ஏழு என நின்ற புவி அனைத்தும் = ஏழாகக் கூறும் உலகு அனைத்தையும்; இயக்கும் முன்பன் = படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளி விளையாடும் வலிமை உடையோன்; ஆழ்தரு துன்பத்து அடியருக்கு = துன்பக்கடலுள் மூழ்கி வருந்தும் அடியார்களுக்கு; ஒன்று ஆம் அருட்புணை = ஒப்பற்று விளங்கும் திருவருள் தோணி ஆவர். (எ-று)

தாழ்வு அரு எனப்பிரித்து, குற்றம் அற்ற சடையோன் என்றலும் ஒன்று. புவி எழு ஆவன: பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் முதலியனவாம். இனி "ஏழுடையான் பொழில் எட்டுடையான் புயம்" (திருக்கோவையார்) ஏழ் பொழில்களையும் ஏழுலகம் எனலுமாம் நாவல், இறலி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்பன வாம். இவை தீவு எனவும் படும். 55

[பஞ்சபூத வடிவின் பணிமின்]

56 ஒன்றே யெனும்வான் இரண்டே
வளிமற்றும் மூன்றனலாம்
நன்றே புகன்றிடு நான்கைந்
தெனவரு நீர்நிலனும்
என்றே இயன்றான் குணங்குறி
இல்லா இயல்பினனால்
குன்றே யனைய தளியமர்
வட்டூரின் கோனிவனே.

(ப - ரை)

குணம் குறி இல்லா இயல்பினன் = குணமும் குறிகளும் அற்ற தன்மையராகிய வைரவமூர்த்தி; வட்டூரின் = வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில்; குன்று அனைய தளி = சிறுமலை என விளங்கும் திருக்கோவிலின் கண்ணே; அமர் கோன் = குணமும் குறியும் கோலமும் கொண்டு அமர்ந்த தலைவன் ஆவர்; இவன் ஒன்று எனும் வான் = ஓசையெனும் தன்மாத்திரையில் நின்றும் விரிந்த வானா கியும்; இரண்டு எனும் வளி = ஊறு எனும் தன்மத்திரை யில் நின்றும் விரிந்த காற்று ஆகியும்; அனலாம் = ஒளி யென்னும் தன்மாத்திரையிலும் நின்று விரிந்த தீயாகியும்; நன்றே புகன்றிடு நான்கு நீர் = இனிது என இயம்பப்படும் சுவை என்னும் தன்மாத்திரையில் நின்றும் விரிந்த நீர் ஆகியும்; ஐந்து எனவரும் நிலனும் என்று = நாற்றம் எனவரும் தன்மாத்திரையில் இருந்து தோன்றிய நிலம் என்றும்; இயன்றான் = பஞ்சபூத வடிவினனாயும் விளங்குகின்றான். (அவனைப் பணிமின்) (எ-று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மாத்திரைகளில் இருந்து பூதங்கள் தோன்றும் என்பர். மாணிக்க வாசகப் பெருமான் "...நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால் ஆய், அவை அல்லையாய் ஆங்கே கரந்ததோர் உருவே" என்று போற்றுவர். ஏகாரங்கள் எண்ணுப்பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வந்தன. ஆல் அசை. 56

(கிளி மொழிக்கு இரங்கல்)

57 இவனெம் இறையென வட்டூர்
வடுகனை ஏத்தலர்போல்
சிவனெம் பரனருள் அன்னாள்
செலவெண்ணி ஏங்குபியான்,
எவணெம் அனைசென்றாள் உண்ணும்
பருந்தெனை யார்புகல் காண
உவணெம் தமக்கெனும் கிள்ளை
மொழிக்கெவ்வா றாற்றுவனே

(ப • ரை)

எம் பரன் சிவன் அருள் அன்னாள் = எமது கடவுளாகிய சிவபிரானின் திருவருள் வடிவு கொண்டு வந்தால் அனைய எனது மாமகளின்; செலவு எண்ணி = காளை ஒருவனுடன் உடன் போகியமையை நினைந்து; வட்டூர் வடுகன் = வட்டூரில் கோயில் கொண்ட வைரவமூர்த்தியை; எம் இறை என = எமது தனிப் பெரும் தெய்வம் என; ஏத்தலர் போல் ஏங்குப் யான் = பணியாதார் படும் துன்பினைப் போல் மிக்க வேதனைப் பட்டு ஏங்குகின்ற யான்; கிள்ளை = அவள் வளர்க்கும் கிளியானது; அனை எவண் சென்றாள் = என் அன்னையாகிய தலைவி யாங்குச் சென்றாள்; எனைபருந்து உண்ணும் - என்னைப் பருந்தானது கொன்று உண்ணப் போகின்றது; உவண் எம்

தமக்கு யார் புகல் = ஐயகோ எனக்கு உவ்விடத்தே யார் தான் பாதுகாப்பு வழங்கப் போகின்றார்; எனும் மொழிக்கு = என்று கூறும் அதன் பேச்சுக்கு; எவ்வாறு ஆற்றுவன் = அதன் மொழியைக் கேட்டு யான் எங்ஙனம் ஆறுதல் அடைவேன். (ஆற்றேன், ஆற்றேன்) (எ - று)

இப்பாடல் அகத்துறை மேலது. கிளி மொழிக்கு இரங்குதல் என்னும் துறையது, பிரிவு ஆற்றாது வருந்கா நின்ற தாயானவள், மகள் சென்ற செலவு அல்லாமல், கிளியும் என் நெஞ்சை வருத்துகின்றது என இரங்கிக் கூறினாள்; அன்னை எனற்பாலது அனை எனவும், என்னை என்றற் பாலது எனை எனவும் இடைகுறைந்து நின்றன. 57

[சேவகன் இதயத் தளியில் அமர்ந்தான்]

58 ஆற்றும் பெரியர் இதயத்
தளியில் அமருநினைத்
தோற்றும் தருநிழல் யாங்கணும்
தோன்றுவை என்பதென்னே
மாற்றும் புலன்வழி யோடும்
மனத்தும் அமர்ந்தனை நீ
சேற்றும் மிசையுஞ்செந் தாமரைசேர்
வட்டூர்ச் சேவகனே.

(ப - ரை)

சேற்றும் மிசையும் செந்தாமரை சேர் = நீர் நிலைகளில் உள்ளசேற்றிலும் அதன் மேற்புறத்தும்; செந்தாமரைகள் மலர்ந்து தோன்றும்; வட்டூர் சேவகனே = வட்டூர்ப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட வீரனாகிய வைரவ மூர்த்தியே; ஆற்றும் பெரியர் = சரியை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நிலைகளிலும் நின்று இனியனவே செய்யும் சான்றோரின்; இதயத் தளியில் அமரும் நினை = இதயமாகிய திருக்கோயிலிலும் இருந்து ஆடல் புரியும் தேவரீரை; சேரும் தரு நிழல் யாங்கணும் தோன்றுவை என்பது என்? = யாங்கணும் உள்ள நாவல் புளிமுதலிய மரங்களின் நிழலில் உறைகின்றனை என்று உலகோர் கூறுவது வியப்பல்லவோ; மாயுறும் புலன்வழி ஓடும் மனத்தும் = ஒரு நெறிப்படாது இந்திரியங்களின் வழிப்பட்டு இழிந்தனவே செய்யும் புல்லியள் மனத்தின் கண்ணும்; அமர்ந்தனை = விரும்பி உறைகின்றாய் அல்லவா? (எ று)

இழிந்தார் மனக் கோயிலில் அமரும் இறைவன் மர நிழலில் அமர்தல் வியப்பல்ல என்றபடி. சேவகன் - வீரன் இனி, ஆற்றும் பெரியர் என்பதற்கு இயமம் நியமம், ஆசனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம், தாரணை தியானம் சமாதி என்னும் யோக உறுப்புகளை அனுட்டித்தல் என்றுமாம். 58

(நீ இதம் புரியப் படிவம் பலவும் பரித்தனை)

59 சேவகம் பூண்டார்க் கிதமே
இயற்றிடுஞ் செம்மையினால்
பாவகம் ஆய படிவம் பலவும்
பரித்தனை நீ
நாவகம் தாயர் நவிற்ற
வுணர்ந்தனம் நாயடியேம்
காவகம் சேர்தரு வட்டூர்
அமர்ந்தருள் கற்பகமே.

(ப - ரை)

கா அகம் சேர்தரு வட்டூர் அமர்ந்தருள் கற்பகமே = சோலை இடங்களுடன் கூடிய வட்டுக்கோட்டையூரில் கோயில் கொண்டருளிய கற்பக தரு அனைய திருவருட் கொடையாளரே; நாய் அடியேம் = நாயினும் கடையாய நின் அடியர்களாய யாம்; நா அகம் தூயர் = நாநலம் வாய்ந்த விழுமியோர்; நீ = தேவரீர், சேவகம் பூண்டார்க்கு = நினக்கு அடித்தொண்டு பூண்டொழுகும் அன்பர்களுக்கு; இதம் இயற்றிடும் செம்மையினால் = நன்மையானவற்றையே அளித்தருளும் செந்தண்மையால்; பாவகம் ஆய படிவம் பலவும் பரித்தனை = தூய்மையானற் வடிவங்கள் பலவற்றையும் தாங்கியருளினீர் என; நவிற்ற உணர்ந்தனம் = கூறக்கேட்டு அறிந்து தெளிந்தோம். (எ - று)

சேவகம் = அடித்தொண்டு. இதம் இயற்றுதல் ஆன்ம கோடிகளுக்குச் சுகம் செய்தல் அதனால் சங்கரன் என்னும் பெயர் பெற்றார். படிவம் - வடிவம் ஈங்குப் பாவகம் தூய்மையை உணர்த்தி நின்றது. 56

(பதிநாடி நலியுநரே வடுகனைப் போற்றுநீர்)

60 கற்பக வேலெறி வேள்துணை
யென்னக் கழறவரு
நற்பக வன்னுறை தொல்பதி
நாடி நலியுநரே
அற்பக லாதநற் சிந்தையர்
அம்மதி போல்வதனப்
பொற்பக லாதவர் வட்டூர்
வடுகனைப் போற்றுதிரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

கல்பக வேல் எறிவேள் = கிரவுஞ்ச மலையானது பிளக்கும்படி வேற்படையைச் செலுத்திய; குகனின் துணை என கழறவரு = உடன்பிறந்தோன் என்று கூறும்படியாகத் தோன்றிய; நல்பகவன் = இன்னருள் வளம் சான்ற தேவனாகிய வைரவ மூர்த்தி; உறை தொல்பதி = அமர்ந்து அருள் கொழிக்கும் பழைமை சான்ற திருத்தலங்களை; நாடி நலியுநரே = தேடித்தேடி அலையும் நல்லடியார்களே!; அற்பு அகலாத சிந்தையர் = அன்பு நீங்காத மனத்தினரும்; அம்மதி போல் வதனம் பொற்பு அகலாதவர் = அழகிய சந்திரனைப் போன்று திருவதனத்தின் எழில் குன்றாதவரும் ஆய மங்கை நல்லார் வாழும்; வட்டூர் வடுகனை = வட்டூர்ப் பிராட்டியம்பதி வைரவப் பெருமானாரை; போற்றுதிர் = வட்டூர்ப் பதி புக்குப் பணிந்தெழுங்கள் அவன் வற்றா வளம் தருவான். (எ - று)

நலியுநரே, போற்றுதிர் என்று முடிக்க. சிந்தையர் வதனப் பொற்பகலாதவர் என்பன வட்டூருக்கு அடை. அன்பு + அகலாத, அற்பகலாத எனப் புணர்ந்தது ''கல்பக வேலெறி வேள் துணைவன்'' கல்வளை அந்தாதி. 60

சினகரம் சென்று பணியாதார் துயர்க்கடல் ஆழ்குவர்

61 போற்றி பலசொல்லி ஏதிலர்
இல்லிற் புகுந்தனந்தான்
ஏற்றி டுவோரென வண்டர்
உலாவரு பண்ணைவட்டூர்
தோற்றி யசீரார் சினகரம்
துன்னிப் பணிகிலர் தீ
தாற்றி யிறந்து பிறந்து
துயர்க்கடல் ஆழ்குவரே.

(ப - ரை)

ஏதிலர் இல் புகுந்து = அயலோர் இல்லங்களுக்குச் சென்று; பலபோற்றி சொல்லி = கற்பகதருவே காமதேனுவே எனப்பல துதி வாசகங்களைக் கூறி; அன்னம் ஏற்றிடுவோர் என = உணவினைப் பெற்றுண்ணும் யாசகர்களை ஒப்ப; வண்டர் உலா வருபண்ணை வட்டூர் = வண்டுகள் மலர்களில் படிந்து இசை பாடித் தேன் உண்டு உலாவும் வயல்கள் சூழ்ந்த வட்டுக்கோட்டையூரின் கண்ணே; தோற்றிய சீரார் சினகரம் = சிறந்து காணப்படும் பெருமை மிக்க தேவாலயத்தை; துன்னி பணிகிலர் = மடவோர் சென்றடைந்து வைரவப் பெருமானைப் பணிகின்றார்கள் இல்லை; தீது ஆற்றி = அந்தோ நாளெல்லாம் தீயனவே செய்து; இறந்து பிறந்து = செத்தும் பிறந்தும்; துயர் கடல் ஆழ்குவர் = துன்ப சமுத்திரத்துள் மூழ்கி ஒழிகின்றனர் (அவர் செயல் இருந்தவாறு நன்று) (எ - று)

அன்னம் எனற்பாலது இடைகுறைந்து அனம் என நின்றது. வண்டர் போல் வண்டுகளை யாசகர்களுக்கு ஒப்பிட்டார். உவமை யணி; வைரவப் பெருமான் திருக்கோயிலை வலம் வந்து பாடிப்பணிந்து ஆக்கையாற் பெறும் பயனை அனுபவித்திலர் என்றவாறாம். 61

(திருத்தொண்டர் புகழ் நட்டவரைப் போற்றுமின்)

62 ஆழ்ந்த நறும்புனற் கூவம்சேர்
வட்டூர் வடுகனன்று
சூழ்ந்த பெருங்கண மின்றிச்
சிறுத்தொண்டர் இல்புகுந்து
தாழ்ந்த செயலினர் மாசு
தடிந்து சைவத்துறையில்
வாழ்ந்த திருத்தொண்டர் வண்புகழ்
நட்டார் வணங்குமினே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

ஆழ்ந்த நறும்புனல் கூவம் சேர் வட்டூர் வடுகன் = ஆழமானதும் இனியதும் ஆன நீரினை உடைய கிணறு களைத் தன்னகத்தே கொண்ட வட்டூர்ப் பிராட்டியம்பதி வைரவப் பெருமான்; அன்று = முன்பு ஒருகாலத்தில்; சூழ்ந்த பெரும் கணம் இன்றி = சுற்றி நின்று ஏவல் கேட்கும் பூதகண வீரர்கள் இல்லாது தனித்து (பைரவக் கோலத் துடன்) சிறுத்தொண்டர் இல்புகுந்து = பரஞ்சோதியார் என்னும் இயற்பெயர் பூண்ட சிறுத்தொண்ட நாயனாரின் திருமனையுட் புகுந்து; தாழ்ந்த செயலினர் = பரசமயத் தினரின், மாசு தடித்து சைவத்திரு நெறியைத் தூற்றும் மனமாசை அகற்றி; சைவத் துறையில் வாழ்ந்த திருத் தொண்டர் = சைவத்துறையில் வாழ்ந்த சிவனடியார்கள்; வான்புகழ் = எத்தொழிலைச் செய்திடினும் ஏதவத்தைப் பட்டிடினும் சித்தம் சிவமாயவர் என்ற மேம்பட்ட புகழை; நட்டார் = சிறுத்தொண்ட நாயனாரின் தவப்புதல்வனாய சீராளனை உயிர்பெற்று எழ அருள் செய்து நிலைநாட்டி அருளினார்; வணங்குமின் = எம் பெருமான் மேற்கொண்டு எழுந்தருளிய வைரவத் திருக்கோலத்தை அகத்திருத்தி வழிபாடு செய்யுங்கள். (எ – று)

சிறுத்தொண்டர் பாரம் ஈசன் பணி என்று வாழ்ந்தவர். தென்னவனுக்காய் வடபுலம் சென்று வாதாபித் தொன் னகரம் துகளாக்கிய மாபெரும் வீரர். 62

(மலர்த்தாள் கிட்டாத நுண்பொருள்)

63 வணங்கிய தாமரை கண்டு
நகைத்து வயன்மகளிர்
பிணங்கிய முத்தங் களைந்து
விளையாடு பெற்றிவட்டூர்
இணங்கிய சீர்த்தி வயிரவ
நாதன் இணைமலர்த்தாள்
நுணங்கியகேள்வி உடையார்க்குங்
கிட்டாத நுண்பொருளே.

(ப - ரை)

வயன்மகளிர் = வயலிலே களைபறிக்கும் பெண்கள்; வணங்கிய தாமரைகண்டு = தமது முகத்தின் எழிலுக்குத் தோற்றுத்தலைத் தாழ்ந்திப் பணிந்த தாமரைப்பூக்களைக் கண்டு; நகைத்து = வெற்றிக்களிப்பால் இகழ்ந்து சிரித்து; பிணங்கிய = தமது பல்லின் எழிலுடன் மாறுபட்ட; முத்தம் களைந்து விளையாடும் பெற்றி வட்டூர் = முத்துக்களைக் கொய்து விளையாடும் இயல்பை உடைய வட்டூரில்; வைரவ நாதன் = வைரவப் பெருமானின்; இணைமலர் தாள் = இரு மலர்களை ஒத்த திருவடிகளின்; இணங்கிய சீர்த்தி = ஒன்று பட்ட மகத்துவம்; நுணங்கிய கேள்வி உடையார்க்கு = நுணுகி ஆராய்ந்து கேட்டுத் தெளிந்த பேரறிவாளருக்கும்; கிட்டாத நுண்பொருள் = அறியப் படாத நுட்பம் உடைய சிவஞானமாகும். (எ-று)

வயன், வயல். போலி வயலில் தலைசாய்ந்து நின்ற தாமரைக்கும், சிந்திக்கிடக்கின்ற மற்றும் முத்திற்கும் புலவர் தாமாகத், தோற்றமையாகிய காரணத்தை ஏற்றி உரைத்தார், தற்குறிப்பேற்ற அணியாம். திருவடி சிவஞான மாகும். முத்துப்பிறக்கும் இடங்களுள் தாமரையும் ஒன்று என்பர். 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காரி, அகத்தில் ஒளியாய் நின்றனன்)

64 பொருளாகி போற்றும் பொருட்குண
மாகிப் புறம்பெயர்ந்தும்
இருளாகி வன்கணர் இல்லையென்
றெண்ண இகந்துநின்றும்
அருளாகி அன்பர் அகத்தனி
தன்னின் அவிரொளியாய்த்
தெருளாகி நின்றனன் காரிவட்
டூரில் கணங்களோடே

(ப - ரை)

காரி வட்டூரில் கணங்களுடன் = [redacted]வரவப் பெருமானார் வட்டூர்ப் பிராட்டியம் பதியில் பூதகணங்களுடன்; போற்றும் பொருளாகி = அடியார்கள் வழிபடும் மெய்ப் பொருளாகியும்; பொருள் குணமாகியும் = ஐம்பூதங்களின் தன்மாத்திரைகள் ஆகியும்: புறம்பெயர்ந்தும் = அவற் றிற்கு வெளியே நின்றும்; வன்கணர் = தறுகண் மாக் கள்; இல்லை என்று எண்ண = இல்லையென் றெண்ண; இருளாகி இகந்து நின்றும் = அவிச்சையாகிக் கடந்து நின்றும்; அருளாகி = திருவருளே சொரூபமாகி நின்றும்; அன்பர் அகம் தனில் அவிர் ஒளியாய் = மெய்யடியார் நெஞ்சினுள்ளே சோதி வடிவினராகியும்; தெருளாகி = அறிவு வடிவினராகியும்; நின்றனன் = நானாவடிவாய் நின்று அருளாடல் புரிகின்றான். (எ-று)

ஞான சம்பந்தப் பெருமான்; ''முற்றும் நீ புகழ்ந்து முன் உரைப்பதென் முகமனே'' எனவும் நாவுக்கரசப் பெருமான் ''எல்லாம் சிவமென நின்றாய் போற்றி'' எனவும் கூறுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''மண்ணீர் தீ வளிகால் வரு பூதங்களாய்'' என்பர். மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனை ஐம்பூதங்களின் வடிவாகக் குறிப்பர். கச்சியப்ப சிவாசாரியார் இறைவன் ஞானவடிவினன் என்பர். 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நெஞ்சே இறைவனடி வாழ்த்து)

65 கணங்கண மாகக் கமுகொடு
தெங்கம் பழங்கிடப்ப
வணங்கிய மாதுளை வான்கனி
கொள்ளும் குதலைமொழி
இணங்கிய செல்வச் சிறார் பயில்
வங்டூர் இறைவனடி
மணங்கமழ் மாமலர் கொண்டு
தினமும் வழுத்து நெஞ்சே.

(ப - ரை)

நெஞ்சே. = எனது நன்னெஞ்சமே! கணம் கணமாக = கூட்டம் கூட்டமாக, கமுகொடு தெங்கம் பழம் இடப்ப' = கமுகம் பழங்களும் தெங்கம் பழங்களும் மரங்களின் அடியில் வீழ்ந்து கிடப்ப (அவற்றைக் கொள்ளாது வணங்கிய மாதுளை வான் கனி கொள்ளும் = வளைந்து கிடக்கும் மாதுளையின் சிறந்த பழங்களை எடுத்துக் கொள்ளும், இணங்கிய = அன்னை தந்தையர் பேச்சுக்கு உடன்படும், குதலைமொழி செல்வச் சிறார் பயில் = நிரம் பாமொழி பேசும் செல்வச் சிறுவர்களைத் தன்னகத்தே கொண்ட, வட்டூர் இறைவன் அடி = வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட ஞான வைரவ சுவாமியினது திருவடிகளை: தினமும் = ஒவ்வொரு தினமும் தினமும்; மணம் கமழ் = நறுமணம் வீசும்; மாமலர் கொண்டு = சிறந்த பூக்களைக் கொண்டு; வழுத்து = தூவித் துதித்து வணங்குவாயாக. (எ-று)

நாவுக்கரசப் பெருந்தகையார் ''பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் ஆக்கையால் பயன் என்'' என்று தெருட்டுவர். 65

(நின் மெய்யடியார்க்கு ஏவல் செய அருள்)

66 மணங்கமழ் மாமலர் கொண்டுநின்
றாண்மலர் ஏத்துமெய்யர்
குணங்கள் புகழ்ந்தவர்க் கேவல்
இயற்றிடுங் கொள்கை நல்காய்
நிணங்கொள் திரிசூல வட்டூர்
வடுக நிருமலனே
பணங்கொள் அராவணி பைரவ!
பூதப் படையவனே.

(ப - ரை)

பணம் கொள் அரா அணி பைரவ = படத்தை உடைய பாம்புகளை அணிகலனாகக் கொண்ட வைரவக்கடவுளே!; பூதம் படையவனே = பூதகணங்களைக், காலாட் படைகளாகக் கொண்டவரே!; நிணம் கொள் திரி சூல = கொழுப்புப் படிந்த முத்தலைச் சூலத்தைத் திருக்கரத்தில் ஏந்தியருளியவரே!; வட்டூர் வடுக = வட்டூரில் கோயில் கொண்டருளிய வைரவக்கடவுளே!; நிருமலனே = நிருமல மூர்த்தியே; மணம் கமழ் மாமலர் கொண்டு = நறு மணம் வீசும் சிறந்த பூக்களைக் கொண்டு; நின் தாள் மலர் ஏத்தும் மெய்யர் = தேவரீரது திருவடியைத் தொழுது வணங்கும் மெய்யடியார்களது; குணங்கள் புகழ்ந்து = மேம்பட்ட குணங்களை யெல்லாம் போற்றி; அவர்க்கு ஏவல் இயற்றிடும் = மெய்யடியார்களுக்குக் குற்றேவல் புரியும்; கொள்கை நல்காய் = தொண்டர்க்குத் தொண்டராம் கோட்பாட்டினையும் எளியனேனுக்குத் தந்தருளும் சுவாமி. (எ - று)

தொண்டர்க்குத் தொண்டர் ஆதல் சிவபுண்ணியத்தின் பாலதாம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தே தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியத்தை வற்புறுத்தி அருளினார். 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[விடையவன் சேய் தஞ்சம் என்று எண்ணுமின்]

67 படையவன் என்னையுங் காத்துயர்
பங்கயன் மான்முதலோர்
உடையவன் நீயெமை யோம்புதி
என்ன வுவந்தருள்வோன்
சடையவன் வட்டூர் உவந்தான்
சரதம் குளிர்நிழலாம்
விடையவன் சேய்பதந் தஞ்சமென்
றெண்ணும் வினைகெடவே.

(ப — ரை)

படையவன் = திரிசூலம் முதலிய படைக்கலங்களைத் தரித்தவன்; என்னையும் காத்து = ஒன்றும் போதா என்னையும் ஒரு பொருளாக மதித்துத் திருவருள் புரிந்து காத்து; உயர் பங்கயன் மால் முதலோர் = படைத்தும் காத்தும் உயர்ந்து விளங்கும் பிரமதேவர் திருமால்முதலியவர்கள்; நீ எமை உடையவன் = வைரவ மூர்த்தியே தேவரீர் எம்மை அடிமையாக உடையவர்; ஓம்புதிர் = எந்தமைப்பாதுகாத்து அருளும் (என்று வேண்ட); உவந்து அருள்வோன் = மகிழ்ந்து முன்பு அவர்களுக்குத் திருவருள் சொரிந்தவர்; சடையவன் = சடாபாரம் உடைமையால் அடித் தொண்டரால் சடையவன் என்று பற்றுடன் ஏத்தப்படுபவர்; வட்டூர் உவந்தவன் = வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியைத் தமக்கு உவப்பான திருப்பதியாகக் கொண்டு மகிழ்ந்தவர்; சரதம் குளிர் நிழல் = கொடு வினைக் கோடையில் வருந்துவார்க்கு அவர் உண்மையாகக் குளிர் நிழலாவார்; விடையவன் சேய் = சிவபிரானாரின் திருக்குமாரர்; வினைகெட = வெவ்வினைகள் கெட்டு ஒழிய; பதம் தஞ்சம் என்று எண்ணும் = அவருடைய திருவடிகளே பற்றுக்கோடு என்று எண்ணி வழிபடுமின். (எ — று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர்; இறைவனை குளிர்தரு என்றும்! தரு நிழல் என்றும் வழுத்துவர். சரதம் = உண்மை தஞ்சம் = அடைக்கலம். 67

(வினையின் பிடிதனில் நன்றருள்வான்)

68 வினையின் பிடிதனில் வெந்துறும்
போழ்தினில் வேண்டினர்பால்
நனையின் மலர்க்குழல் நங்கையொடும்
போந்து நன்றருள்வான்
புனையின் புயமிசை சூலக
பாலம் பொருந்துமையன்
மனையின் வளமலி வட்டூர்
வயிரவச் செம்பொருளே.

(ப - ரை)

புனை இன் புயம் மிசை = அலங்கரிக்கப்பட்ட இனிய திருக்கரத்தின் கண்; சூல கபாலம் பொருந்தும் ஐயன் = முத்தலைச் சூலமும் கபாலமும் கொண்ட எம் தலைவர்; வளம் மலி மனையின் வட்டூர் வயிரவச் செம்பொருள் = பல்வகை வளங்களும் நிறைந்த இல்லங்களுடன் கூடிய வட்டுக்கோட்டையில், கோயில் கொண்ட வயிரவ மூர்த்தியாகிய பரம் பொருள் ஆவர்; வினையின் பிடிதனில் வெந்து உறும் போழ்தினில் = அவர் அடியராயினார் தீவினையின் பாற்பட்டு நொந்தழியும் காலத்திலே; வேண்டினர் பால் = எந்தாய் எம்மைக் காத்தருளும் என்று துதித்தோரிடத்து; நனை இன் மலர் குழல் நங்கையொடும் போந்து = தேன் மலிந்த இனிய மலர் மாலையை அணிந்த கூந்தலை யுடைய சாமுண்டி தேவியாரொடும் எழுந்தருளி; நன்று அருள்வான் = துன்பம் துடைத்து இனிதே அருள்வான். (எ-று)

மணிவாசகப் பெருமான் ''தொழுத கை துன்பம் துடைப்பாய் போற்றி'' என்பர் நனை - தேன். 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வைரவனை வட்டூரில் ஏத்துமின்)

69 செம்பொருள் கண்டனம் யாமென
நாப்பறை செப்பிடுவீர்
நம்பொருள் ஆயநல் ஆதிரை
நாயகன் நல்குகனி
உம்பர்கள் வெள்கிடக் கொண்ட
உரவோன்றன் பின்னவனை
இம்பர்கள் போற்றுவட் டூரினிற்
சென்றுகண் டேத்துமினே.

(ப - ரை)

யாம் செம்பொருள் கண்டனம் என = நாம் ஞான நூல்களை ஓதி உணர்ந்து எது மெய்ப்பொருள் என அறிந்து கொண்டோம் என்று; நாபறை செப்பிடுவீர் = வாய்ப் பறை சாற்றித்திரியும் மாக்களே; நம் பொருள் ஆய நல் ஆதிரை நாயகன் = அடியார்கள் எல்லாம் சிவனே எம் பொருள் என்று கூற நின்ற திருவாதிரை நாளுக்கு உரிமை பூண்ட தலைவர்; நல்கு கனி = தமது திருக்கரத்தில் இருந்த மாதுளம் பழத்தை; உம்பர்கள் வெள்கிட கொண்ட உரவோன்தன் = அம்மை அப்பரே உலகென்று உணராத தேவர்கள் வெட்கம் அடைய, சிவனையும் உமையையும் வலம் வந்து பெற்றுக் கொண்ட வலிமை சான்ற கணேசப்பெருமானின்; பின்னவன் = தம்பியாக அமைந்த வைரவ மூர்த்தியை; இம்பர்கள் போற்று வட்டூரில் = இவ்வுலகோர் புகழ்ந்து போற்றும் வட்டுக்கோட்டைப் பிராட்டியம்பதியில்; சென்று = புகுந்து; கண்டு = திருவோலக்கக் காட்சியைக் கண்களால் கண்டு; ஏத்துமின் = தொழுதெழுமின். (அப்போது உண்மைப் பொருளை உணர்வீர். (எ று)

செம்பொருள் - செம்மேனி எம்மான். ''ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளான்'' மணிவாசகம். 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஏத்தும் அடியார் மனவிருள் மாற்றும் இளவெயில்)

70 ஏத்தும் அடியர் மனவிருள்
மாற்றும் இளவெயிலே
சாத்தும் சிறுபிறை வேணிய
சான்றோர் தழுவுவட்டூர்க்
கூத்த! குமர நின்பத்ம
பதங்களுக் கெப்பொழுதும்
கோத்த வடைமாலை யன்றிக்
கவிமாலை சூட்டுவனே.

(ப - ரை)

ஏத்தும் அடியர் மன இருள் மாற்றும் இளவெயிலே = புகழ்ந்து போற்றும் நல்லடியார்களது உள இருளை நீங்கச் செய்யும் இளவெயில் போல்பவரே!; சிறு பிறை சாத்தும் வேணிய = பால சந்திரனை அணிந்த திருச் சடையினரே; சான்றோர் தழுவு வட்டூர்க் கூத்த = மேன் மக்கள் வாழ்கின்ற வட்டுக்கோட்டை யூரிலுறையும் நடன மூர்த்தியே!; குமர = சிறப்பாகக் குமரன் என்னும் பெயரைத் தாங்கிய வைரவக் கடவுளே!; நின் பத்ம பதங்களுக்கு; = தேவரீரது தாமரைப்போது அனைய திருவடிகளுக்கு; எப்பொழுதும் = எஞ்ஞான்றும்; கோத்த வடை மாலை அன்றி = கோக்கப்பட்ட வடை மாலை அல்லாது; கவிமாலை சூட்டுவன் = பாமாலையும் அணிவித்து மகிழ்வேன் (எ-று)

மன இருள் = அவிச்சை, குமரன் வைரவ மூர்த்தியின் திருப்பெயர்களுள் ஒன்று. கவிமாலை சொன்மலர்களால் தொடுக்கப்படுவது. பூமாலை வாடும்; பொன்மாலைக்கு மணம் இல்லை; பாமாலை ஒன்றே ஈசனுக்கு உவந்த தென்பர். 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(செவிலி கூற்று)

71 சூட்டு நறுஞ்சுவைப் பாகினும்
விஞ்சிய தீந்தமிழின்
பாட்டு விழைந்தவன் வட்டூரன்
தோண் மாலை பற்றலொல்லாள்
வேட்டு நினைந்துகும் வாழலேன்
என்று விளம்பிநையும்
நாட்டு நமக்கோர் பெரும்பழி
மாது நயந்ததுவே.

(ப - ரை)

மாது = எமது கோமகளானவள்; நறுஞ்சுவைப் பாகினும் விஞ்சிய தீந்தமிழின் பாட்டு சூட்டு விழைந் தவன் = இனிய சுவையை உடைய பாகையும் வென்ற இனிய தமிழ் மொழியாலான பாடல் களைச் சூட்டி வழிபடுதலையே பெரிதும் விரும்பியவன்; வட் டூரன் = வட்டூர் வைரவ மூர்த்தியின்; தோள்மாலை பற்றல் ஒல்லாள் = அவன் உலாவரும் போது திருத்தோள் மாலையைத் தனக்கு அணிப்பான் என்று காதலால் கருதி இருந்தவள் அது அமையாது போகவே; வேட்டு = அவனை விரும்பி; நினைந்து உகும் = இரவு பகலாக அவனை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிப்பாள் (அன்றி யும்) வாழலேன் என்று விளம்பி நையும் = அவனை இன்றி யான் இனி உயிர் வாழமாட்டேன் என்பாளாய் வருந்து வாள்; நயந்தது = அவ்வாறு ஒருதலைக்காமம் கொண்டுள் ளது; நமக்கு நாட்டு ஓர் பெரும்பழி = எமக்கு நாட்டின் கண்ணே ஒரு பெரும்பழி யாகும். (என்றாள்) (எ-று)

பெரும்பழி; அலராகி வளரும் என்றபடி. அம்பல் சிலர் அறிந்த நிலை; அலர் பலர் அறிந்த நிலை. 71

(சராசரமாய் உழல்போது அருள் பாய்ச்சினான்)

72 நயமேதும் இல்லாச் செகமதில்
நாயேஞ் சராசரமாய்ப்
பயமேதும் இன்றி யுழல்போழ்தும்
போந்தருள் பாய்ச்சினனால்
இயமேதும் நீங்கா திரட்டுப்வட்
டூரிடங் கொண்டமர்ந்த
செயமேதும் குன்றாத செஞ்சடை
வானவன் சேயவனே.

(ப — ரை)

இயம் ஏதும் நீங்காது இரட்டும் வட்டூர் இடம் கொண்டு அமர்ந்த = அனைத்து வாத்தியங்களும் பிரிவின்றி ஒலிக்கும் வட்டூரை, தனக்கு ஏற்றதிருப்பதி என்று கொண்டு எழுந்தருளிய; செயம் ஏதும் குன்றாத செஞ்சடை வானவன் = குறைவற்ற வெற்றி மேம்பாட்டை உடைய தேவ தேவனாகிய சிவபிரானாரின்; சேயவன் = திருப்புதல்வராகிய வைரவ மூர்த்தி; நயம் ஏதும் இல்லாச் செதுக மதில் = ஒன்றும் பயனற்ற இவ்வுலகில்; நாயேம் = நாயினும் கடைப்பட்ட யாம்; சர அசரமாய் = இயங்குவனவும் நிலைப்பனவுமாகி; பயம் ஏதும் இன்றி உழல் போதும் = பிரயோசனம் இன்றிப் பிறந்திறந்து வருந்தும் காலத்தும்; போந்து அருள் பாய்ச்சினான் = வெளிப்பட்டு எழுந்தருளித் திருவருள் சுரந்தான். (எ-று)

இன்று அருள்பாலித் தருளும் வைரவமூர்த்தி யாம் சராசரமாம் உழல் போதும் அருள்பாய்ச்சினான் என்க. செஞ்சடை வானவனின் சேய் என்க. மணிவாசகப் பெருமான், புல்லாகிப் பூடாய், புழுவாய், மரமாகி பல்விருகமாகி பறவையாய்ப் பாம்பாய்க் கல்லாய் மனிதராய் என்று தாவர சங்கமங்களைக் கூறுவர்; தாவரம் நிற்பன; சங்கமம் அசைவன. 72

(பண்ணவனே அருள்புரியத் தருணம் இது)

73 சேயே மணிமயில் ஊர்ந்தருள்
வேலவன் றன்றுணைவா
வேயே அனையமென் றோளி
பங்காவெரு வார்புரங்கள்
ஏயே யெனுமுன் இறுத்தருள்
ஈசன் இரும்புதல் வா
தாயே தருணம் இரங்குவட்டூர்க்
காரிப் பண்ணவனே.

(ப - ரை)

சேயே = செம்மேனியினீரே; மணிமயில் ஊர்ந்தருள் வேலவன் தன் துணைவா = அழகிய நீலமயிலில் இவர்ந்தருளும் செவ்வேட் பெருமானின் சோதரரே; வேயே அனைய மென்தோளிபங்கா - மூங்கிலை ஒத்த மென்மையான தோளினை உடைய சாமுண்டி தேவியாரை இடப்பாகம் வைத்தருளியவரே; வெருவார் புரங்கள் = அஞ்சாத அவுணர்களின் முப்புரங்களையும்;ஏ ஏ எனுமுன் இறுத்தருள் ஈசன் = என்னோ இது என்று முன் நொடிப் பொழுதில் அழித்து அருள் புரிந்த நெற்றிக் கண்ணராய சிவபிரானாரின்; இரும்புதல் வா = தனிப்பெரும் புதல்வரே; தாயே = தாயே யாகி எமை வளர்ப்பவரே; வட்டூர்க்காரி பண்ணவனே = வட்டூரில் கோயில் கொண்டருளிய காரியெனும் திருநாமம் பூண்ட தேவனே; தருணம் இரங்கு = இதுவே தக்க சமயம் எளியோமுக்கு இரங்கி அருளும் சுவாமி. (எ-று)

மணி. பச்சை நிறமுமாம். ஏ ஏ இகழ்ச்சிக் குறிப்பு. திருவருட் சான்றோர் ''தாயாய் முலையைத் தருவானே'' என்று ஏத்துவர். 73

(பற்று பாசம் முதலியன இல்லார் பாழ்மரம்)

74 பண்ணிய பாசமும் பற்றும்
பணிவும் புரிந்துணர்வும்
புண்ணிய மோடுயர் சீலமும்
கல்விப் பொலிவுமிலார்
எண்ணிய பாழ்மர மாமென்
றிசைப்பர் இரங்ககிலாய்
திண்ணிய வெல்படைச் சித்தவட்
டூரர்தம் மெய்ப்பொருளே.

(ப – ரை)

திண்ணிய வெல்படை சித்த = வலிய வெற்றி மேம்பாடமைந்த சூலப்படையினைத் தாங்கிய வைரவ சுவாமியே; பண்ணிய பாசமும் = தேவரீரிடத்துக் கொண்ட ஆசையும்; பற்றும் = அன்பும்; பணிவும் = கீழ்ப்படிவும்: புரிந்துணர்வும் = குறிப்பறிந் தொழுகும் தன்மையும்: புண்ணியம் ஒடு = புண்ணியத்துடன்; உயர் சீலமும் = உயர்ந்த ஒழுக்கமும்;கல்விப் பொலிவும் =கல்வி மேம்பாடும்: இலார் = இல்லாத மக்களை; (உலகோர்) எண்ணிய பாழ் மரம் என்று இசைப்பர் = உலகினர் நினைவில் இருத்த வேண்டிய பட்டமரமாம் என்று கூறுவர் அன்றோ!; இரங்க கில்லாய் = எந்தையே (யான் அங்ஙனம் பாழ் மரமாதல் தகுமோ?) எற்றுக்கு இரங்காதிருக்கின்றீர். (இரங்கி அருளும்) (எ-று)

இரங்கா திருத்தல் தேவரீரது பெருந்தன்மைக்குச் சாலாது. நல்வாழ்வுக்கு இறையன்பு, பணிவு, பூர்வ புண்ணியம், சீலம், கல்வி முதலியன இன்றியமையாதன.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம் - ஔவையார் வாக்கு 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மாமலர் தூவிக் கைதொழ வினைக்கட்டு அறும்)

75 மெய்ப்பொருள் நால்வர்க் கொருவட
மேவி விரித்தருளும்
எய்ப்பினில் வைப்பன வீசன்
உதவும் எழில்மதலை
துய்ப்பினும் ஏவர்க்குந் தெவிட்டா
வட்டூரன் தூமலர்த்தாள்
கைப்பனி மாமலர் தூவித்
தொழவினைக் கட்டறுமே.

(ப - ரை)

ஒரு வடம் மேவி = ஒப்பற்ற கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து; நால்வர்க்கு மெய்ப் பொருள் விரித்தருளும் = சனகாதி நான்கு முனிவோர்க்கும் சின்முத்திரை மூலம் உண்மைப் பொருளை விளக்கி அருளும்; எய்ப்பினில் வைப்பு அன ஈசன் = இளைப்புக் காலத்துக்கு என்ன ஈட்டிவைத்த சேமநிதியாகிய சிவபிரான்; உதவும் எழில் மதலை = தந்தருளிய அழகிய புதல்வர்; ஏவர்க்கும் துய்ப் பினும் தெவிட்டா வட்டூரன் = மெய்ஞ்ஞானி யருக்கன்றி ஏனையோர்களும் அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத வட்டூர் வைரவப் பெருமான்; தூ மலர் தாள் = பரிசுத்த மான மலர் போன்ற திருவடிகளுக்கு; பனி மாமலர் தூவிக் கைதொழ = அன்பருள்ளீர் குளிர்ந்த சிறந்த மலர்களைச் சொரிந்து கை கூப்பி வணங்க; வினைக்கட்டு அறும் = தீவினைகளின் பிணிப்பு நீங்கும். (எ று)

எய்ப்பினில் வைப்பு - மூலபண்டாரமுமாம், கைப்பனி மாமலர் தூவித் தொழ என்பதனை, பனிமாமலர் தூவிக் கை தொழ என்று மாற்றுக. கைப்பனி மாமலர் என்று கொள்ளின் கையினில் குளிர்ந்த சிறந்தமலர் எனலுமாம்.

75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிவனையும் வைரவனையும் வேறென்றல் ஒல்லாது)

76 வினையே கெடவெண் பொடியணி
முக்கண் விமலனொடும்
சினையே மிகுசோலை வட்டூர்
வடுகநற் செஞ்சடையாய்
எனையே அடிமைகொ ணின்னையும்
வேறென்றல் ஒல்லுவதோ
தனையே நிகர்பானு வோடொளி
வேறாங்கொல் சாற்றிடினே

(ப - ரை)

சினையே மிகுசோலை வட்டூர் வடுக = மரக்கொம்பர்கள் செறிந்த சோலையுடன் கூடிய வட்டூரில் அமர்ந்தருளிய வைரவ மூர்த்தியே; நல் செஞ்சடையாய் = நீண்ட சிவந்த சடையினை உடையவரே; வினையே கெட = தன்னைத் தொழுதெழும் அடியார்களது தீ வினை கெட; வெண் பொடி அணி முக்கண் விமலனொடும் = வெண்திரு நீற்றினை அணிந்த முக்கண்ணராகிய நிர்மல சிவனாருடன்; நின்னையும் வேறு என்றல் ஒல்லுவதோ = தேவரீரையும் அவரையும் பிறிதானவர் என்று கூறுவது அமையுமோ அமையாது, தனையே நிகர் பானுவோடு = தனக்குத் தானே ஒப்பான சூரியனோடு; ஒளி = அதன் பிரகாசம்; வேறு கொல் = வேறு ஆகுமா? ஆகாது; எனையே அடிமை கொள் = எந்தையே ஒன்றும் போதா அடியேனையும் அடிமை கொண்டருளும். எ-று

இறைவன் அடியார் வினைநீக்க விபூதி அணிதலை மாணிக்கவாசகப் பெருமான், தொழுது எழுவார் வினை நீறெழ நீறணி அம்பலவன் என்பர் - திருக் கோவையார். சிவனும் பைரவரும் ஒருவரே என முன்னரும் கூறினார். 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வைரவ மூர்த்தி ஏகனும் அநேகனும் ஆயினான்)

77 சாற்றுந் தரமல்ல வட்டூர்
வயிரவன் தண்ணருள்தான்
போற்றும் புவனமும் போகமும்
என்னப் புணர்ந்துநின்றும்
தேற்றும் வகையேக னாகியும்
தேட அநேகனுமாய்த்
தோற்றும் பலவுரு ஏற்று
விரிந்தானெந் தூமணியே.

(ப - ரை)

வட்டூர் வயிரவன் தண் அருள் = வட்டுக்கோட்டையில் கோயில் கொண்ட வைரவப் பெருமானாரின் குளிர்ந்த அருள் திறம்; சாற்றும் தரம் அல்ல = யாராலும் எடுத்து உரைக்கக் கூடிய தன்மை உடையது அன்று; எம் தூமணி = எமது பரிசுத்தமான இரத்தினத்தைப் போன்ற அப் பெருமான்; போற்றும் புவனமும் = புகழ்ந்து பேசப்படும் ஈரேழு உலகங்களும்; போகமும் = அனுபவிக்கப்படும் பொருள்களும்; என்ன புணர்ந்து நின்றும் = அவை களுடன் கூடி நின்றும்; தேறும் வகை = மெய்ஞ் ஞானியார் தெளிவடையும் வண்ணம்; ஏகன் ஆகியும் = ஏக வஸ்து வாகியும்; தேட அநேகனும் = அன்பர்களுக்கு அவரவர் விரும்பும் பல்வேறு வடிவினனுமாய்; தோற்றும் பல உரு = காணப்படும் தடத்த வடிவங்கள்பல; ஏற்று விரிந்தான் = ஏற்றருளி எங்கு மாகி நிற்கின்றான் (பணிமின்)(எ-று)

சைவசித்தாந்திகள் இறைவன் ஒன்றாய் உடனாய் வேறாகி நிற்கின்றான் என்பர். வேதாந்திகள் தத்துவம் அசி (அது நீ ஆகிறாய்) என நிற்பன் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாம மந்திரம் நவிலுமின்)

78 மணிமாலை யோடு வடைமாலை
கொண்ட மரகதத்தை
நணிமாலை காலை வணங்கு
நலஞ்செறி நண்பினரே
பிணிமாலை நீறாக ரத்தச்
சுவால சடாதரனே
அணிமாலை முக்கண்ண வட்டூர
என்றே அழையுமினே,

(ப - ரை)

மணி மாலையோடு வடைமாலை கொண்ட மரகதத்தை = அழகிய நவரத்தின மாலையுடன் வடைமாலையும் புனைந்தருளும் மரகதக் குன்றம் அனைய வைரவப் பெருமானை; காலை மாலை நண்ணி வணங்கும் = காலையிலும் மாலையிலும் அடைந்து வணங்கும்; நலஞ்செறி நண்பினரே = நன்மை பயக்கும் நண்புடைப் பெரியீர்களே; (நும்) பிணிமாலை நீறாக = உங்களின் அனைத்து நோய்களும் நீங்கும் வண்ணம்; இரத்த சுவால = செந்நிறப் பிரபை வீசுபவரே, சடாதர = சடையினைத் தரித்தவரே; அணிமாலை முக்கண்ண = அழகிய வரிசையாகக் காணப்படும் திரி நேத்திரரே! வட்டூர = வட்டூர்ப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்டவரே; என்றே அழையுமின் = என்றெல்லாம் உமது மனத்தின் கண்ணே வைரவ சுவாமியின் திருநாமங்களைச் சொரியுங்கள் (உங்கள் எண்ணம் நிறைவெய்தும். (எ று)

நண்ணி என்பது நணி என இடை குறைந்து நின்றது, இங்கு இரத்தச் சுவால ஜடாதர என்று தொடங்கும் பைரவர் தியான சுலோகம் நினைவு கூரப்படுகின்றது. 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வட்டூர்ப் பொருளை அழையுங்கள்)

79 அழைமின் வடுகனைச் சூல
கபாலனை ஆர்ப்பரித்தே
மழைமின் அனதுடி கொட்டியே
பாசமும் வாங்கினனை
குழைமின் அனைகாளி கோனை
உயிர்க்குயி ராயவனைப்
புழைமின் கரதலன் தம்பியை
வட்டூர்ப் பொருளினையே,

(ப - ரை)

வடுகனை = வடுகன் என்னும் பெயரும் கொண்ட வைரவ மூர்த்தியை; சூல கபாலனை = சூலமும் கபாலமும் தரித்துள்ளவனை; ஆர்ப்பரித்து = ஆரவாரம் செய்து; மின்மழை அன்ன துடி கொட்டி = மின்னுடன் கூடிய மேகத்தை ஒப்ப முழங்கும் உடுக்கையை ஒலி எழச் செய்து; பாசமும் வாங்கினனை = பாசக்கயிற்றையும் பிடித்தவனை; அனைகாளி கோனை = எங்கள் தாயாகிய காளிகாதேவியின் தலைவனை; உயிர்க்கு உயிர் ஆயவனை = உயிருள்ளே உயிராக விளங்கும் பரமாத்மனை; புழை மின் கரதலன் தம்பியை = துவாரத்தினையும் ஒளியினையும் உடைய துதிக்கையினராய கணேசப் பெருமானுக்குத் தம்பி யாகியவரை; வட்டூர்ப் பொருளை = வட்டூரில் உறையும் தேடக்கிடைக்காத பெரும் திரவியம் ஆயவரை; அழைமின் = அடியார்களே அவர்திருப் பெயர்களைக் கூறி அழையுங்கள்; குழை மின் = நெஞ்சம் குழைந்து தொழுங்கள் (எ-று)

அன்ன என்பது அன எனநின்றது அன்னை என்பதும் அவ்வாறே! குழைதல் = உள்ளம் குழைந்து வேண்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தலைவி கூற்று)

80 பொருளாக ஆண்ட வயிரவன்
வட்டூர்ப் புனத்திலன் றின்
அருளாக வந்தே அருள்செய்
தகன்றனன் அண்ணலினி
இருளாக உள்ளமும் வேமெமை
நீப்பின் இயைவதுகொல்
வெருளாக ஆரல்தேர் வெண்குரு
குண்டே விளம்பிலென்னே.

(ப - ரை)

பொருளாக ஆண்ட வயிரவன் = எளியேனை ஒரு பொருளாக மதித்து அடிமை கொண்டருளும் வைரவ மூர்த்தியின்; வட்டூர்ப் புனத்தில் அன்று = வட்டூரின் அகத்த தாகிய தினைப் புனத்தின் கண்ணே முன்பு; இன் அருளாக வந்து = வைரவ மூர்த்தியின் இனிய அருள் உருவெடுத்தாற் போல் வந்து; அருள் செய்து அகன்றனன் = தலைவனாகி யவன் தலையளிசெய்து எமைப் பிரிந்து சென்றான்; உள்ளமும் இருளாக வேம் = எனது உள்ள மானது இருண்டு கொதிக்கின்றது; (அவன்) எமை நீப்பின் = "நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேன்" என்று கூறிய சூளுறவைக் கைவிட்டுத் திருமணம் கொள்ளாராயின்; இயைவது கொல் = பொருந்துவது ஆகுமோ? ஆகாதே; விளம்பில் = சொல்லும் காலத்தில்; வெருளாக ஆரல் தேர் வெண்குருகு = உண்டு திளைத்து மேன் மேலும் ஆரல் மீனைத் தேர்ந்து உண்ணும் நீர்ப்பறவையும்; உண்டே = தலைவனையும் என்னையும் புனத்தில் ஒருமித்துக் கண்டதும் உண்டல்லவா? (அவையாவது சாட்சி கூறும்) (எ - று)

இதுவும் அகத்திணைப்பாலதாம். தலைவன் திருமணம் இயற்றாது காலம் நீடித்தலைக் கண்டதலைவி வருந்தித் தோழிக்குக் கூறினாள் "நின்னிற் பிரியேன் பிரிந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றேன்'' என்று கூறிய உறுதி மொழியை மறந்தார் போலும், சாட்சி ஏதும் இல்லை என்று எண்ணினரோ, ஆனால் ஆரல் தேரும் குருகுகள் ஆங்கு நின்றனவே என மொழிந்தாள். 80

[இன்னல்கள் யாவும் பொடிபடும்]

81 என்னே அதிசயம் பாபங்கள்
கோடி இயற்றினரும்
மன்னே மணியே மழபாடி
அண்ணல் மகிழ்புதல்வா
தென்னா தெனா வென வண்டிமிர்
வட்டூர்ச் சிவவடுகா
பொன்னே எனவின்னல் யாவும்
பொடியாம் நரகிலையே.

(ப - ரை)

கோடி பாபங்கள் இயற்றினரும் = பலகோடிக்கணக்கான பாபங்களைச் செய்தவர்களும்; மன்னே = எங்கள் அரசரே; மணியே = அழகிய மணி போல்பவரே!; மழபாடி அண்ணல் மகிழ்புதல்வா = பழபாடித் திருத்தலதில் வதியும் தலைவராகிய சிவபிரானார் மகிழ்ச்சி அடையக்காரணராய திருக்குமாரரே!; தென்னாதெனா என வண்டு இமிர் வட்டூர் சிவவடுகா = தென்னாதெனா என்று வண்டுகள் இசை மிழற்றும், வட்டூர்ப் பதியில் கோயில் கொண்டருளிய சிவ வடுகரே; பொன்னே = மதிப்பிடற்கரிய பொன்னை ஒத்தவரே; என்ன = என்றெல்லாம் நாவால் எடுத்துரைக்க; இன்னல் யாவும் பொடியாம் = அனைத்துத் துன்பங்களும் வெந்து நீறாகிவிடும்; நரகு இல்லை = இருள் மயமான நரகத்துன்பங்களும் இல்லையாகும்; என்னே அதிசயம் = ஈது எவ்வளவு பேரதிசயமாகும். (எ-று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரன் நாமம் நவின்றார்க்கு மலமாசு அறும் என்பதாம். "கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின், எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால், நல்லார் நாமம் நமச்சிவாயவே" என்பது தேவாரம் என என்ன என்பதன் இடைகுறை, நரகில் பலவேறு பிரிவுகள் உண்டென்பர் அவற்றுள் இருள் நரகும் ஒன்று 81

[வட்டூர துயர் தீர்த்தல் நின்பாரம்]

82 நரகின் மிகுத்த கொடுஞ்சிறைப்
பட்டு நலிபொழுதில்
விரகின் மிகுத்த தமிழ்க்கீரற்
காத்தவன் பின்னவனே!
முருகின் மிகுத்த மலர்செறி
சோலைவட் டூரநினைந்
துருகின் மிகுத்த துயர்க்குலம்
தீர்த்தனின் பாரமன்றே.

(ப - ரை)

விரகின் மிகுத்த தமிழ்க்கீரன் = அறிவான் மேம்பட்ட நற்றமிழ்ப் புலவராகிய நற்கீரதேவர்; நரகின் மிகுத்த கொடும சிறை பட்டு நலிபொழுதில் = பூதத்தினால் பிடிக்கப்பட்டு ஆங்கு, நரக உலகு தரும் கொடும் துன்பத்தினும் மிக்க துன்பத்தின் வாய்ப்பட்டு வருந்தும் வேளையில்; காத்தவன் பின்னவனே = நக்கீர தேவரை, சிறைவீடு செய்த குமரக்கடவுளுக்குத் தம்பியாகிய வைரவ மூர்த்தியே; முருகின் மிகுத்த மலர்செறி சோலை வட்டூர: = நறுமணம் மிகுத்த மலர்கள் நிறைந்த சோலையை உடைய வட்டூர்ப் பதியினரே; நினைந்து உருகின் = தேவரீரது அடியர் நும்மை எண்ணி எண்ணி உருகி ஏத்துவார்களாயின்; மிகுத்த துயர்க்குலம் = மிகுத்தெழுந்த துன்பதுயரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை; தீர்த்தல் = போக்கி அருளுதல்; நின் பாரம் = தேவரீரது கடமையாகும். (எ று)

அன்று ஏ அசை நிலை நக்கீர தேவர்; சிவபூசையின் போது சிந்தையை அலையவிட்ட சிறுசெயலுக்காகப் பூதம் அவரைச் சிறையிட்ட தென்க. பூதத்தின் பெயர் கற்சிமுகி எனவும் கூறுப. 82

[காசினிக்கு நினை அல்லாது காவல் இல்லை]

83 பாரமென் றேத்திடும் பத்தரைத்
தாங்கும் அபயகரம்
திரமென் றொன்றிலர் இன்னல்கள்
தீர்க்கும் திகழ்வரதம்
ஆரமென் றெண்ணிப் பணிபுனைந்தீர்
வட்டூர் அமலசுத
வாரமென் றுண்ணினென்? நீயன்றி
மற்றுண்டோ காசினிக்கே.

(ப - ரை)

ஆரம் என்று எண்ணிப் பணி புனைந்தீர் = இறைவா அணிகலங்கள் பல இருப்பவும் மேலானது என நினைந்துச் சர்ப்பாபரணத்தை அணிந்துள்ளீர்; அபயகரம் பாரம் என்று ஏத்திடும் பத்தரைத் தாங்கும் = அபயகர மானது தேவனே நீயே தஞ்சம் என்று தொழுது வணங்கும் நல்லடியாரைத் தாங்கிக் கொள்ளும்; திகழ்வரதகரம் = விளங்கா நின்ற வரதகரமானது; திரம் என்று ஒன்று இலர் இன்னல்கள் தீர்க்கும் = வலிமை ஏதும் அற்றாரின் துன்பங்களைப் போக்கி உதவும்; காசினிக்கே நீ அன்றி ஒன்று உண்டோ=உலகோர்க்குத் தேவரீரை அன்றி அவர் தேடிக் கொளற்பாலதாம் பொருள், பிறிது ஏதும் உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை வாரம் என்று உன்னின் என்? = தேவரீரை எம் கேண்மையாளர் என்று எண்ணினால் அதில் யாதும் தவறு உண்டே? இல்லை (எ-று)

மற்று இடைச்சொல். அபயகரம்; பயநதீர அடைக்கலம் தந்து காக்கும் கை. வரதகரம். வேண்டுவனவற்றை அள்ளி உதவும் கை. பத்தி முதிர்ந்த நிலையில் அடியார் இறைவனைத் தந்தை எசமானன் தோழன் காதலன் போன்ற நிலைகளில் வைத்து எண்ணுவர். இப்பாடலில் தோழனாக வைத்து எண்ணுகிறார். சக்கியம் என்னும் பத்திநெறி அது. இங்கு வாரம் என்று குறிக்கப்படுகின்றது. 83

(தேவனடி அன்பொடு வாழ்த்தி நினைமின்)

84 காசினி போற்ற உதித்தருள்
காந்தி மகான்புகனற
மாசினி னீங்கிய மாண்பினர்
மேயவட் டூரதனில்
தேசினி லேயுயர் கோயி
லமர்ந்தருள் தேவனடி
ஆசினி நீங்கிட அன்பொடு
வாழ்த்தி நினையுமினே.

(ப — ரை)

காசினி போற்ற உதித்து அருள் காந்தி மகான் = புவியிலுள்ளோர் போற்றும் வண்ணம் தோன்றியருளிய காந்தியடிகள் ஆனவர்; புகன்ற = எடுத்து மொழிந்த இன்னா செய்யாமை; வாய்மை, கடைப்பிடித்தலாதியாய அறத்தின் வழி நின்று; மாசினில் நீங்கிய மாண்பினர் = குற்றங்களில் நின்று விடுபட்ட பெரியோர்; மேய வட்டூரதனில் = மேவிவாழும் வட்டுக்கோட்டை யூரில்; தேசினில்

உயர் கோயில் = அருளொளி பரக்கும் திருக்கோயிலில்; அமர்ந்தருள் தேவன் அடி = கோயில் கொண்டு அமர்ந்து அருளாட்சி செய்யும் வைரவ சுவாமியாரின் திருப்பாதங் களை; ஆசினில் நீங்கிட = முக்குற்றங்களும் அகல; அன் பொடு வாழ்த்தி நினையுமின் = உண்மை அன்போடும் போற்றி நினைந்து உய்யுங்கள். (எ-று)

காந்தி அடிகள் காட்டிய நெறி காந்தீயம். அது இன்னா செய்யாமை, உண்மை கடைப்பிடித்தல் (அஹிம்சை, சத் தியாக் கிரகம்) என்பவற்றை அடிப்படையாகக் கொண் டது. ஆசு குற்றம். அவை காமம், வெகுளி, மயக்கம் என்பன. வள்ளுவப் பெருந்தகை யார்.

''காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் என்றருளி யுள்ளார்'' 84

(தயாநிதியைப் போற்றுதீர்)

85 நினையுந் தொறு நெஞ்சு நெக்கிடு
மெந்தை நிருமலன்றாள்
புனையுந் தொறும் பூதி தீவினை
யாயின பொன்றவைக்கும்
வனையுந் திரிசூலம் மூவரும்
ஒன்றாம் வகைபுகலும்
தினையுந் தரிக்கிலிர் போற்றுமின்
வட்டூர்த் தயாநிதியே.

(ப - ரை)

எந்தை நிருமலன் தாள் = எங்கள் தந்தையும் மலம் அற்றவருமாகிய வைரவ மூர்த்தியின் திருவடிகள்; நினையும் தொறும் நெஞ்சு நெக்கிடும் = நினையும் தோறும், நினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் மனம் நெகிழும்; பூதி, புனையும் தொறும் தீவினை யாயின பொன்றவைக்கும் = விபூதியானது அணியும்தோறும் அணியும் தோறும் கொடிய வினைகளைக் கெட்டொழியச் செய்யும்; வனையும் திரி சூலம் = அவர் திருகரத்தில் தாங்கிய கொற்றொழிலமைந்த முத்தலைச் சூலமானது; மூவரும் ஒன்றாம் வகைபுகலும் = முத்தொழில்களையும் இயற்றும் பிரமா விட்டுகணு உருத்திரர் ஆகிய முத்தேவரையும் ஒன்றெனக் காட்டும்; தினையும் தரிக்கிலிர் = உலகீர் தினைப் பொழுது தானும் தாமதியாதீர்கள்; வட்டூர் புக்கு தயாநிதியைப் போற்றுமின் வட்டூர் புக்கு அங்கு அமர்ந்தருளும் அருட் செல்வமாகிய வைரவ மூர்த்தியைப் போற்றித் துதியுங்கள்' எ-று

தினை வனைமுதலியன கால அளவைக் குறிக்கும் சொற்கள். முத்தேவரும் இறைவன் ஆணைவழி நின்று முத்தொழிலையும் இயற்றுகின்றார்கள் 85

(விதிவெகுளினும் மாற்றிப் புதுக்குவன்)

86 நிதியே மதுரையில் நித்தன்
உயர்சொக்கன் தந்தசெய்யாய்
விதியே வெகுளினும் மாற்றிப்
புதுக்கும் கரும்பரியாய்
கதியே கருதித் தவம்பயின்
றார்க்கருள் கற்பகமே
பதியே அடியவர் போற்றுநல்
வட்டூரிற் பாலகனே.

(ப - ரை)

அடியவர் போற்று நல் வட்டூரில் பாலக = அடியவரெல்லாம் தொழும் நன்மை அமைந்த வட்டுக்கோட்டையூரின்கண் கோயில் கொண்ட காவலரே; நிதியே = திரு

வருட் செல்வமே; உயர் மதுரையில் நித்தன் சொக்கன் தந்த எந்தாய் = கல்வி நலத்தால் உயர்ந்த மதுரை அம் பதியில் என்றும் உள்ளவராகிய சொக்கலிங்க சுவாமி; தந்த செய்யாய் = எம்பொருட்டுத் தந்தருளிய செம்மேனி யினீரே; விதியே வெகுளினும் மாற்றிப்புதுக்கும் கரும் பரியாய் = தொண்டர் மீது பழவினைதான் கோபித்து எழுந்தகாலத்தும் அதனை மாற்றிப் புதுக்க வல்லவரே! கருங்குதிரை வாகனரே; கதியே = உயிர்கள் அனைத்துக் கும் செல்கதி ஆனவரே! தவம் பயின்றார்க்கு அருள் கற்பகமே = தவம் புரிவோருக்கு அவர்கள் விரும்பிய வற்றை எல்லாம் கொடுத்துதவும் கற்பக தருவே!; பதி = தேவரீரே எங்கள் தனிப் பெரும் தலைவர் ஆவீர். (எ-று)

பாலக, செய்யாய், பரியாய், கற்பகமே (நீயே) பதி (ஆவீர்) என்று கூட்டுக ஏகாரம் தேற்றம். கற்பகம் நினைந்த வற்றை எல்லாம் தரும் தேவ விருட்சம். பால கன் ஈண்டு புரப்போன், அரசன். 86

(அலந்தாரைக் காப்பது பாரம்)

87 பாலக மேய சுவையினுஞ்
சீரிய பண்பவினைப்
பாலக மேய அடிமையைக்
காக்கும் பரிசுவட்டூர்ப்
பாலக மேய தளியில்
அமர்ந்தீர் செழும் பொருளின்
பாலக மேய வலந்தாரைக்
காப்பதும் பாரமன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

பால் அகம் மேய சுவையினும் சிரிய பண்ப = நல்லான்பாலின் சுவையிலும் மிக உயர்ந்த இனிய பண்பினரே; வினை பால் அகம் மேய அடிமையை = தீ வினையிடத்து நெஞ்சை ஒட விட்ட அடியனேனை; காக்கும் பரிசு = காக்கும் தன்மையால்; வட்டூர்பால் அகம் மேய தளியில் அமர்ந்தீர் = வட்டூரிடத்து உள தாகிய திருக்கோயிலுள் எழுந்தருளி உள்ளீர்; செழும் பொருளின் பால் = வளமான பொருட் செல்வத்தினிடத்து; அகம் மேய = எம் போன்று உள்ளத்தினை ஓடவிட்டு; அலந்தாரை = அதனால் வருந்தும் மாக்களை; காப்பது உம்பரம் அன்றே = காத்தருளுவது தேவரீரது பெரும் சுமையான கடமை யல்லவா? (எ-று)

இப்பாடல் ஆத்மார்த்த மாகவும் பரார்த்த மாகவும் அமைந்துள்ளது. பரிசு = தன்மை. அலந்தார் துயரப்படுவோர். பாரம் = சுமை. ஈண்டு கடமை. 86

(ஏழை செய் புன்கவி ஏற்றநாள்)

88 பாரமென் றாக்கை வெறுத்தவர்
தாமும் பரிசகன்று
வீரமென் றெண்ணி யறத்தாறு
வாழ்வட்டூர் வித்தகநீர்
ஆரமென் றேபுற் றரவும்
புனைந்துளிர் ஆரருளால்
ஈரமென் னெஞ்சிலா ஏழைசெய்
புன்கவி ஏற்றருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

ஆக்கை பாரம் என்று வெறுத்தவர் தாமும் = இவ்வுடலானது வெறுஞ் சுமையானது என அதனை ஓம்புதலைக் கைவிட்ட துறவறத் தோரும்; பரிசு அகன்று = அத்தன்மையில் நின்றும் நீங்கி; வீரம் என்று எண்ணி = இல்லற தருமத்தில் நின்று எதிர்வரும் தடைகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்தலே உண்மையான வீரமென உணர்ந்து; அறத்தாறு வாழ் வட்டூர் வித்தக = இல்லற தருமத்தின் கண் நின்று வாழ்வாங்கு வாழும் நல் மக்கள் நிறைந்த வட்டூரில் கோயில் கொண்ட ஞானமூர்த்தியே!; நீர் = தேவரீர்; அரவு ஆரம் என்றே புனைந்துளிர் = இறப்பவும் இழிந்த சர்ப்பத்தினை உயர்ந்த மாலையாக அணிந்துள்ளீர்; மென் நெஞ்சு ஈரமிலா = மென்மையான மனத்தே அன்பென்பது சிறிதும் அற்ற; ஏழை செய் புன்கவி = ஏழையேன் யாத்த சிறிய பாடலையும்; ஏற்று அருள் = ஏற்றுத்திருவருள் புரியும் சுவாமி. (எ-று)

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்'' என்று திருவள்ளுவப் பெருந்தகை கூறுவதும் கருதற்பாலது. இறைவன் தனிப்பெருங் கருணையாளன் ஆதலின் புன்கவியையும் ஏற்றருள்வன் என்பது தெளிவு. 88

(பொருளும் புகழும் தருவான்)

89 அருளும் பரிசிலிற் காரிக்
கடவுளிற் றெய்வமில்லை
மருளும் பிறவிச் சுழிப்பட்
டழுந்திடு மாந்தருள்ளீர்
இருளும் உளத்தினர் எய்தவொண்ணான்
வட்டூர் ஏயினனால்
பொருளும் புகழும் தருமே
புகல்வேறு தானிலையே.

(ப - ரை)

மருளும் பிறவிச் சுழிபட்டு = மயக்கம் தரும் பிறவியாகிய சுழியுள் பட்டு; அழுந்திடு மாந்தர் உள்ளீர் = வருந்தும் மனித கூட்டத்தில் உள்ளோரே; அருளும் பரிசினில்காரிக் கடவுளில் தெய்வம் இல்லை = அடியவர்களுக்கு அவர்கள் விரும்பியவற்றைத் தந்து உதவும் தன்மையில் வைரவக் கடவுளினும் மேலான தெய்வம் வேறு எதுவும் இல்லை; வட்டூர் ஏயினன் = அப்பெருமான் வட்டுக்கோட்டைப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்டு உள்ளான்; (அவன்) இருளும் உளத்தினர் எய்த ஒண்ணான் = அவன் இருண்ட மனத்தினரால் அடையப் படமாட்டான்; பொருளும் புகழும் தரும் = தூய மனத்துடன் தன்னை வழிபடுவோர்க்குப் பொருட் செல்வத்தையும் கீர்த்தியையும் தந்தருளுவாரர்; புகல்வேறு இல்லை = அவரையன்றி உலகோருக்கு வேறு பற்றுக்கோடு பிறிதொன்றும் இல்லையாகும் எ-று

மாந்தருள்ளீர் காரிக்கடவுளில் தெய்வம் இல்லை என்று இயைக்க. படிற்றொழுக்கம் பூண்டார் இறைவனை அடைதல் இல்லை என்று பெரியோர் கூறுவர். 89

(வட்டூர் நிகர் இல்லாதது)

90 இலையென விண்ணோர் கதறக்
கடுவுண்ட ஈசனெல்லாக்
கலைகளுந் தன்புகழ் பேசருங்
கண்ணுதல் தந்தசெல்வன்
தலைமிசைத் தும்பையுங் கங்கையும்
பாந்தளும் தான்புனைந்தே
நிலையெனக் கோயில் கொள்வட்டூர்ப்
பதிக்கு நிகரெதுவே.

(ப - ரை)

எல்லாக் கலைகளும் தன்புகழ் பேசரும் கண்ணுதல் = அறுபத்து நான்கெனக் கூறப்படும் கலைகள் தமது புகழை எடுத்து இயம்ப அரிய, நெற்றிக் கண்ணரும்; விண்ணோர் (துணை) இலை எனக் கதறக் கடுவுண்ட ஈசன் = தேவா நியர் பாற்கடல் கடைந்த போது நஞ்சம் எழுந்ததாகத் தமக்குப் புகலிடமே இல்லை என்று ஓலமிட்டழ அதனை எடுத்து உண்டவருமாகிய செம்மேனி எம்மான்; தந்த செல்வன் = தந்தருளிய திருக்குமாரர் ஆகிய வைரவமூர்த்தி தலைமிசை = திருமுடியின் கண்ணே; தும்பையும் கங்கையும் பாந்தளும் புனைந்து = தும்பை மாலையையும் கங்காநதி யையும் சர்ப்பத்தினையும் அணிந்து கொண்டு; நிலை என கோயில்கொள் வட்டூர்ப்பதிக்கு = நிலையாக வீற்றிருந்து அருளும் வட்டுக்கோட்டை யூரிற்கு; எது நிகர் = எப்பதி சமான மாகும். சமான மாகாது. (எ-று)

துணை என்னும் சொல் வருவிக்கப்பட்டது. ஈசனும் கண்ணுதலும் ஆகிய கடவுள் என்க. தான் அசை. வட்டுக் கோட்டைப் பதியின் பெருமை கூறிய வாறாம். 90

(நினைப்பவர் அகம் நின்று அருள் பாலிப்பான்)

91 நிகரேதும் இல்லாத நித்தனை
நெக்கு நினைப்பவர்தம்
அகமெதும் நின்றருள் பாலிக்கும்
அண்ணலை அற்புதனைச்
செகமெதும் ஏத்த விளங்கு
திரிசூல பாணியனை
இகமெதும் வேண்டிடின் வட்டூர்புக்
கேத்துங்கள் போமிடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ர ரை)

நிகர் ஏதும் இல்லாத நித்தனை = தமக்கு எப்பொருளும் எவரும் சமானமற்ற நித்திய வஸ்துவாம் வைரவமூர்த்தியை; நினைப்பவர் தம் = தம்மை மனம் நெகிழ்ந்து எண்ணுவார் தங்கள்; அகம் ஏதும் நின்று அருள் பாலிக்கும் அண்ணலை = நெஞ்சங்கள் இடையே நின்று அருள் நல்கும் தலைவரை; அற்புதனை = அதிசயங்கள் பலவற்றை இயற்றி அருளியவரை; செகம் ஏதும் ஏத்த விளங்கும் திரிசூல பாணியனை = அனைத்துலகங்களும் தொழுது வணங்கும் முத்தலைச் சூலத்தைத் திருக்கரத்தில் தாங்கி அருளியவரை; இகம் ஏதும் வேண்டிடின் = இவ்வுலகத்தே யாதானும் ஒன்றினைப் பெற விரும்புவீராயின்; வட்டூர் புக்கு ஏத்துமின் = அன்பருள்ளீர் வட்டூர்க் கோயிலுக்குச் சென்று வழிபடுங்கள்; மிடி போம் = இட்ட சித்திகள் கிட்டுவதுடன் வறுமைத் துன்பமும் விட்டகலும். (எ - று)

சமய குரவர்களின் ஆணை வழிநின்று இறையை வழிபடும் வழி மன நெகிழ்வு அவசியம் என்பதனை ஆசிரியர் பலபாடல்களில் வலியுறுத்தியுள்ளார். 91

[மாந்தரிர் பணிந்து வணங்குமின்]

92 மிடியிடை நொந்துழல் மென்னடை
யார்கள் பழனமெங்கும்
துடியிடை நோவக் களைகளை
வட்டூரில் தொல்பதியில்
முடியிடை வில்லொளிர் காரி
யருளை வழங்குகின்றான்
படியிடை மாந்தரிர் பெற்றே
பணிந்து வணங்குமினே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

படிஇடை மாந்தரீர் = பூமியின் கண் வாழும் மாந்தர்களே; மிடிஇடை நொந்து உழல் மெல்நடையார்கள் = வறுமைவாய்ப்பட்டு வருந்தி அலையும் கடைச்சியர் உள்ளார்; பழனம் எங்கும் = வயல்கள் முழுதும்; துடி இடை நோவ = உடுக்கனைய தமது இடை வருந்த; களைகளை வட்டூர் தொல் பதியில் = பண்ணைகளில் களைப்புல்பறிக்கும் வட்டூராகிய பழம் பதியில்; முடிஇடை வில் ஒளிர் காரி = திருமுடியில் நின்றும் ஒளிப்பிரபை சிந்தும் வைரவப் பெருமான்; அருளை வழங்குகின்றான் = திருவருளை அள்ளி அள்ளித் தருகின்றான்; பெற்று = அதனைப் பெற்று மாந்தி; பணிந்து வணங்குமின் = அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குங்கள் (எ-று)

பழனம் = வயல். துடி இடை உடுக்கைபோலும் நுண்ணிய இடை; உவமைஅணி. களை முன்னது களைப்புல், பின்னது பிடுங்குதல்.

''வழங்குகின்றாய்க்குன் அருளார் அமுதை வாரிக் கொண்டு, விழுங்குகின்றேன்'' திருவாசகம். 92

(வட்டூர! கைதொழுது ஏத்துவன்)

93 வணங்கும் நினைத்தொழும் பாளர்
வரிசை மகிழ்ந்துவந்து
பிணங்கும் பிரமன் அகந்தை
அகன்று பரவிநிற்பன்
அணங்கும் உடன்வரக் கைலை
அடுக்கல் உலாவருவீர்
இணங்கும் அருள்வேண்டி வட்டூர
கைதொழு தேத்துவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ப - ரை]

வட்டூர = வட்டூர்ப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட வைரவ மூர்த்தியே; தொழும்பாளர் வரிசை = நினது அடியார் திருக்கூட்டம்; நினை உவந்து மகிழ்ந்து வணங்கும் = தேவரீரை மிக்க மகிழ்வுடன் வணங்கா நிற்கும்; பிணங்கும் பிரமன் = யானே பிரமம் என்று மாறு பட்ட பிரமதேவன்; அகந்தை அகன்று பரவி நிற்பன் = அகங்காரம் நீங்கிக் கைகூப்பி வணங்கா நிற்பன்; கைலை அடுக்கல் அணங்கும் உடன்வர உலாவருவீர் = தேவரீர், கைலைச்சாரலின் கண்ணே சாமுண்டி தேவியாரும் உடன் வர உலாவந்து கொண்டு நற்பீர்; (யாம்) இணங்கும் அருள் வேண்டி கைதொழுது ஏத்துவம் = குடியடிமை யாளராகிய யாம்; கைகூப்பித் தொழுது பொருத்தமான அருளை வேண்டி வணங்கி நிற்பேம். (எ - று)

மகிழ்ந்துவந்து என்பதனை, உவந்து மகிழ்ந்து என மாறுக, யாம் எனும் சொல்லை வருவித்து ஏத்துவம் என முடிக்க. இணங்கும் பொருந்தும் பொருத்தமான என்றபடி அது வேண்டத்தக்கது என்க. 93

(தோழி கூற்று)

94 தொழுவார் துயர்க்குலம் தீர்க்கும்
வயிரவன் தண்ணளிபோல்
எழுமால் நிலவொளி ஏங்கியே
வட்டூர் இரும்பொழிற்கண்
வழுவாத செந்தமிழ் வாணர்
மிடிமிக வாடிடல்போல்
தழுவாத பூங்கொடி சோரும்
புகலத் தருவதென்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

தொழுவார் வினைகுலம் தீர்க்கும் வயிரவன் தண்ணளி போல் = தன்னைத் தொழும் அடியார்களின் துன்பமாயின வற்றைத் துடைத்து அருளும் வரைவட் பெருமானின் கருணையைப் போன்று; நிலவு ஒளி எழும் = தண்ணிலா வொளி எழும்; வட்டூர் இரும் பொழில் கண் = வட்டுக் கோட்டையில் உள்ள பெரிய சோலையிடத்து; வழுவாத செந்தமிழ் வாணர் = ஒழுக்கம் பிறழாத செந்தமிழ்ப் புல வோர்கள்; மிடிமிக வாடுடல் போல் = வறுமை யானது மிகுத்த வேளையில் புரப்பார் இன்றி வாடுதல் போல்; தழுவாத பூங்கொடி சோரும் = கொழு கொம்பு ஒன்றைத் தழுவாத பூங்கொடியானது. சோரா நிற்கும்; புகலத்தகு வது என்? = யாம் யாது சொல்ல வல்லேம். (எ-று)

கொழு கொம்பனைய தலைவன் வாராமையின்; பூங் கொடி அனைய தலைவி சோருகின்றாள் என்ற வாறாம். இவ்வகத்துறையைப் பாடல். தலைவன் சிறைப் புறத் தனாக நின்ற வேளையில் அவன் விரைவில் தலை வியை மணந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றது. சிறைப்புறம் = வேலிப்பக்கம். 94

(மாந்தர் இன்னா இயற்றித் துன்பத்து உழல்வர்)

95 என்னே புதுமை அறத்தின்
இயல்பை அறிந்துவைத்தும்
மன்னா உலகினில் மன்னிய
மாந்தர் மறுகிமனப்
இன்னா இயற்றி இருமையும்
துன்பந் திளைத்துழல்வார்
நன்னா வலர்புகழ் வட்டூர்
வடுகனை நாடிலரே.

(ப - ரை)

மன்னா உலகினில் மன்னிய மாந்தர் = நிலை நில்லாத இவ்வுலகில் வாழும் மக்களானோர்; அறத்தின் இயல்பை அறிந்து வைத்தும் = தருமம் செய்தால் இருமையும் இன் பெய்தலாம் எனும் அதன் தன்மையை கேட்டுணர்ந்தும்; மனம் மறுகிட = மனமானது பேதலிக்கப் பெற்று; இன்னா இயற்றி = அறத்தின் பாற் படாத வற்றைச் செய்து; இருமையும் துன்பம் திளைத்து = இம்மையினும் மறுமையினும் துன்பத்தையே துய்த்து; உழல்வார் = வறிதே வருந்து கின்றனர்; நல் நாவலர் புகழ் = மெய்ப்புலவோர் போற்றும்; வட்டூர் வடுகனை = வட்டூர்ப் பிராட்டியாம் பதிப் பெருமானை; நாடிலர் = தேடியடைந்து போற்றிப் பணிந்து பாபவிமோசனம் பெறுகின்றாரகள இல்லையே. (எ - று)

பணிந்து இம்மை மறுமை இன்பங்களை அனுபவிக்காமை ஆச்சரியம் என்ற வாறாம். மறுகி மனம் என்பதனை மனம் மறுகி என மாற்றுக. திளைத்தல் = அழுந்துதல், அனுபவித்தல். 95

(தாள் இணை பாடும் பணியாய் அருள்)

96 நாடும் சுவைய கனி தூங்கு
    நீர்மைய மாம்பொழிலில்
கூடும் மதிதவழ் வட்டூர்
    வடுக குவலயத்தே
தேடும் பொருள்நின் தாளிணை
    யென்றே தெளிந்துகொண்டேம்
பாடும் பணிபணி யாவருள்
    நின்னிற் பரமிலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப - ரை)

நாடும் சுவைய கனி = விரும்பப்படும் இனிய சுவையை உடைய பழங்கள்; தூங்கு நீர்மைய = தொங்கும் தன்மையதும்; மதிதவழ் = சந்திரன் முட்டுவதுமாய; மாம்பொழில் = மாஞ்சோலை; கூடும் வட்டூர் வடுக = சேர்ந்துளதாகிய வட்டுக்கோட்டைப் பதியிலே கோயில் கொண்ட வைரவ மூர்த்தியே; குவலயநதே = இப்பூமியில்; நின்னிற்பரம் இல்லை = எம்பெருமானினும் மேலான தெய்வம் இல்லை; தேடும் பொருள் = ஒருவரால் சம்பாதிக்கற் பாலதாம் பொருள்; நின் இணைத்தாள் என்றே = தேவரீரது ஞானமாக விளங்கும் திருவடிகளே என; தெளிந்து கொண்டோம் = நன்கு உணர்ந்து கொண்டோம்; பாடும் பணி பணியா அருள் = திருவடிகளைப் போற்றிப் புகழ்ந்து பாடும் தொழிலையே அடிமையேன் கடைப்பிடிக்கும் தொழிலாக அருளும் சுவாமி (எ-று)

அருணகிரிநாத சுவாமிகளும் "பாடும் பணியே பணியா அருள்வாய்" என்று வேண்டுவர். "நன்னெஞ்சே உனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே உன்னஞ் செய்திரு கண்டாய் உய்வதனை வேண்டுதியேல்" என்பது தேவாரம். 96

(நடுநிலை மாறா நலம் அருள்)

97 இலையென்ற சொல்லினி
 ஏவரிடத்துமில் லாதுநடு
நிலையென்ற பாதை தனினின்று
 மாறா நலமுமருள்
கலையென்ற கோயி லமர்குகன்
 பின்னவ கண்ணுதலே
மலையென்ற திண்புயச் சேவக
 வட்டூர மாற்றமென்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

கலை என்ற கோயில் அமர் குகன் பின்னவ, — அறுபத்து நான்கு என்று கூறப்படும் கலைக்கோயிலுள் வீற்றிருந்தருளும் கந்தவேளின் தம்பியே, கண் நுதலே — நெற்றிக் கண்ணரே!; மலை என்ற திண்புயசேவக —மலை என்று கூறப்படும் வலியதிருப்புயங்களைக் கொண்ட மாவீரரே; வட்டூர — வட்டூராளியே!; இனி; — தங்கள் திருவருள் இருத்தலின் இனிமேல்: ஏவர் இடத்தும் — யாவர் மாட்டும்: இல்லை என்ற சொல் இல்லாது — வறுமையேதுவாகநம்மிடம் ஒன்றும் இல்லை என்று பேசும் பேச்சே இன்றி; நடுநிலை என்ற பாதை தனில் நின்று — நீதி என்ற வழியிலே வழுவாமல் நின்று; மாறா நலமும் அருள் — பிறழாத செம்மையும் தந்தருளும் சுவாமி; மாற்றம் என் — இனிச் சொல்லுவதற்கு என்ன உண்டு. இல்லையாகும். (எ-று)

இல்லை என்பது இலை என நின்றது. குகன் அடியார் மனக்குகையுள் உறைபவன். கலையாகிய கோயிலிலே அமர்வாய் வருவாயென்று சான்றோர் பாடுவர். சேவகன் —வீரன் 97

(வட்டூர் போந்து ஏத்துமின்)

98 என்னே உரைக்கேம் இளம்பிறை
சூடி எழில்பெருக
மின்னே நிகரன்னை மேவி
யிடப்பால் அறம்புரக்கக்
கொன்னே தருக்குநர் துண்ணென
ஞாளியில் ஊர்குமரன்
முன்னே அமர்ந்தனன் வட்டூர்
விரைந்துவந் தேத்துமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

எழில் பெருக இளம்பிறை சூடி = அழகு சிந்த இளம் பிறைச் சந்திரனைச் சடாமுடியில் அணிந்து; மின்னே நிகர் அன்னை = மின்னற் கொடிபோலும் இடையினரான சாமுண்டித் தாயார்; இடம் பால் மேவி = இடது புறத்து அமர்ந்து; அறம் புரக்க = முப்பத்திரண்டு தருமங்களை காக்க; கொன்னே தருக்குநரும் துண்ணென = வறிதே செருக் குற்றுத் திரிகுநரும் அஞ்சி அடங்க; ஞாளியில் ஊர்குமரன் = வேதம் என்னும் நாயின் மீது இவர்ந்து செல்லும் வைரவமூர்த்தி; முன்னே வட்டூர் அமர்ந்த னன் = நினைவுக் கெட்டாத காலத்தின் முன் வட்டுக்கோட் டைப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்டருளினார்; என்னே உரைக்கேம் = என்னதான் யாம் சொல்ல வல் லேம், விரைந்து ஏத்துமின் = உலகீர் மிகவும் விரைந்து வந்து எம் பிரானைப் பணிந்து கும்பிட்டு உய்தி கூடுமின் (எ று)

துண்ணென - அச்சக்குறிப்பு. விரைவுமாம். கொன்னே பயனின்றி. குமரன் என்பது வைரவ மூர்த்தியின் திருப் பெயர்களுள் ஒன்று என முன்னரும் உரைத்தாம். 98

[துன்பம் நீக்குதி]

99 ஏத்தி அமரர்கள் கண்ணுதல்
வித்தக இங்கபயம்
காத்தி யெனக்கடு உண்டுயர்
கண்டம் கறுத்தபிரான்
கூத்தி லுவந்தோன் தருமதலாய்
வட்டூர்க் கொற்றவனே!
தோத்தி ரமேசொலி ஏத்துதும்
நீக்குதி துன்பமதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை)

அமரர்கள் ஏத்தி = தேவர்கள் தொழுது வணங்கி; கண்ணுதல் = நெற்றிக் கண்ணரே;! வித்தக = பேரறிவாளரே;! இங்கு அபயம் = இப்போது யாம் தேவரீருக்கு அடைக்கலம், காத்தி என = எமை எல்லாம் காத்தருளும் சுவாமி என வேண்ட; கடு உண்டு கண்டம் கறுத்த பிரான் = பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு களமானது நீல நிறம் ஆகப்பெற்ற சிவபிரானார்; கூத்தில் உவந்தவன் = நடமியற்றுவதிலே மகிழ்ச்சி கொண்டவர்; தரு மதலாய் = உலகெலாம் உய்யும் வண்ணம் தந்தருளிய தந்தருளிய திருக்குமாரரே; வட்டூர்க் கொற்றவனே = வட்டுக்கோட்டையில் கோயில் கொண்ட மாமன்னரே; தோத்திரமே சொல்லி ஏத்துதும் = புகழ்ப்பாடல்களைப் பாடி நின்று வணங்குகின்றோம்; துன்பம் அது நீக்குதி = எமக்குவதாம் துன்பத்தைப் போக்கியருளும். (எ-று)

அமரர்; மரணம் அற்றோர். கடு = நஞ்சம். அது ஆலகால விடம். தோத்திரம் = புகழ்ப் பாடல் அவை சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் பிறவுமாம். 99

[வட்டூர் வடுக இறைமணியே அருளுக]

100 துன்பம் அகலப் பிணிக்குலம்
தீர்தரத் தூய்மையதாம்
இன்பம் நிலைத்திட ஏழைமை
நீங்கிட எங்கணுமே
அன்பும் மலர அறமும்
நிலைக்க அருள்வடுக
என்பும் கனிய இறைஞ்சுதும்
வட்டூர் இறைமணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர் இறை மணியே = வட்டூர்ப் பிராட்டியம் பதியில் கோயில் கொண்ட தெய்வ மணியே; வடுக = வைரவ சுவாமியே; துன்பம் அகல = துயர்க்குலங்கள் நீங்கவும்; பிணிக்குலம் தீர்தர = நோய் நொடிகள் அகலவும்; தூய்மையதாம் இன்பம் நிலைத்திட = மெய்யின்பமானது எங்கும் நின்று நிலவவும்; ஏழைமை நீங்கிட = அனைத்து மக்களும் வறுமைப் பிணியில் நின்று விடுபடவும்; எங்கணும் அன்பு மலர = யாண்டும் யார் மாட்டும் அன்பு விரியவும்; அறமும் நிலைக்க = தருமமானது நிலை பெற்று நிற்கவும் இறைஞ்சுதும் = இதயசுத்தியுடன் திரிகரணங்களாலும் வேண்டி நிற்கின்றோம்; அருள் = திருவருள் பாலித்தருளும் எந்தையே. (எ-று)

இறைமணி=இறைவனாகிய குருமணியே எனினுமாம். திரிகரணம் = மனம் வாக்குக் காயங்கள், அறம் என்று கூறவே; ஏனைய பொருள் இன்பம் வீடு முதலியனவும் அடங்கும். அந்தாதி ஆதலின் நூலின் தொடக்கத்தும் நிறைவிலும் மணி என்னும் மங்கலச் சொல்லை வைத்தார்.

100

வட்டுக்கோட்டைப் பிராட்டிவளவு
ஞான வைரவ சுவாமி அந்தாதி.
மூலமும் உரையும் முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வட்டுக் கோட்டைப், பிராட்டி வளவு ஞான வைரவ சுவாமி அந்தாதி

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

அதிசயம்	45	ஏந்திழை	49
அருளாற்	38	ஏந்துமிழை	41
அருளும்	89	ஒல்லும்	18
அருளே	50	ஒன்றே	56
அழைமின்	79	கணக்கில்	9
அன்புடன்	16	கணங்கண	65
ஆழ்ந்த	62	கருத்து	12
ஆற்றார்	53	கற்பக	60
ஆற்றும்	58	கிட்டும்	47
இலைமென்	5	காசினி	84
இலையென	90	சார்ந்த	25
இலையென்ற	97	சாற்றுந்	77
இலையொன்று	43	சூட்டு	71
இவனெம்	57	செம்பொருள்	69
இனியே	24	செம்பொருளை	39
இன்னே	33	செம்மலை	14
உண்டே	8	செய்யனை	30
உவந்தனம்	37	சேயே	73
உவந்துன்	31	சேர்ந்தார்க்கு	4
உளமே	17	சேவகம்	59
என்னே புதுமை	95	தரணியர்	7
என்னேயதி	81	திருவுறும்	36
என்னே யுரை	98	திருமலி —	காப்பு
என்னேர்வினை	34	துன்பம்	100
ஏத்தி	99	துன்பேயகற்ற	2
ஏத்தும்	70	தெரிந்திலன்	26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவோர்	94	புங்கவன்	35
நகையது	21	பொருளாக	80
நண்ணும்ன்	40	போருளாகி	64
நயந்தார்	20	போது	48
நயமேதும்	72	போற்றி	61
நரகில்	82	மணங்கமழ்	66
நாடும்	96	மணிகொண்ட	1
நாளுன	46	மணிமாலை	78
நாவிலம்	32	மணியின்	51
நிகரேதும்	91	மிடியிடை	92
நிதியே பெற	22	மின்னேர்	15
நிதியே மது	86	மெய்ப்பொருள்	75
நினையும்	85	வடிவே	52
நெஞ்சம்	6	வட்டுர	28
நெஞ்சே	3	வணங்கிய	63
படையவன்	67	வணங்கும்	93
பண்ணவன்	42	வயிரவ நின்	54
பண்ணிய	74	வயிரவ நாதன்	13
பரமாய	44	வாழ்த்துமின்	23
பவமே	29	வாழ்முதல்	55
பாதம்	19	வாழ்வருள்	10
பாரமென்றேத்தி	83	வியப்பல	27
பாரமென் றாக்கை	88	வினையின்	68
பாலக	87	வினையே	76
புகுமே	11		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவு செய்து பிழைகளைத் திருத்திக் கொண்டு நூலை வாசியுங்கள்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	சரி
iii	18	தெய்வமாகிய	தெய்வமாகி
	30	கருவூலகமாக	கருவூலமாக
iv	20	மதத்தேடு	மதத்தோடு
9	21	மனொன்று	மானொன்று
24	11	அடிமை இறைவன்	இறைவன்
31	26	புகழ்	புகல்
51	15	என	என்
	20		அனிச்சமலர் மீது
54	19	நீர்மலரின்—இனிய	நீர்மலரின் இனிய
63	11	தூய்மையானற்	தூய்மையான
67	13	தலைத்தாழ்த்தி	தலைதாழ்த்தி
71	27	விணெகெட	வினைகெட
75	18	அணிப்பான்	அளிப்பான்
76	17	செதுகமதில்	செகமதில்
84	28	அகத்தினைப் பாலதாம்	அகத்திணைப் பாலதாம்
86	18	நற்கீர	நக்கீர
87	6	கற்சிமுகி	கற்கிமுகி
90	7	விட்டுகணு	விட்டுணு
	19	வெருனினும்	வெருளினும்
98	16	மற்றுக	மாற்றுக
99	16	அகத்துறையைப்	அகத்துறைப்
104	10	தந்தருளியதந்தருளிய	தந்தருளிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org